க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2016

மதிப்பீட்டு அறிக்கை

21 - பொருளியல்

Curriculum
Assessment
&
Evaluation
Teaching
Learning
N E T S

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

க.பொ.த (உ.தர)ப் பரீட்சை - 2016

மதிப்பீட்டு அறிக்கை

21 - பொருளியல்

Curriculum
Assessment
&
Evaluation
Teaching
Learning
N E T S

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

முழுப் பதிப்புரிமையுடையது.

பொருளியல்

மதிப்பீட்டு அறிக்கை - க.பொ.த (உ.தர)ப் பரீட்சை - 2016

நிதி அனுசரணை

எதிர்கால அறிவை மையமாகக் கொண்டு பாடசாலை
கல்விமுறையை மாற்றியமைக்கும் செயற்றிட்டம்
(TSEP-WB)

அறிமுகம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரப் பரீட்சையானது இலங்கையின் உயர்மட்ட இரண்டாம் நிலைக் கல்வியின் இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சையாகும். உயர்மட்ட இரண்டாம் நிலைக் கல்வியின் இறுதியில் மாணவர்களின் அடைவு மட்டத்தைச் சான்றுப்படுத்தல் இப் பரீட்சையின் முக்கிய நோக்காக இருந்த போதும் தேசிய பல்கலைக்கழகங்கள், வேறு கல்வி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்கள், தேசிய கல்வியியல் கல்லூரிகள் என்பவற்றுக்குத் தகைமையானோரைத் தெரிவு செய்தலும் இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இடம்பெறுவதால் அடைவுப் பரீட்சையாகவும் தேர்வுப் பரீட்சையாகவும் க.பொ.த (உ.தர)ப் பரீட்சை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தன்மையைப் பெறுகிறது. மேலும் மூன்றாம் நிலையில் தொழிலில் பிரவேசிப்பதற்கான தகைமையை சான்றுப்படுத்தும் பரீட்சையாகவும் இது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இப்போது இப்பரீட்சைக்காக 2016 ஆம் ஆண்டில் 211865 பாடசாலைப் பரீட்சார்த்திகளும் 46328 வரையிலான தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றியிருந்தனர்.

இப்பரீட்சையில் உயர் அடைவு மட்டத்தைப் பெறுவதற்காக மாணவர்களும் அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதற்காக ஆசிரியர்களும் பெற்றோரும் பெரிதும் முயற்சி செய்கின்றனர். இந்த மதிப்பீட்டு அறிக்கையை அவர்களின் அந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு உதவும் பொருட்டே இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் தயாரித்துள்ளது. இந்த மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் பரீட்சார்த்திகள், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரியர் ஆலோசகர்கள், பாடப் பொறுப்புக் கல்விப் பணிப்பாளர்கள் பெற்றோர் மற்றும் கல்வி ஆய்வாளர்கள் அனைவருக்கும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. எனவே இவ்வறிக்கை பெரும்பாலானோரின் கவனத்திற்குக் கொண்டுவருவது மிகவும் பொருத்தமானதாகும்.

இந்த மதிப்பீட்டு அறிக்கை I, II, III என மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.

க.பொ.த (உ.தர) பொருளியல் பாடத்தின் குறிக்கோள் பாட அடைவு பற்றிய தகவல்கள் இந்த அறிக்கையின் பகுதி I இல் அடங்கியுள்ளது. இப்பகுதியில் பாடத்திற்கு தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை, அவர்கள் தரங்களைப் பெற்றுள்ள விதம், மாவட்ட மட்டத்தில் பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்களைப் பெற்றுள்ள விதம் வகுப்பாயிடைக்கேற்ப புள்ளிகளின் பரம்பல் ஆகிய பாட அடைவு பற்றிய புள்ளிவிபரத் தகவல்களும் பொருளியல் பாடத்தின் வினாப்பத்திரம் I, II என்பவற்றில் வினாக்கள் தெரிவு செய்யப்பட்ட விதம், அவ்வினாக்களுக்கும் அவ்வினாக்களின் ஒவ்வொரு பகுதிகளுக்கும் புள்ளிகள் பெற்றுள்ள விதம் என்பன பற்றி விரிவாகக் குறிப்பிடும் பாட அடைவு பற்றிய பகுப்பாய்வும் உள்ளடக்கப்பட்டுள்ளன. க.பொ.த (உ.தர)ம் - 2016 பரீட்சையில் பொருளியல் பாடத்தின் வினாப்பத்திரம் I, II என்பவற்றுக்கான வினாக்கள் அவ்வினாக்களுக்கு பரீட்சார்த்திகள் விடைகள் அளித்திருந்தமை பற்றிய தகவல்கள் இந்த அறிக்கையின் பகுதி II இல் அடங்கியுள்ளன. அதில் வினாப்பத்திரம் I, II என்பவற்றின் வினாக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடைகள் அளித்தமை பற்றிய அவதானிப்புக்களும், முடிவுகள், பாட அடைவை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு அபிவிருத்திக் கிளை மூலம் விடைத்தாள் மதிப்பீட்டில் ஈடுபட்ட பிரதம பரீட்சகர், மேலதிக பிரதம பரீட்சகர், உதவிப் பரீட்சகர்கள் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட தகவல்கள், அவதானிப்புகள், கருத்துகள், ஆலோசனைகள், மரபு ரீதியான சோதனைக் கோட்பாடு (Classical testing theory) மற்றும் உருப்படித் துலங்கள் கோட்பாடு (Item response theory) என்பவற்றைப் பயன்படுத்தி பரீட்சார்த்திகளின் துலங்கல்களைப் பகுப்பாய்வு செய்தலினூடாகப் பெறப்பட்ட தகவல்கள் என்பன இந்த மதிப்பீட்டு அறிக்கையை தயாரிப்பதற்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்டுள்ளன.

வினாப்பத்திரத்திலுள்ள ஒவ்வொரு வினாக்களுக்கும் விடையளிக்கும்போது பரீட்சார்த்திகள் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் கற்றல் - கற்பித்தல் பணிகள் பற்றிய கருத்துகள், ஆலோசனைகள் என்பனவும் இந்த அறிக்கையில் பகுதி III இல் அடங்கியுள்ளன. பல்வேறு தேர்ச்சிகள் மற்றும் அத்தேர்ச்சி மட்டங்களை அடைவதற்கான கற்றல் - கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைக்கவேண்டிய விதம் பற்றியும் இந்த அறிக்கையானது பெரிதும் துணை புரியும் என நம்புகின்றேன்.

எதிர்காலத்தில் தயாரிக்கப்படும் மதிப்பீட்டு அறிக்கைகளின் பண்புத்தரத்தை மேம்படுத்தக் கூடிய பயன்தரும் கருத்துகள், ஆலோசனைகள் என்பவற்றை எங்களுக்குச் சமர்ப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்கிய பிரதம பரீட்சகர், மேலதிக பிரதம பரீட்சகர், உதவிப் பரீட்சகர்கள், ஊக்கத்துடனும் நேரடியாகவும் பங்களிப்பு வழங்கிய தயாரிப்பு குழு உறுப்பினர்கள், பொறுப்புடன் கடமையாற்றிய இலங்கைப் பரீட்சைத் திணைக்கள அலுவலர்கள் பணிக்குழுவினர் ஆகியோருக்கும் இத்தொகுப்புக்கான நிதி அனுசரணை வழங்கி எதிர்கால அறிவை மையமாகக் கொண்டு பாடசாலைத் தொகுதியினை மீளமைக்கும் செயற்றிட்டத்துக்கும் (TSEP - WB) எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பீ. சனத் பூஜித
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

2017 டிசம்பர் 01

ஆய்வு அபிவிருத்திக் கிளை,
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்ல.

ஆலோசனை	:	**பீ. சனத் பூஜித** பரீட்சை ஆணையாளர் நாயகம்
ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும்	:	**கயாத்திரி அபேகுணசேகர** பரீட்சை ஆணையாளர் (ஆய்வு / அபிவிருத்தி மற்றும் மதிப்பீடு)
இணைப்பு	:	**எல்.ஜீ.எஸ். சமரகோன்** உதவிப் பரீட்சை ஆணையாளர்
தொகுப்பு	:	**சிரேஷ்ட கலாநிதி டெனி அதபத்து** பொருளியல் கற்கைத்துறை ருகுணு பல்கலைக்கழகம் **கலாநிதி வசந்த அதுகோரல** பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் கற்கைத்துறை பேராதனைப் பல்கலைக்கழகம்
ஆக்கக் குழு	:	**டபிள்யு. லயனல் வீரசிங்க** ஆசிரியர் சேவை கொ/ விசாகா வித்தியாலயம் கொழும்பு - 05 **டீ. ஜீ. சுகத்** ஆசிரியர் சேவை மாற/ புனித தோமஸ் மகளிர் வித்தியாலயம் மாத்தறை **எம்.ஜீ. தமரா ரீ காரியவசம்** ஆசிரியர் சேவை கா/ சங்கமித்தா மகளிர் கல்லூரி **ரம்யா குணசேகர** ஆசிரியர் சேவை விசாகா வித்தியாலயம் கொழும்பு 03 **எஸ்.என்.பீ.எம்.எஸ். ரஞ்சனி** ஆசிரியர் சேவை களு/ மிரிஸ்வத்த தேசிய கல்லூரி **கே.என். நிஷாந்த** ஆசிரியர் சேவை இர/அம்/ ஜனாதிபதி வித்தியாலயம்
மொழிபெயர்ப்பு	:	**யூ.எல்.எம். மின்னதுல் ஹைறா** அதிபர் சேவை (ஓய்வு நிலை)
கணினிப் பக்க வடிவமைப்பு	:	**காஞ்சனா சுப்ரமணியம்** கணினித் தரவுப் பதிவாளர்
முகப்பு அட்டை வடிவமைப்பு	:	**வை.எஸ். அனுராதி** அபிவிருத்தி உத்தியோகத்தர்

உள்ளடக்கம்

பக்க எண்

பகுதி I

1. பாடக் குறிக்கோள்களும் பாட அடைவு தொடர்பான தகவல்களும்

1.1	பாடக் குறிக்கோள்கள்	1
1.2	பாட அடைவு தொடர்பான தகவல்கள்	2
1.2.1	இப்பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை	2
1.2.2	பரீட்சார்த்திகளால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம்	2
1.2.3	மாவட்ட அடிப்படையில் முதற் தடவையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகளால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம்	3
1.2.4	வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்	4
1.3	பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு	
1.3.1	வினாப்பத்திரம் I இன் அடைவு	5
1.3.2	வினாப்பத்திரம் II இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம்	6
1.3.3	வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்	6
1.3.4	வினாப்பத்திரம் II இன் அடைவு (அ) பகுதி	7
1.3.4	வினாப்பத்திரம் II இன் அடைவு (ஆ) பகுதி	8

பகுதி II

2. **வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்**

2.1	**வினாப்பத்திரம் I உம் விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்**	9
2.1.1	வினாப்பத்திரம் I இன் கட்டமைப்பு	9
2.1.2	வினாப்பத்திரம் I	10
2.1.3	வினாப்பத்திரம் I இற்கான புள்ளி வழங்கும் திட்டம்	19
2.1.4	வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்டுள்ள விதம் பற்றிய அவதானிப்புகள்	20
2.1.5	பல்தேர்வு வினாக்கள் தொடர்பாக விடைத்தெரிவையும் தெரிவுசெய்த மாணவர்களின் எண்ணிக்கையையும் சதவீதத்தில் காட்டுதல்.	21
2.1.6	வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய முழுமையான அவதானிப்புக்கள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள்.	22
2.2	**வினாப்பத்திரம் II உம் விடையளிக்கப்பட்டமை தொடர்பான விவரங்களும்**	
2.2.1	வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு	26
2.2.2	வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள்	27
2.2.3	வினாப்பத்திரம் II இற்கு விடையளித்தல் தொடர்பான முழு அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள்	73

பகுதி III

3. **விடையளிக்கும்போது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்**

3.1	விடையளிக்கும்போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள்	75
3.2	கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும்	79

பகுதி I

1 பாடக் குறிக்கோள்களும் பாட அடைவு தொடர்பான தகவல்களும்

1.1 பாடக் குறிக்கோள்கள்

★ சமூகம் ஒன்றின் அடிப்படை பொருளாதார பிரச்சினைகளை விஞ்ஞான ரீதியாக பகுப்பாய்வு செய்தல் மற்றும் அவ்வடிப்படைப் பொருளாதார பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்காக பயன்படுத்தக்கூடிய மாற்று வழிகள் தொடர்பாக தெளிவான விளக்கமளித்தல்.

★ பொருளாதார கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளைப் பயன்படுத்துவதன் மூலம், நடைமுறைப் பொருளாதார பிரச்சினைகளையும் பிற்போக்கான நிலைமைகளையும் பகுப்பாய்வு செய்வதற்குத் தேவையான திறன்களை வழங்கல்.

★ பேரினப் பொருளாதார மாறிகள் மற்றும் அவற்றுக்கிடையே நிலவும் இடைத் தொடர்புகளை விளங்கிக் கொள்ளச் செய்தல்.

★ சந்தையொன்றில் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் தர்க்க ரீதியாக நடந்து கொள்ளும் முறைகளை உருவாக்குதல்.

★ விஞ்ஞான ரீதியாக பொருளாதாரத்தை எண்ணுவதற்கு தேவையான தர்க்க ரீதியான சிந்தனைகளை உருவாக்குதல்.

★ பல்வேறு பொருளியல் எண்ணக்கருக்கள் தொடர்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக்கணப்படுத்திக் கற்பதற்கான சந்தர்ப்பம் வழங்கல்.

★ சந்தை முறையொன்றில் பேரினப்பொருளியல் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசாங்கம் தலையீடு செய்கின்ற முறைமை தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதில் ஈடுபடுத்தல்.

★ நடைமுறையிலுள்ள பொருளியல் கொள்கைகளை விமர்சன ரீதியில் விளக்கும் ஆற்றலை வழங்கல்.

★ பொருளியல் அபிவிருத்தியில் பல்வகைமையை ஒப்பீட்டு ரீதியில் ஆராய்வதற்குத் தேவையான திறன்களை வழங்கல்.

★ பொருளியல் பாடத்தைப் பகுப்பாய்வு ரீதியில் விளக்குவதற்குத் தேவையான அடிப்படைத் தேர்ச்சிகளை வழங்கல்.

★ சர்வதேச வர்த்தகத்தில், நிதியின் முக்கியத்துவம் மற்றும் பூகோளமயமாதலுக்கிடையில் உள்ள தொடர்பைக் காட்டுதல்.

★ இலங்கைப் பொருளாதாரத்தின் செயலாற்றுகை தொடர்பாக விமர்சன ரீதியில் நோக்குவதற்கான திறன்களை வளர்த்தல்.

★ சமூகத்தின் நல் இருத்தல்களைச் (Social well being) செயற்படுத்துவதற்குத் தேவையான அடிப்படையினை வழங்குதல்.

★ உயர் கல்விக்குப் பிரவேசிப்பதற்குப் பொருத்தமான அடிப்படையை வழங்கல்.

1.2 பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்

1.2.1 இப்பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

மொழிமூலம்	பாடசாலை	தனிப்பட்ட	மொத்தம்
சிங்களம்	48613	5536	54149
தமிழ்	8325	1312	9637
ஆங்கிலம்	2068	836	2904
மொத்தம்	59006	7684	66690

அட்டவணை 1

1.2.2 பரீட்சார்த்திகளினால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம்

தரம்	பாடசாலைப் பரீட்சார்த்திகள்		தனிப்பட்ட பரீட்சார்த்திகள்		மொத்தம்	சதவீதம்
	எண்ணிக்கை	சதவீதம்	எண்ணிக்கை	சதவீதம்		
A	7188	12.18	588	7.65	7776	11.66
B	8454	14.33	806	10.49	9260	13.89
C	14762	25.02	1392	18.12	16154	24.22
S	15705	26.62	2030	26.42	17735	26.59
F	12897	21.86	2868	37.32	15765	23.64
மொத்தம்	**59006**	**88.48**	**7684**	**11.52**	**66690**	**100.00**

அட்டவணை 2

1.2.3 மாவட்ட அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகளால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம்

மாவட்டம்	தோற்றியோரின் எண்ணிக்கை	அதி சிறந்த சித்தி (A) பெற்றோர்		விசேட திறமைச் சித்தி (B) பெற்றோர்		திறமைச் சித்தி (C) பெற்றோர்		சாதாரண சித்தி (S) பெற்றோர்		சித்தி பெற்றோர் (A+B+C+S)		சித்தி அடையாதோர் (F)	
		எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%
1. கொழும்பு	9221	1453	15.76	1300	14.10	2237	24.26	2400	26.03	7390	80.14	1831	19.86
2. கம்பஹா	5364	617	11.50	642	11.97	1292	24.09	1428	26.62	3979	74.18	1385	25.82
3. களுத்துறை	2718	282	10.38	397	14.61	690	25.39	685	25.20	2054	75.57	664	24.43
4. கண்டி	3348	353	10.54	404	12.07	791	23.63	874	26.11	2422	72.34	926	27.66
5. மாத்தளை	769	75	9.75	88	11.44	205	26.66	223	29.00	591	76.85	178	23.15
6. நுவரெலியா	1214	137	11.29	175	14.42	304	25.04	310	25.54	926	76.28	288	23.72
7. காலி	2392	312	13.04	315	13.17	548	22.91	623	26.05	1798	75.17	594	24.83
8. மாத்தறை	1428	138	9.66	153	10.71	391	27.38	387	27.10	1069	74.86	359	25.14
9. அம்பாந்தோட்டை	1017	72	7.08	103	10.13	214	21.04	308	30.29	697	68.53	320	31.47
10. யாழ்ப்பாணம்	927	126	13.59	133	14.35	257	27.72	257	27.72	773	83.39	154	16.61
11. கிளிநொச்சி	169	16	9.47	21	12.43	48	28.40	52	30.77	137	81.07	32	18.93
12. மன்னார்	200	14	7.00	24	12.00	66	33.00	55	27.50	159	79.50	41	20.50
13. வவுனியா	353	41	11.61	63	17.85	110	31.16	84	23.80	298	84.42	55	15.58
14. முல்லைத்தீவு	147	17	11.56	23	15.65	34	23.13	46	31.29	120	81.63	27	18.37
15. மட்டக்களப்பு	676	91	13.46	125	18.49	169	25.00	173	25.59	558	82.54	118	17.46
16. அம்பாறை	984	85	8.64	125	12.70	238	24.19	305	31.00	753	76.52	231	23.48
17. திருகோணமலை	663	78	11.76	95	14.33	135	20.36	198	29.86	506	76.32	157	23.68
18. குருநாகல்	2747	272	9.90	398	14.49	675	24.57	721	26.25	2066	75.21	681	24.79
19. புத்தளம்	1445	155	10.73	184	12.73	352	24.36	417	28.86	1108	76.68	337	23.32
20. அனுராதபுரம்	1448	133	9.19	159	10.98	374	25.83	404	27.90	1070	73.90	378	26.10
21. பொலன்னறுவை	651	56	8.60	80	12.29	158	24.27	175	26.88	469	72.04	182	27.96
22. பதுளை	1588	96	6.05	141	8.88	375	23.61	519	32.68	1131	71.22	457	28.78
23. மொனராகலை	736	88	11.96	98	13.32	187	25.41	192	26.09	565	76.77	171	23.23
24. இரத்தினபுரி	1970	245	12.44	274	13.91	518	26.29	489	24.82	1526	77.46	444	22.54
25. கேகாலை	1469	126	8.58	163	11.10	327	22.26	442	30.09	1058	72.02	411	27.98
மொத்தம்	**43644**	**5078**	**11.64**	**5683**	**13.02**	**10695**	**24.51**	**11767**	**26.96**	**33223**	**76.12**	**10421**	**23.88**

அட்டவணை 3

1.2.4 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்

வகுப்பாயிடை	மீடிறன்	மீடிறன் சதவீதம்	திரள் மீடிறன்	திரள் மீடிறன் சதவீதம்
91 - 100	160	0.24	66690	100.00
81 - 90	2482	3.72	66530	99.76
71 - 80	7274	10.91	64048	96.04
61 - 70	10122	15.18	56774	85.13
51 - 60	11738	17.60	46652	69.95
41 - 50	12032	18.04	34914	52.35
31 - 40	10654	15.98	22882	34.31
21 - 30	7831	11.74	12228	18.34
11 - 20	4111	6.16	4397	6.59
01 - 10	283	0.42	286	0.43
00 - 00	3	0.00	3	0.00

அட்டவணை 5

மேலே தரப்பட்டுள்ள அட்டவணையின்படி அப்பாடத்தில் 31 - 40 இற்கு இடையில் புள்ளிகள் பெற்றுக்கொண்ட பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 10654 என்பதுடன் அது மொத்த பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையில் 15.98% ஆகும். 40 புள்ளிகள் அதற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 22882 ஆகும். அது மொத்தப் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையில் 34.31% ஆகும்.

1.3 பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு

1.3.1 வினாத்தாள் I இன் அடைவு



வரைபு 1 (RD/16/05/AL) படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.)

மேலே கொடுக்கப்பட்ட வரைபின் அடிப்படையில் 1 ஆம் வினாவுக்கே கூடுதலான எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் சரியான விடையளித்துள்ளனர். அதற்கு அவர்கள் காட்டியுள்ள இலகுதன்மை 85% ஆகும். அதேபோல் பரீட்சார்த்திகளில் குறைந்த அளவு சரியான விடையளித்துள்ள வினா 17 ஆகும். அதன் இலகுதன்மை 16% ஆகும்.

1.3.2 வினாத்தாள் II இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம்



இவ்வரைபின்படி 'அ' பகுதியில் 2 வது வினா பெரும்பாலான பரீட்சார்த்திகளினால் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அது 97.89% ஆகும். 'ஆ' பகுதியில் 7 ஆம் வினா பெரும்பாலான பரீட்சார்த்திகளினால் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் அது 89.49% ஆகும்.

வரைபு 2 - (RD/16/02/AL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

1.3.3 வினாத்தாள் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்



இங்கு I ஆம் வினாவிற்கு ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகள் 20 ஆகும். வரைபின்படி அப்புள்ளிகளில் 76%-100% ஆயிடையில் அதாவது 16 - 20 வரையான புள்ளிகளின் சதவீதம் 14% ஆகும். அதேபோல் ஒதுக்கப்பட்ட 20 புள்ளிகளும் 0%-25% ஆயிடையில் அதாவது 0 - 5 புள்ளிகள் வரை 18% பெற்றுள்ளனர்.

வரைபு 3 - (RD/16/02/AL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

1.3.4 வினாத்தாள் II இன் அடைவு



வரைபு 4.1 (RD/16/04/AL படிவத்திலிருந்து பெற்ற தகவல்களின் உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.)

இவ்வரைபின்படி 01 ஆம் (1) பகுதியின் இலகுதன்மை 79.% ஆகக் காணப்படுவதுடன், 5 ஆம் வினாவின் III ஆம் பகுதியின் (ஈ) உபபிரிவின் இலகுதன்மை 42% ஆகும்.



வரைபு 4 (RD/16/04/AL) படிவத்திலிருந்து பெற்ற தகவல்களின் உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.)

பகுதி II

2 வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்

2.1 வினாத்தாள் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

2.1.1 வினாத்தாள் I இன் கட்டமைப்பு

* நேரம் இரண்டு மணித்தியாலங்கள்.
* ஐந்து தெரிவுகளைக் கொண்ட பல்தேர்வு வினாக்கள் 50. எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
* ஒரு வினாவுக்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள்.

2.1.2 வினாத்தாள் I

1. பொருளியலில் 'அருமை' என்ற எண்ணக்கருவினால் குறிப்பிடப்படுவது,
(1) தம்மிடமுள்ள அனைத்து வளங்களையும் சமூகம் வினைத்திறனாகப் பயன்படுத்தாத ஒரு நிலையினையாகும்.
(2) கிடைக்கப்பெறும் வளங்களைக் கொண்டு மக்களின் விருப்பங்களை ஒருபோதும் பூர்த்திசெய்ய இயலாத நிலையினையாகும்.
(3) ஒவ்வொரு சமூகத்தினதும் சில அங்கத்தவர்கள் வறுமையில் வாடும் நிலையினையாகும்.
(4) சமூகரீதியில் விரும்பப்படும் பொருள்கள், சேவைகளை உற்பத்திசெய்வதற்குப் பதிலாக முக்கியத்துவம் அற்ற பொருள்கள், சேவைகளை தேவைக்கதிமாக உற்பத்தி செய்யும் நிலையினையாகும்.
(5) உற்பத்தி வினைத்திறனாகவுள்ள போதிலும் பங்கீடு வினைத்திறனற்ற நிலையினையாகும். (……)

2. ஆரம்பப் புள்ளியை நோக்கி குழிவாக வரையப்படும் உற்பத்தி இயல்தகவு வளையிகளால் வெளிப்படுத்தப்படுவது,
(1) ஏதேனுமொரு பொருளை அதிகளவில் உற்பத்தி செய்கையில் அதன் அமையச் செலவு குறைவடைதலாகும்.
(2) பொருளாதாரத்தில் வளங்களின் அருமைத்தன்மை நிலவுதலாகும்.
(3) ஏதேனுமொரு பொருளை அதிகளவில் உற்பத்தி செய்கையில் அதன் அமையச் செலவு நிலையாக உள்ளமையாகும்.
(4) பொருளாதாரத்தின் வளங்கள் நியாயமற்ற முறையில் பங்கீடு செய்யப்பட்டிருத்தலாகும்.
(5) ஏதேனுமொரு பொருளை அதிகளவில் உற்பத்தி செய்கையில் அதன் அமையச் செலவு அதிகரித்துச் செல்கின்றமையாகும். (……)

3. பின்வருவனவற்றுள் தாராள சந்தைப் பொருளாதாரம் தொடர்பில் **பிழையானது** எது ?
(1) விலை, பொருளாதாரத்திலுள்ள போட்டித்தன்மை கொண்ட துறைகள் மத்தியில் வளங்களைச் சமமாக ஒதுக்கீடு செய்கின்றது.
(2) விலை, பொருள்கள் சேவைகளின் சார்பளவு அருமைத்தன்மைகளையும் அவற்றின் உற்பத்திச் செலவுகளையும் வெளிப்படுத்துகின்றது.
(3) சார்பு விலை மாற்றங்கள் உற்பத்தி நிறுவனங்களின் இலாபங்களைத் தீர்மானிக்கும் ஒரு காரணியாகவுள்ளதுடன் அதன் காரணமாக அவை உற்பத்தியை ஊக்குவிப்பதில் அல்லது அதைரியப்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும்.
(4) விலை, பொருள்கள் சேவைகளின் பொருட்டு நுகர்வோர் செலுத்தத் தயாராகவுள்ள விருப்பத்தின் அளவீடாகும்.
(5) விலை, ஒரு பண்டத்தைப் பெற்றுக்கொள்ள நுகர்வோர் எவ்வளவு விட்டுக்கொடுக்க வேண்டும் என்பதற்கான சமிக்ஞையை வழங்குகிறது. (……)

4. போட்டிச் சந்தையொன்றில் வெளிவாரிகளற்ற நிலையில் வள ஒதுக்கீட்டு வினைத்திறன் நிலவுவது, எல்லாச் சந்தைகளிலும் விலை
(1) மொத்தச் செலவுக்குச் சமப்படும் போதாகும்.
(2) எல்லை வருவாய்க்குச் சமப்படும் போதாகும்.
(3) எல்லைச் செலவுக்குச் சமப்படும் போதாகும்.
(4) சராசரி மாறுஞ்செலவுக்குச் சமப்படும் போதாகும்.
(5) எல்லை உற்பத்தியின் பெறுமதிக்குச் சமப்படும் போதாகும். (……)

5. 'மனித மூலதனம்' என்பதனால் குறிப்பிடப்படுவது,
(1) மூலதனக் கருவிகளை உற்பத்திசெய்யப் பயன்படும் ஊழிய வளமாகும்.
(2) கட்டடங்களும் பொறிகளுமாகும்.
(3) தொழிற்படையின் திறன்கள் மற்றும் அறிவுத் திரட்சியாகும்.
(4) முயற்சியாண்மையும் இடர்களை ஏற்கும் இயலுமையுமாகும்.
(5) சுகாதார மற்றும் கல்வித் துறைகளில் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்படையாகும். (……)

6. சாத்திய வெளியீடு என்பது,
(1) கடந்த பத்தாண்டுக் காலப்பகுதியில் பொருளாதாரமொன்று உண்மையில் பெற்றுக்கொண்ட உயர்ந்தபட்ச மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.
(2) முழுமையான தொழிற்படையும் வணிகப் பொருளுற்பத்தித் துறையில் தொழில்புரியும் காலப்பகுதிகளில் எய்தும் உற்பத்தியாகும்.
(3) பொருளாதாரமானது சகல வளங்களையும் வினைத்திறன் மிக்க விதத்தில் பயன்படுத்துவதன் மூலம் ஒருபோதும் எய்த முடியாத ஓர் இலக்காகும்.
(4) பொருளாதாரத்தின் வளங்களை தொழிலில் பூரணமாக, உத்தம மட்டத்தில் ஈடுபடுத்தும்போது உற்பத்தி செய்யத்தக்க மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.
(5) பொருளாதாரத்தின் வளங்களை தொழிலில் பூரணமாக, உச்ச மட்டத்தில் ஈடுபடுத்தும்போது உற்பத்தி செய்யத்தக்க மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும். (……)

7. X என்பது போட்டிச் சந்தையொன்றில் விற்பனை செய்யப்படும் ஓர் இழிவுப் பொருளாகும். X இற்கான சந்தையில் ஏனைய காரணிகள் மாறாத நிலையில் கொள்வனவாளரின் வருமானத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சியின் காரணமாக X பொருளின் கேள்வி, சமநிலை விலை, சமநிலைத் தொகை என்பவற்றில் ஏற்படும் தாக்கம் யாது ?

	கேள்வி	விலை	தொகை
(1)	குறைவடையும்.	குறைவடையும்.	குறைவடையும்.
(2)	அதிகரிக்கும்.	அதிகரிக்கும்.	அதிகரிக்கும்.
(3)	குறைவடையும்.	அதிகரிக்கும்.	குறைவடையும்.
(4)	அதிகரிக்கும்.	குறைவடையும்.	குறைவடையும்.
(5)	குறைவடையும்.	அதிகரிக்கும்.	அதிகரிக்கும்.

(……)

8. அத்தியாவசியப் பொருளொன்றின் மீது சிறப்பு வரி (அலகு வரி) விதிக்கப்படுவதுடன் அப்பொருளின் சந்தைக் கேள்வித் தொகையையும் வரிவிதிப்பின் முன்னரும் பின்னருமான சந்தை நிரம்பல் தொகையையும் பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

விலை (ரூ.)	கேள்வித் தொகை	வரி விதிப்பின் முன் நிரம்பல் தொகை	வரி விதிப்பின் பின் நிரம்பல் தொகை
12	50	20	0
13	50	30	10
14	50	40	20
15	50	50	30
16	50	60	40

பொருளின் ஓர் அலகின் மீது விதிக்கப்பட்ட வரியின் அளவு யாது ?

(1) ரூபா 2 (2) ரூபா 3 (3) ரூபா 4 (4) ரூபா 5 (5) ரூபா 6 (……)

9. குமிழ்முனைப் பேனாவிற்கான விலைக் கேள்வி நெகிழ்ச்சி –3.0 ஆகும். பேனாவின் விலை ரூ. 25 ஆகும்போது கேள்வித் தொகை 300 பேனைகளாகும். விலையானது ரூ. 20 ஆக வீழ்ச்சியடையுமாயின், கேள்வித் தொகை யாது ?

(1) 900 (2) 630 (3) 560 (4) 480 (5) 180 (……)

10. யாதேனும் ஒரு பொருள் அல்லது சேவையின் சந்தை நிரம்பல் வளையியானது இடப்புறம் நோக்கி நகர்வது,

(1) தொழினுட்பம் முன்னேற்றமடையும் போதாகும்.
(2) உள்ளீடுகளின் விலைகள் வீழ்ச்சியடையும் போதாகும்.
(3) உள்ளீடுகளின் விலைகள் அதிகரிக்கும் போதாகும்.
(4) தொழினுட்ப முன்னேற்றம் ஏற்படும்போதும் உள்ளீடுகளின் விலை வீழ்ச்சியடையும் போதுமாகும்.
(5) தொழிலில் அதிக எண்ணிக்கையில் நிரம்பலாளர்கள் பிரவேசிக்கும் போதாகும். (……)

11. X பொருளின் நிரம்பல் வளையியானது பின்வரும் சமன்பாட்டினால் காட்டப்பட்டுள்ளது.

$$Q_X = 6\,P_X$$

இங்கு Q_X என்பது X பொருளின் நிரம்பல் தொகையாகும். P_X என்பது X பொருளின் விலையாகும். X பொருளின் நிரம்பலின் விலை நெகிழ்ச்சி தொடர்பில் மேற்படி சமன்பாட்டிலிருந்து நாம் உய்த்தறிவது யாது ?

(1) நிரம்பலின் விலை நெகிழ்ச்சி 6.0 ஆகும். (2) நிரம்பலின் விலை நெகிழ்ச்சி 1.0 ஆகும்.
(3) நிரம்பலின் விலை நெகிழ்ச்சி 0.1 ஆகும். (4) நிரம்பலின் விலை நெகிழ்ச்சி 0.0 ஆகும்.
(5) நிரம்பலின் விலை நெகிழ்ச்சி 0.6 ஆகும். (……)

12. X பொருளின் மீது விதிக்கப்பட்டிருந்த சிறப்பு வரி நீக்கப்பட்ட பின் நிரம்பலானது S_2 இலிருந்து S_1 ஆக அதிகரிப்பதை பின்வரும் வரைபடம் காட்டுகிறது. S_1 என்பது வரிக்கு முன்னரான நிரம்பல் வளையியாகவும் வரி நீக்கப்பட்ட பின்னரான நிரம்பல் வளையியாகவும் காணப்படுகிறது.



வரி நீக்கப்பட்டதன் காரணமாக வரி வருவாய் மற்றும் நுகர்வோர் செலவீடு என்பவற்றின் மீது எவ்வாறான தாக்க விளைவு ஏற்படும் ?

	வரி வருவாய்	நுகர்வோன் செலவீடு
(1)	1 440 ஆல் வீழ்ச்சியடையும்.	2 000 ஆல் அதிகரிக்கும்.
(2)	480 ஆல் வீழ்ச்சியடையும்.	560 ஆல் வீழ்ச்சியடையும்.
(3)	480 ஆல் வீழ்ச்சியடையும்.	560 ஆல் அதிகரிக்கும்.
(4)	960 ஆல் அதிகரிக்கும்.	1 440 ஆல் அதிகரிக்கும்.
(5)	1 440 ஆல் வீழ்ச்சியடையும்.	960 ஆல் வீழ்ச்சியடையும்.

(……)

13. பதிலீட்டு விளைவு என்பது, பின்வருவனவற்றில் ஒன்றின் காரணமாக கேள்வித் தொகையில் ஏற்படும் மாற்றமாகும். அக்காரணியாவது,

(1) ஏனையன மாறாநிலையில் சார்பு விலையில் ஏற்படும் ஒரு மாற்றமாகும்.
(2) மெய் வருமானம் மாறாநிலையில் முழு விலைகளில் ஏற்படும் ஒரு மாற்றமாகும்.
(3) பண வருமானம் மாறாநிலையில் சார்பு விலைகளில் ஏற்படும் ஒரு மாற்றமாகும்.
(4) சார்பு விலைகள் மாறாநிலையில் மெய் வருமானத்தில் ஏற்படும் ஒரு மாற்றமாகும்.
(5) சார்பு விலை மாறாநிலையில் பண வருமானத்தில் ஏற்படும் ஒரு மாற்றமாகும். (……)

14. இவ் வரைபடம் ஒரு நாடு இறக்குமதி செய்யும் நுகர்வுப் பொருளின் கேள்வி வளையியைக் காட்டுகிறது. இந் நாட்டின் அரசாங்கம் இப் பொருளின் மீது அலகொன்றுக்கு $P_1 - P_2$ அளவான இறக்குமதி வரியினை விதிக்கிறது. அதன் விளைவாக நுகர்வோன் மிகையில் ஏற்படும் இழப்பின் அளவும் அரசாங்க வருவாய் அதிகரிப்பும் வரைபடத்தின் எப்பிரதேசங்களினால் அளவிடப்படுகின்றன ?



	நுகர்வோன் மிகை இழப்பு	அரசாங்க வருவாய் அதிகரிப்பு
(1)	A + B	B + C
(2)	A + B + C	B
(3)	A + B	B + C + D + E
(4)	D	B + D
(5)	B + C	B

(……)

15. பின்வரும் வரைபடம் பொருளொன்றின் சந்தைக் கேள்வி வளையியைக் காட்டுகிறது.



இப்பொருளின் நிரம்பல் பூரண நெகிழ்ச்சியுள்ளதாகவும் ஆரம்பத்தில் பொருளின் விலை P_1 ஆகவும் இருப்பதாகக் கருதுக. இப்பொருளின் மீதான வரி விதிப்பு காரணமாக விலையானது P_1 இலிருந்து P_2 வரை அதிகரிக்கிறதாயின், வரியின் மிகைச் சுமை யாது ?

(1) P_3 A P_4 பகுதியாகும். (2) A D B பகுதியாகும். (3) P_1 P_4 C பகுதியாகும்.
(4) P_1 C B P_2 பகுதியாகும். (5) B F C பகுதியாகும். (……)

16. ஒரு நிறுவனம் தனது சகல உள்ளீடுகளையும் 50% இனால் அதிகரிக்கும்போது அதன் வெளியீடு 40% இனால் அதிகரிக்கிறது. இதன் மூலம் வெளிப்படுத்தப்படுவது,

(1) குறைந்து செல்லும் விளைவு விதியாகும். (2) குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு விதியாகும்.
(3) மாறும் விகிதசம விதியாகும். (4) அதிகரித்துச் செல்லும் அளவுத்திட்ட விளைவு விதியாகும்.
(5) எல்லை விளைவு விதியாகும். (……)

17. அதி தாழ்ந்த சராசரி மாறும் செலவுக்குக் கீழுள்ள விலை வீச்சுகளில் நிறைபோட்டி உற்பத்தி நிறுவனமொன்றின் நிரம்பல் வளையியானது,

(1) நிலவும் சந்தை விலையில் கிடையச்சுக்குச் சமாந்தரமாகும்.
(2) பூச்சிய வெளியீட்டில் நிலைக்குத்தாகக் காணப்படும்.
(3) நிறுவனத்தின் எல்லைச் செலவு வளையிக்குச் சமமாகும்.
(4) நிறுவனத்தின் சராசரி மாறுஞ் செலவு வளையிக்குச் சமமாகும்.
(5) நேர்க்கணிய வெளியீட்டைக் கொண்டதாக மேல் நோக்கிச் சரிந்து செல்லும். (……)

18. போட்டிச் சந்தையொன்றில் இயங்கும் நிறுவனமொன்று இலாபத்தை உச்சப்படுத்தும் வெளியீட்டு மட்டம் நிர்ணயிக்கப்படும் புள்ளியில்,

(1) எல்லைச் செலவு குறைவடைந்து செல்லும்.
(2) எல்லைச் செலவு அதிகரித்துச் செல்லும்.
(3) எல்லை வருவாய் அதிகரித்துச் செல்லும்.
(4) எல்லைச் செலவு அதன் அதி தாழ்ந்த மட்டத்தில் காணப்படும்.
(5) எல்லைச் செலவு எல்லை வருவாயை விடக் குறைவாகக் காணப்படும். (……)

19. குறுங்காலத்தில் நிறுவனமொன்று எதுவித உற்பத்தியையும் மேற்கொள்ளவில்லையாயின் பின்வருவனவற்றில் எந்தச் செலவு பூச்சியமாகும் ?

(1) அமையச் செலவு (2) மொத்த மாறுஞ்செலவு
(3) மொத்த நிலையான செலவு (4) சராசரி மொத்தச் செலவு
(5) மொத்தச் செலவு (……)

20. வருமானச் சுற்றோட்ட மாதிரியில் காணப்படும் 'மெய்'ப் பாய்ச்சல்களுள் ஒன்று,

(1) நிறுவனத்துறையிலிருந்து வீட்டுத்துறையை நோக்கிச் செல்லும் பொருள்கள், சேவைகளின் பாய்ச்சல்
(2) நிறுவனத்துறையிலிருந்து வீட்டுத்துறையை நோக்கிச் செல்லும் காரணிச் சேவைகளின் பாய்ச்சல்
(3) வீட்டுத்துறையிலிருந்து நிறுவனத்துறையை நோக்கிச் செல்லும் பொருள்கள், சேவைகளின் பாய்ச்சல்
(4) நிறுவனத்துறையிலிருந்து வீட்டுத்துறையை நோக்கிச் செல்லும் பணப் பாய்ச்சல்கள்
(5) வீட்டுத்துறையிலிருந்து நிறுவனத்துறையை நோக்கிச் செல்லும் பணப் பாய்ச்சல்கள் (……)

21. தரப்பட்ட ஒரு நாட்டில் கடந்த வருடத்தில் பொது விலை மட்டமானது அதிகரித்தபோதிலும் பொருள்கள், சேவைகளின் உற்பத்தி நிலையாகக் காணப்பட்டதாகக் கருதுக. இத் தகவல்களின் அடிப்படையில் பின்வருவனவற்றுள் சரியானது எது ?

	பெயரளவு மொ. உ. உ.	**மெய் மொ. உ. உ.**
(1)	அதிகரித்தது.	அதிகரித்தது.
(2)	மாறவில்லை.	மாறவில்லை.
(3)	வீழ்ச்சியடைந்தது.	வீழ்ச்சியடைந்தது.
(4)	அதிகரித்தது.	மாறவில்லை.
(5)	வீழ்ச்சியடைந்தது.	அதிகரித்தது.

(......)

22. தனியார் வருமானக் கணிப்பீட்டில் உள்ளடக்கப்படும் அதேவேளை தேசிய வருமானத்தில் **உள்ளடக்கப்படாதது** பின்வருவனவற்றுள் எது ?

(1) கம்பனிப் பங்குலாபங்கள்
(2) மாற்றல் செலுத்தல்கள்
(3) சமூகப் பாதுகாப்புப் பங்களிப்புகள்
(4) பகிரப்படாத கம்பனி இலாபங்கள்
(5) தேறிய வட்டி (......)

23. எளிமையான பொருளாதாரமொன்றின் மொத்த நுகர்வுச்சார்பு $C = 250 + 0.75Y$ ஆகவும் முதலீடு $I = 450$ ஆகவும் உள்ளன. இப்பொருளாதாரத்தின் சமநிலை வருமான மட்டம்

(1) 1 800 ஆகும். (2) 2 800 ஆகும். (3) 3 600 ஆகும். (4) 7 200 ஆகும். (5) 9 000 ஆகும். (......)

24. பின்வருவனவற்றுள் எதில் ஏற்படும் அதிகரிப்பு முதலீட்டுப் பெருக்கியின் பெறுமதியை அதிகரிக்கும் ?

(1) பண நிரம்பல்
(2) சமநிலை வெளியீடு
(3) தனியார் வருமானவரி வீதங்கள்
(4) எல்லை நுகர்வு நாட்டம்
(5) நியதி ஒதுக்கு வீதம் (......)

25. பின்வருவனவற்றுள் எது, பொருளாதாரமொன்றின் வருமானச் சுற்றோட்டத்தில் ஓர் உட்பாய்ச்சலாகக் (injection) கருதப்படும் ?

(1) வர்த்தகமீதியில் ஒரு குறைநிலை
(2) அரசாங்கப் பாதீட்டுக் குறைநிலை
(3) தேறிய வரிகளில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
(4) தனியார் கம்பனிகளின் பகிரப்படாத இலாபங்கள்
(5) வீட்டுத்துறை சேமிப்புகள் (......)

26. பின்வரும் வரைபடமானது பொருளாதாரமொன்றின் பேரினப் பொருளியல் மாறிகளின் நடத்தையினைக் காட்டுகிறது.



இப்பொருளாதாரத்தின் தேசிய வருமான மட்டம் Y_3 ஆகவும் மொத்த செலவீட்டுத் தொழிற்பாடு AE_1 ஆகவும் இருப்பின்,

(1) பொருளாதாரம் சமநிலையில் இருக்கும்.
(2) எதிர்பாராத கையிருப்புத் திரட்சி ஏற்படுவதுடன் தேசிய வருமானம் அதிகரிக்கும்.
(3) எதிர்பாராத கையிருப்புத் திரட்சி ஏற்படுவதுடன் தேசிய வருமானம் குறைவடையும்.
(4) எதிர்பாராத கையிருப்பு வீழ்ச்சியடைவதுடன் தேசிய வருமானம் அதிகரிக்கும்.
(5) எதிர்பாராத கையிருப்பு வீழ்ச்சியடைவதுடன் தேசிய வருமானம் குறைவடையும். (......)

27. நாணயக் கணியக் கோட்பாட்டின்படி பெயரளவுப் பணநிரம்பலில் ஏற்படும் 10% அதிகரிப்பு

(1) மெய்ப் பணநிரம்பலை 10% அதிகரிப்புக்கு இட்டுச் செல்லும்.
(2) மெய் வெளியீட்டை 10% அதிகரிப்புக்கு இட்டுச் செல்லும்.
(3) வட்டி வீதத்தை 10% வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லும்.
(4) பொதுவிலை மட்டத்தை 10% அதிகரிப்புக்கு இட்டுச் செல்லும்.
(5) பணப்புழக்கச் சுற்றோட்டத்தில் அதற்கு ஈடான வீழ்ச்சியினை ஏற்படுத்தும். (......)

28. ஒரு நாட்டின் தேசிய வருமானமானது பூரண வேலைவாய்ப்பு மட்டத்தில் உள்ளதாகக் கொண்டால் பின்வரும் நிலைமைகளில் எது பெரும்பாலும் பணவீக்கத்தை ஏற்படுத்தக்கூடும் ?
(1) வட்டி வீதத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
(2) ஊழிய விளைதிறனில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
(3) நாணயமாற்று வீதத்தின் பெறுமதி அதிகரிப்பு
(4) எல்லை இறக்குமதி நாட்டத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
(5) தனியார் வருமான வரி வீதத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு (……)

29. வணிக வங்கிகள் பணத்தை உருவாக்க முடிவது,
(1) ஒதுக்குகளைப் பிணையங்களாக மாற்றியமைப்பதனூடாகவாகும்.
(2) மத்திய வங்கியிடமிருந்து திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்வதன் மூலமாகும்.
(3) கையிருப்பிலுள்ள பணத்தை மத்திய வங்கிக்கு அனுப்புவதன் மூலமாகும்.
(4) 100% ஒதுக்குத் தேவையினைப் பேணுவதன் மூலமாகும்.
(5) மிகை ஒதுக்குகளை வாடிக்கையாளருக்குக் கடனாக வழங்குவதன் மூலமாகும். (……)

30. நபரொருவர் தனது வணிக வங்கி வைப்புக் கணக்கிலிருந்து ரூ. 10 000 ஐ மீளப் பெறுவாராயின், ஏனையன மாறாத நிலையில், வங்கியின் நியதி ஒதுக்குத் தேவை 20% ஆக இருப்பின், இக்கொடுக்கல்வாங்கல் காரணமாக நேரடியாக,
(1) பணநிரம்பல் ரூ. 10 000 இனால் குறைவடையும்.
(2) வங்கி வைப்புகள் ரூ. 10 000 இனால் குறைவடையும்.
(3) பணநிரம்பல் ரூ. 50 000 இனால் குறைவடையும்.
(4) வங்கி வைப்புகள் ரூ. 50 000 இனால் குறைவடையும்.
(5) வங்கி வைப்புகள் ரூ. 8 000 இனால் குறைவடையும். (……)

31. இலங்கையின் வணிக வங்கிகள் தமது நியதி ஒதுக்குகளைப் பேணுவது,
(1) கையிருப்பில் உள்ள பணம் மற்றும் மத்திய வங்கியிலுள்ள வைப்புகள் ஆகிய வடிவங்களிலாகும்.
(2) கையிருப்பில் உள்ள பணம் மற்றும் திறைசேரி உண்டியல்கள் என்னும் வடிவங்களிலாகும்.
(3) வங்கிப் பெட்டகத்திலுள்ள தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்களின் வடிவிலாகும்.
(4) ஏனைய வணிக வங்கிகளில் வைப்புச் செய்துள்ள, உடனடியாக மீளப் பெறக்கூடிய வைப்புகளின் வடிவிலாகும்.
(5) மத்திய வங்கியில் வைப்புச் செய்துள்ள வைப்புகள் மற்றும் வெளிநாட்டு நாணயங்களின் வடிவிலாகும். (……)

32. மத்திய வங்கியானது வணிக வங்கிகளிடமிருந்து திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்யுமாயின், வங்கி ஒதுக்குகளுக்கும் பணநிரம்பலுக்கும் யாது நிகழும் ?

	வங்கி ஒதுக்குகள்	பணநிரம்பல்
(1)	அதிகரிக்கும்.	குறையும்.
(2)	அதிகரிக்கும்.	அதிகரிக்கும்.
(3)	குறையும்.	குறையும்.
(4)	குறையும்.	அதிகரிக்கும்.
(5)	அதிகரிக்கும்.	மாறாது.

(……)

33. நுகர்வில் போட்டித்தன்மை அற்றதும் விலக்கி வைக்க முடியாத தன்மை கொண்டதுமான பொருள்
(1) தூய தனியார் பொருளாக இருக்க முடியாது.
(2) தூய பொதுப் பொருளாக இருக்க முடியாது.
(3) இழிவுப் பொருளாக இருக்க முடியாது.
(4) அரைகுறை பொதுப் பொருளாக இருக்க முடியாது.
(5) உலகப் பொதுப் பொருளாக இருக்க முடியாது. (……)

34. ஒடுங்கு முறை வரி நடைமுறையிலுள்ளபோது வறியவர்கள்,
(1) செல்வந்தர்களை விட தமது வருமானத்தின் குறைந்த சதவீதங்களை வரியாகச் செலுத்துவர்.
(2) செல்வந்தர்களை விட ரூபாய் வடிவில் பெரியளவு தொகையினை வரியாகச் செலுத்துவர்.
(3) தமது வருமான மட்டத்திற்கேற்ப சதவீத அடிப்படையில் மாற்றமுறும் வரியினைச் செலுத்துவர்.
(4) செல்வந்தர்களை விட ரூபாய் அடிப்படையில் குறைந்த தொகையினை வரியாகச் செலுத்துவர்.
(5) செல்வந்தர்களை விட தமது வருமானத்தின் உயர்வான சதவீதத்தை வரியாகச் செலுத்துவர். (……)

35. தூய பொதுப் பொருளொன்றை நுகர மேலுமொரு நபரை அனுமதிப்பதன் எல்லைச் சமூகச் செலவானது,
(1) எதிர்க் கணியமாகும். (2) பூச்சியமாகும். (3) நேர்க் கணியமாகும்.
(4) முடிவிலியாகும். (5) நுகர்வோரின் எண்ணிக்கைக்கேற்ப அதிகரிக்கும். (……)

36. பின்வரும் அட்டவணையானது தாராள சந்தையொன்றில் உற்பத்தி செய்யப்படும் பொருளொன்றின் சமநிலை வெளியீட்டின்போது அப்பொருளின் எல்லைத் தனியார் மற்றும் எல்லை வெளிவாரி நன்மைகளையும், எல்லைத் தனியார் மற்றும் எல்லை வெளிவாரிச் செலவுகளையும் காட்டுகிறது.

வகை	ரூபா மில்லியன்	வகை	ரூபா மில்லியன்
எல்லைத் தனியார் நன்மை	36	எல்லைத் தனியார் செலவு	24
எல்லை வெளிவாரி நன்மை	18	எல்லை வெளிவாரிச் செலவு	0

இச்சந்தையில் அரசாங்கத் தலையீடானது வளங்களின் வினைத்திறனான ஒதுக்கீட்டை மேம்படுத்தும். ஏனெனில் இப்பொருள்
(1) பொதுப் பொருளாக இருப்பதனாலாகும்.
(2) மேன்மைப் பொருளாக இருப்பதனாலாகும்.
(3) தீங்கிழைக்கும் பொருளாக இருப்பதனாலாகும்.
(4) உலகப் பொதுப் பொருளாக இருப்பதனாலாகும்.
(5) இழிவுப் பொருளாக இருப்பதனாலாகும். (......)

37. பாதீட்டுக் குறைநிலையை நிதியீட்டம் செய்யும் பின்வரும் முறைகளில் எது மொத்தக் கேள்வியை மிகப் பெரிய அளவில் அதிகரிக்கச் செய்யும் ?
(1) முறிகளை வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்தல்
(2) முறிகளை மத்திய வங்கிக்கு விற்பனை செய்தல்
(3) முறிகளை வணிக வங்கிகளுக்கு விற்பனை செய்தல்
(4) முறிகளை தேசிய சேமிப்பு வங்கிக்கு விற்பனை செய்தல்
(5) முறிகளை ஊழியர் சேமலாப நிதிக்கு விற்பனை செய்தல் (......)

38. பின்வரும் அட்டவணையைக் கருத்திற் கொள்க.

ஆண்டு	ஏற்றுமதி விலைச் சுட்டெண்	வர்த்தக மாற்றுவீதச் சுட்டெண்
1	100	100
2	90	80
3	80	60

இத்தரவுகளிலிருந்து நாம் எய்தக்கூடிய ஒரு சாத்தியமான முடிவு யாதெனில், மேற்படி காலப்பகுதியில்
(1) ஏற்றுமதி விலைகள் அதிகரித்துள்ளன என்பதாகும்.
(2) இறக்குமதி விலைகள் அதிகரித்துள்ளன என்பதாகும்.
(3) வர்த்தமாற்று விகிதத்தில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதாகும்.
(4) சமமானளவு ஏற்றுமதிகளைக் கொண்டு அதிகளவு இறக்குமதிகளைக் கொள்வனவு செய்யலாம் என்பதாகும்.
(5) ஏற்றுமதிகளின் விலையதிகரிப்பு இறக்குமதிகளின் விலையதிகரிப்பை விட உயர்வானது என்பதாகும். (......)

39. நாடொன்று எந்தவொரு பொருள் அல்லது சேவை உற்பத்தியிலும் முழு நன்மையைக் கொண்டிருக்காதாயின், பின்வருவனவற்றுள் எது சரியாகும் ?
(1) அந்நாடு ஒப்பீட்டு நன்மையையும் கொண்டிருக்காது.
(2) அந்நாடு தான் குறைந்த அமையச் செலவில் உற்பத்தி செய்யக்கூடிய பொருள் அல்லது சேவை உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டிருக்கும்.
(3) அந்நாடு மூலப்பொருள்களை ஏற்றுமதி செய்வதுடன் முடிவுப் பொருள்களை இறக்குமதி செய்யும்.
(4) செலவில் நன்மை இல்லாத காரணத்தினால் இந்நாட்டுடன் எந்தவொரு நாடும் வர்த்தகம் செய்ய விரும்பாது.
(5) அந்நாட்டு நாணயத்தின் சர்வதேச பெறுமதி நிலையாகக் காணப்படும். (......)

40. வெளிநாட்டு நாணயச் சந்தையில் இலங்கை ரூபாவிற்கான கேள்வி எழுவது,
(1) இலங்கையின் ஏற்றுமதிகள் + இலங்கையிலிருந்தான மூலதன வெளிப்பாய்ச்சல்கள் மூலமாகும்.
(2) இலங்கையின் ஏற்றுமதிகள் + இலங்கைக்கான மூலதன உட்பாய்ச்சல்கள் மூலமாகும்.
(3) இலங்கையின் இறக்குமதிகள் + இலங்கையிலிருந்தான மூலதன வெளிப்பாய்ச்சல்கள் மூலமாகும்.
(4) இலங்கையின் இறக்குமதிகள் + இலங்கைக்கான மூலதன உட்பாய்ச்சல்கள் மூலமாகும்.
(5) இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டு ஒதுக்குகளின் கையிருப்புகள் மூலமாகும். (......)

41. ஒப்பீட்டு நன்மை பற்றிய பின்வரும் கூற்றுகளில் சரியானது எது ?

(1) ஒப்பீட்டு நன்மையானது முழுமையாக காலநிலை வேறுபாடுகளில் தங்கியுள்ளது.
(2) ஒப்பீட்டு நன்மையானது முழுமையாக காரணித் திரட்சியில் நிலவும் வேறுபாடுகளில் தங்கியுள்ளது.
(3) ஒப்பீட்டு நன்மையைக் கொண்டிருப்பதற்கு ஒரு நாடு முழு நன்மையையும் கொண்டிருக்க வேண்டும்.
(4) அதிகரித்துச் செல்லும் விலை மட்டத்தைக் கொண்டுள்ள ஒரு நாடு ஏற்கனவே தான் கொண்டுள்ள ஒப்பீட்டு நன்மையினை இழக்கும்.
(5) பொருத்தமான அரசாங்கக் கொள்கைகளின் மூலம் சில பொருட்களுக்கான ஒப்பீட்டு நன்மையானது உருவாக்கப்படலாம். (……)

42. ஏனையன மாறா நிலையில் உள்நாட்டு நாணயத்தின் வெளியகப் பெறுமதி உயர்வானது,

(1) இறக்குமதிப் பொருள்களின் உள்நாட்டு விலையினைக் குறைக்கும்.
(2) இறக்குமதிப் பொருள்களின் உள்நாட்டு விலையினை அதிகரிக்கும்.
(3) இறக்குமதிப் பொருள்களின் வெளிநாட்டு விலையினை அதிகரிக்கும்.
(4) இறக்குமதிப் பொருள்களின் வெளிநாட்டு விலையினைக் குறைக்கும்.
(5) வெளிநாடொன்றில் உள்நாட்டு நாணயத்தின் பெறுமதியினைக் குறைக்கும். (……)

43. இலங்கை கம்பனியொன்று மத்திய கிழக்கில் அமைந்துள்ள தனது ஆடைத் தொழிற்சாலையிலிருந்து ரூ. 40 மில்லியன் பங்கிலாபத்தைப் பெற்றுக்கொள்வதாகக் கருதுக. இப்பங்கிலாபமானது இரட்டைப்பதிவு முறைமையின் அடிப்படையில் இலங்கையின் சென்மதி நிலுவை அட்டவணையில் எவ்வாறு பதியப்படும் ?

(1) மூலதனக் கணக்கில் வரவு மற்றும் நிதிக் கணக்கில் செலவு
(2) மூலதனக் கணக்கில் செலவு மற்றும் நடைமுறைக் கணக்கில் செலவு
(3) மூலதனக் கணக்கில் வரவு மற்றும் நடைமுறைக் கணக்கில் செலவு
(4) நடைமுறைக் கணக்கில் வரவு மற்றும் நிதிக் கணக்கில் செலவு
(5) நடைமுறைக் கணக்கில் செலவு மற்றும் நிதிக் கணக்கில் வரவு (……)

44. சில தொழிற்சாலைகள் தன்னியக்கமயப்படுத்தப்படும்போது (automation) பாரம்பரிய வேலையாட்கள் சிலர் தமது திறன்கள் பொருந்தாத நிலைமைக்கு முகங்கொடுப்பதுடன் அவர்களில் சிலர் வேலை இழக்கின்றனர். மறுபுறம் கணினி இயக்குபவர்களுக்கு உயர் கேள்வி நிலவுகிறது. இத்தகைய வேலையின்மையானது,

(1) சகடோட்ட வேலையின்மை என வகைப்படுத்தப்படும்.
(2) உராய்வு வேலையின்மை என வகைப்படுத்தப்படும்.
(3) இயற்கை வேலையின்மை என வகைப்படுத்தப்படும்.
(4) கட்டமைப்பு வேலையின்மை என வகைப்படுத்தப்படும்.
(5) மறைமுக வேலையின்மை என வகைப்படுத்தப்படும். (……)

45. ஒரு நாடு அபிவிருத்தியடைந்துள்ளது என்பதை சிறப்பாக வெளிப்படுத்தும் மாற்றம் எது ?

(1) அந்நாட்டின் மெய் உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
(2) மொத்த உலக ஏற்றுமதிகளில் அந்நாட்டின் சதவீதப் பங்களிப்பு அதிகரிப்பு
(3) அந்நாட்டின் சென்மதி நிலுவையில் ஏற்படும் ஒரு முன்னேற்றம்
(4) அந்நாட்டு நாணய அலகின் பெறுமதி அதிகரிப்பு
(5) அந்நாட்டின் சராசரி பிரஜையொருவரின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் ஒரு முன்னேற்றம் (……)

46. மொத்த தங்கியிருத்தல் விகிதம் என்பது,

(1) வயதுவந்தோர் சனத்தொகைக்கும் சிறுவர் சனத்தொகைக்கும் இடையிலான விகிதமாகும்.
(2) ஊழியப் படையில் தொழில்புரிவோருக்கும் தொழிலற்றோருக்கும் இடையிலான விகிதமாகும்.
(3) தொழில்புரியும் சனத்தொகையில் 100 பேருக்கு 65 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகையின் விகிதமாகும்.
(4) 15 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகைக்கும் 15 வயதுக்கு உட்பட்ட சனத்தொகைக்கும் இடையிலான விகிதமாகும்.
(5) 15 - 59 வயது சனத்தொகைக்கும் 15 வயதுக்கு குறைந்த மற்றும் 59 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகைக்கும் இடையிலான விகிதமாகும். (……)

47. பின்வருவனவற்றுள் 2012/13 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுத் தரவுகளின்படி இலங்கையின் தலைக்குரிய வறுமைக் குறிக்காட்டியை சரியாகக் காட்டும் தரவுத் தொகுதி எது ?

	நகரத் துறை %	கிராமியத் துறை %	தோட்டத் துறை %
(1)	4.5	10.2	16.3
(2)	2.5	6.7	12.9
(3)	4.2	7.5	10.6
(4)	2.1	7.6	10.9
(5)	3.1	7.9	10.2

(……)

48. பின்வரும் பொருளியல் பிரச்சினைகளில் எதனை மதிப்பீடு செய்வதற்கு லோரன்ஸ் வளையியைப் பயன்படுத்த முடியும் ?
(1) பொருளாதாரத்தின் உற்பத்தி மற்றும் வளங்களின் ஒதுக்கீட்டு வினைத்திறன்
(2) வர்த்தகப் பங்காளிகளின் ஒப்பீட்டு நன்மைகள்
(3) நாடுகளிடையே சிறக்குமியல்பின் தீவிரத்தன்மை
(4) வருமானப் பங்கீட்டின் ஒப்புரவுத்தன்மை
(5) வேலையின்மைக்கும் விலையுறுதி நிலைக்கும் இடையிலான தொடர்பு (......)

49. பின்வருவனவற்றுள் 2014ஆம் ஆண்டின் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பில் விவசாயத்துறையின் பங்களிப்பை சரியாகக் காட்டுவது எது ?

	GDP %	வேலைவாய்ப்பு %
(1)	16.0	28.5
(2)	22.8	32.3
(3)	12.8	45.0
(4)	10.5	26.5
(5)	10.1	28.5

(......)

50. பின்வரும் நாடுகளுள் G7 குழுவின் அங்கத்துவ நாடு **அல்லாதது** எது ?
(1) ஜப்பான் (2) கனடா (3) பிரான்ஸ்
(4) இத்தாலி (5) ரஷ்யா (......)

* * *

2.1.3 வினாப்பத்திரம் - I இற்கான புள்ளி வழங்கும் திட்டம்.

வினா இலக்கம்	விடை	வினா இலக்கம்	விடை
01.	2	26.	3
02.	5	27.	4
03.	1	28.	1
04.	3	29.	5
05.	3	30.	2
06.	4	31.	1
07.	2	32.	2
08.	1	33.	1
09.	4	34.	5
10.	3	35.	2
11.	2	36.	2
12.	3	37.	2
13.	1	38.	2
14.	5	39.	2
15.	5	40.	2
16.	2	41.	5
17.	2	42.	1
18.	2	43.	4
19.	2	44.	4
20.	1	45.	5
21.	4	46.	5
22.	2	47.	4
23.	2	48.	4
24.	4	49.	5
25.	2	50.	5

சரியான ஒரு விடைக்கு **02** புள்ளிகள் வீதம் மொத்தம் **100** புள்ளிகள் ஆகும்.

2.1.4 வினாத்தாள் I இற்கு விடையளித்துள்ள விதம் பற்றிய அவதானிப்பு



மேல் வரைபின்படி I ஆம் வினாப்பத்திரத்தின் இலகுதன்மை மிகவும் குறைந்த வினா 17 ஆகும். பரீட்சார்த்திகளில் 16% ஆகும். பரீட்சார்த்திகளில் குறைந்த சதவீதத்தில் சரியான விடையளித்துள்ள வினா 17 ஆகும். அதேபோல் இலகுதன்மை கூடுதலான வினா 1 ஆவதுடன் அதன் இலகுதன்மை 85% ஆகும். அதாவது பரீட்சார்த்திகளில் கூடுதலான சதவீதத்தினர் விடையளித்துள்ள வின் 1 ஆகும்.

மொத்தமாக அவதானிக்கும்போது I ஆம் வினாப்பத்திரத்தின் மொத்த இலகுதன்மை 52.73% ஆகும்.

2.1.5 பல்தேர்வு வினாக்கள் தொடர்பாக விடைத் தெரிவையும் தெரிவுசெய்த மாணவர்களின் எண்ணிக்கையைச் சதவீதத்தில் காட்டுதல்.

வினா இலக்கம்	சரியான விடைகள	ஒவ்வொரு தெரிவையும் தெரிவுசெய்த பரீட்சார்த்திகளின் சதவீதம்					
		1	2	3	4	5	Missing
1	2	5.40	**84.57**	2.50	2.20	5.27	0.06
2	5	12.07	5.80	5.57	2.97	**73.43**	0.16
3	1	**43.60**	19.40	13.63	11.83	11.10	0.44
4	3	8.70	18.93	**53.30**	10.77	7.60	0.70
5	3	10.63	1.80	**79.93**	4.10	3.40	0.14
6	4	4.63	3.73	4.87	**46.17**	39.90	0.70
7	2	13.10	**54.10**	13.47	13.80	5.03	0.50
8	1	**59.37**	12.57	10.57	12.97	3.47	1.05
9	4	5.53	5.57	8.90	**64.07**	15.03	0.90
10	3	2.33	**9.07**	**74.47**	7.07	6.77	0.29
11	2	20.63	**43.63**	7.63	13.97	13.43	0.71
12	3	9.10	31.90	**47.83**	5.53	5.17	0.47
13	1	**67.83**	4.60	12.30	12.00	2.97	0.30
14	5	6.33	9.30	8.37	3.77	**71.70**	0.53
15	5	4.27	11.40	4.43	27.67	**51.73**	0.50
16	2	8.77	**67.67**	2.70	18.03	2.63	0.20
17	2	23.90	**15.93**	33.67	10.60	14.93	0.97
18	2	5.90	**30.27**	9.33	22.90	30.80	0.80
19	2	16.17	**67.20**	7.07	4.10	5.17	0.29
20	1	**62.97**	10.73	10.13	8.30	7.40	0.47
21	4	6.07	14.43	9.43	**62.57**	6.60	0.90
22	2	4.93	**58.60**	18.13	10.63	7.37	0.34
23	2	4.93	**80.13**	7.30	4.90	1.87	0.87
24	4	19.37	15.50	5.27	**50.47**	8.77	0.62
25	2	8.67	**35.13**	14.83	17.60	23.37	0.40
26	3	6.87	30.63	**26.07**	20.97	14.77	0.69
27	4	12.73	11.87	10.67	**52.30**	11.73	0.70
28	1	**41.83**	13.63	26.30	5.70	11.80	0.74
29	5	4.57	9.47	2.53	4.20	78.77	0.46
30	2	6.40	**36.50**	12.87	15.53	28.27	0.43
31	1	**51.93**	16.10	4.53	4.97	22.13	0.34
32	2	8.50	**53.23**	6.93	22.00	9.03	0.31
33	1	**42.67**	23.73	17.53	8.93	6.70	0.44
34	5	20.20	6.00	15.00	6.93	**51.40**	0.47
35	2	5.37	**62.60**	11.97	5.47	14.10	0.49
36	2	16.93	**60.47**	10.33	7.43	4.23	0.61
37	2	26.63	**30.73**	29.77	4.80	7.27	0.80
38	2	5.17	**50.13**	11.37	12.70	20.00	0.63
39	2	7.20	**68.40**	9.07	11.77	3.23	0.33
40	2	21.97	**34.87**	17.63	12.73	12.10	0.70
41	5	3.03	31.70	13.60	20.17	**30.87**	0.63
42	1	**26.67**	22.07	14.40	23.57	12.53	0.76
43	4	26.00	12.67	10.07	**36.83**	13.67	0.76
44	4	14.50	18.13	7.67	**44.17**	14.80	0.73
45	5	15.53	3.17	8.77	4.67	**67.53**	0.33
46	5	8.17	16.00	6.37	4.50	**64.47**	0.49
47	4	15.17	17.37	21.63	**37.20**	7.80	0.83
48	4	7.17	4.43	8.43	**72.33**	7.17	0.47
49	5	17.90	16.87	11.43	14.40	**38.37**	1.03
50	5	13.17	18.73	10.67	27.23	**29.53**	0.67

★ ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான தெரிவை மேற்கொண்ட மாணவர் சதவீதம் நிழற்றப்பட்டுள்ளது.

★ வினாவிற்கு விடை தெரிவை செய்யாத அல்லது ஒரு தெரிவிற்கு மேலதிகமாக தெரிவு செய்த மாணவர்களின் சதவீதம் Missing எனக் காட்டப்பட்டுள்ளது.

2.1.6 வினாத்தாள் I இற்கு விடையளித்தல் தொடர்பான முழுமையான அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள்

- ⋆ முழுமையாகக் கவனிக்கும்போது பல்தேர்வு வினாக்களைக் கொண்ட I ஆம் வினாப்பத்திரத்தில் 1, 2, 5, 9, 10, 13, 14, 16, 19, 20, 21, 23, 29, 35, 36, 39, 45, 46, 48 இலக்கங்களைக் கொண்ட வினாக்களுக்கு சுமார் 60% அல்லது 60% மேலான அபேட்சகர்கள் சரியான விடையளித்துள்ளனர்.

- ⋆ 85% மேலான அபேட்சகர்களே 1 ஆம் இலக்க வினாவுக்கு சரியான விடையளித்துள்ளனர்.

- ⋆ 16% இற்குக் குறைந்த அபேட்சகர்களே 17 ஆம் இலக்க வினாவிற்கு சரியான விடையளித்திருந்தனர்.

- ⋆ இலக்கம் 17, 18, 25, 26, 30, 37, 40, 41, 42, 43, 47, 49, 50 இலக்கங்களைக் கொண்ட வினாக்களுக்கு மொத்த அபேட்சகர்களில் 40% இற்கும் குறைந்த சதவீதத்தினரே சரியான விடையளித்துள்ளனர்.

- ⋆ 17 ஆம் இலக்க வினாவிற்கு 16% இனரே சரியான விடையளித்துள்ளனர். நிறை போட்டி நிறுவனமொன்றின் சராசரி மாறும் செலவிற்கு கீழுள்ள இழிவு விலையில் நிறுவனமொன்றின் நிரம்பல் வளையி அமையும் இடம் தொடர்பாகவே வினா கேட்கப்பட்டுள்ளது. அவ்விலை மட்டத்தில் நிறுவனத்தின் நிரம்பல் வளையி, பூச்சிய உற்பத்தி மட்டத்தில் கிடையச்சில் அமைய வேண்டும் என்பதை அபேட்சகர்களில் உயர் சதவீதத்தினர் அறிந்திருக்கவில்லை என்பது இதன் முலம் புலப்படுகின்றது. எனவே குறிப்பிட்ட தலைப்பு பற்றிய அறிவை வரைபடம் மூலம் அபேட்சகர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.



இது அதி தாழ்வு நிரம்பல் விலையாகும். P விலைக்கு குறைந்த விலையின்போது வழங்கல் பூச்சியமாகும். எனவே நிறுவனத்தில் நிரம்பல் வளையி பூச்சிய உற்பத்தியில் குத்தச்சுக் கோடாகும். (வரைபடத்தில் கடும் கறுப்பு நிறத்தில் இது காட்டப்பட்டுள்ளது)

- ⋆ 18 ஆம் இலக்க வினாவிற்கு 30% ஆனோரே விடையளித்துள்ளனர். போட்டிச் சந்தையில் இயங்கும் நிறுவனமொன்று இலாபத்தை உச்சப்படுத்தும் வெளியீட்டு மட்டம் நிர்ணயிக்கும் புள்ளியில் எல்லைச் செலவும் எல்லை வருமானமும் துலங்கும் முறை பற்றி இவ்வினாவின் மூலம் வினவப்பட்டுள்ளது. அபேட்சகர்கள் 30% இற்குக் குறைந்த வீதத்தினர் சரியான விடையளித்திருப்பதன் மூலம், குறிப்பிட்ட தலைப்பு தொடர்பாக பெரும்பாலான அபேட்சகர்களுக்கு சரியான அறிவும் விளக்கமும் காணப்படவில்லை. என்பது இதன்மூலம் புலப்படுகின்றது. போட்டிச் சந்தையில் நிறுவனமொன்று இலாபத்தை உச்சப்படுத்தத் தேவையான நிபந்தனை எல்லைச் செலவு அதிகரிக்கும் பகுதியில் அதாவது எல்லைச் செலவு வளையி நேர்கணியச் சாய்வினைக் காட்டும்போது எல்லைச் செலவு எல்லைச்செலவு சமமாகும். அபேட்சகர்கள் தெரிவினை மேற்கொள்ளும்போது iv, v தெரிவுகளை மேற்கொண்டுள்ளமையின் மூலம் அது பற்றி அறிவை பெறவில்லை என்பது புலப்படுகின்றது.



எல்லை ஆய்வில் இலாபத்தை உச்சப்படுத்தும் வெளியீட்டு மட்டம் MC = MR ஆகும். இலாபத்தை உச்சப்படுத்தும் வெளியீட்டு மட்டம் வரைப்படத்தில் A புள்ளியில் காட்டப்படுவதுடன் அச்சந்தர்ப்பத்தில் MC வளையி உயர்ந்து செல்லும்.

- 25 ஆவது வினாவிற்கு 35% மான பரீட்சார்த்திகள் சரியான விடையை அளித்துள்ளனர். இவ்வினாவின் மூலம் நேரடி வருமானச் சுற்றோட்டத்தின் உட்பாய்ச்சல் அறிமுகம் செய்யும் முறை தொடர்பானதாகும். அபேட்சகர்களில் 65% மானோர் பிழையான விடையளித்துள்ளமை மூலம் அரச வருமாத்தை விஞ்சிச் செல்லும் செலவின் அளவு உட்செலுத்தலாக இனங்காண முடியாமல் போயுள்ளமையாகும். சேமிப்புக்கு மேலான முதலீடு, இறக்குமதிக்கு மேலான ஏற்றுமதி, வரியை விஞ்சிய அரச செலவு, என்பன உட்பாய்ச்சல்களாக இனங்காண்பதற்கு அபேட்சகர்களின் அறிவை விருத்தி செய்தல் வேண்டும்.

- வினா இலக்கம் 26 இன் மூலம் கொடுக்கப்பட்டுள்ள வரைபின் மூலம் பேரினப் பொருளாதாரச் சமநிலையின்போது கையிருப்புத் திரட்டசி ஏற்படுவது தொடர்பாகவும் சமநிலை வெளியீடு மாறும் முறை தொடர்பாகவும் வினவப்பட்டுள்ளது. அபேட்சகர்களின் 65% மானோர் தவறான விடையளித்துள்ளதால் பேரினப் பொருளாதாரச் சமநிலைக்கு பூர்த்தி செய்ய வேண்டிய நிபந்தனையான Y=E யும் W = J யும் தொடர்பான அறிவும், பெரினப் பொருளாதார சமநிலையின்போது Y>E ஆகும் சந்தர்ப்பத்தில் இருப்புத்திரட்சி ஏற்படுவதாகவும், சமநிலை வெளியீட்டை நோக்கி தேசிய வருமானம் வீழ்ச்சியடையும் போக்கு காணப்படுவதாகவும் Y<E ஆகும் போது இதற்கு முரணான நிலை நிலவும் என்பதாகும். உறுதியாகக் கூடிய முறையில் கற்றல் - கற்பித்தல் தொழிற்பாடுகளை ஒழுங்கமைத்தல் வேண்டும்.



AE_1 மொத்தச் செலவு வளையியின் படி Y_3 வருமான மட்டத்தில் மொத்த வெளியீட்டை விட திட்டமிட்ட செலவு குறைவு. அங்கு பொருளாதாரத்தில் உற்பத்தியில் குறிப்பிட்டதொரு அளவு இருப்புத் திரட்சி நிலவும். அதன்போது உற்பத்தியாளர் வெளியீட்டைக் குறைக்க முற்படுவர். அதன்படி சரியான விடை 3 ஆவது தெரிவாகும்.

- 30 ஆவது வினாவிற்கு சரியான விடையளித்துள்ள பரீட்சார்த்திகளின் சதவீதம் 37% ஆகும். வணிக வங்கியினால் வைப்புப் பணத்தை மீண்டும் மீள வழங்கப்படுவதன் காரணமாக ஏனைய காரணிகள் மாறாத நிலையில் நேரடியாக பண நிரம்பலில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பது வினவப்பட்டுள்ளது. இதற்கான விடையை வழங்கும் போது “ஏனைய காரணிகள் மாறவில்லை” பண நிரம்பலில் நேரடியான செல்வாக்கு” என்ற காரணிகள் தொடர்பான முக்கிய கவனம் செலுத்த வேண்டும். பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவு செய்வதில் தவறுவதற்கு மேற்குறித்த காரணிகளில் அவதானம் செலுத்தாமையாகும்.

- 37 ஆவது வினாவிற்கு 31% மான பரீட்சார்த்திகள் சரியான விடையளித்துள்ளனர். இவ்வினாவின் மூலம் கொடுக்கப்பட்ட நிகழ்வின் மூலம் மொத்தக் கேள்வியை பெரிய அளவில் அதிகரிக்கச் செய்வதில் பங்களிப்புச் செய்யும் நிகழ்வு என்ன என்பது கேட்கப்பட்டுள்ளது. இங்கு பரீட்சார்த்திகள் கருத்தில் கொள்ள வேண்டியது வேறு நிறுவனத்திால் முறிகளை விற்பனை செய்வதை விட மத்திய வங்கிக்கு முறிகளை விற்பனை செய்யும்போது பணத்தின் அடித்தளம் பல முறைகள் அதிகரித்து பண நிரம்பல் பெரிய அளவில் அதிகரிப்பதன் மூலம் மொத்தக் கேள்வி அதிகரிப்பதும், நேரடியான அரச செலவு உயர்வடைவதால் மொத்தக் கேள்விப் பெருக்கித் தொழிற்பாடு மூலம் அதிகரிக்கும் என்பதுமாகும்.

  அரச மத்திய வங்கிக்கு முறிகளை விற்பனை செய்வதன் மூலம் அடிப்படைப் பணம் விரிவடைந்து பணப் பெருக்கித் தொழிற்பாடு மூலம் பண வழங்கல் அதிகரிக்கும். வட்டி வீதம் வீழ்ச்சியடையும் வட்டியால் நுகர்வும் முதலீடும் அதிகரிக்கும். மேலும் அரச செலவு அதிகரித்தல் நேரடியாக இடம்பெறும். இவ்வாறு C,I,G அதிகரிப்பு பெருக்கித் தொழிற்பாடாக மொத்தக் கேள்வி பாரிய அளவில் விரிவடையும். இதன்படி கொடுக்கப்பட்டுள்ள தெரிவினுள் மொத்தக் கேள்வி பாரிய அளவில் அதிகரிக்கக் காரணமாவது அரசின் மூலம் மத்திய வங்கியிற்கு முறிகளை விற்பனை செய்வதன் மூலமாகும்.

- 40 ஆம் வினாவிற்கு 35% பரீட்சார்த்திகள் சரியான விடையளித்துள்ளனர். குறிப்பிட்ட வினாவின் மூலம் வெளிநாட்டு நாணயச் சந்தையில் இலங்கை ரூபாவிற்குக் கேள்வி ஏற்படுவது எக்காரணத்திலாகும் எனக் கேட்கப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகளின் பிழையான தெரிவிற்கு இட்டுச் செல்லக் காரணமாகப் புலப்படுவது ரூபாவிற்கான கேள்வியை ஏற்படுத்தும் காரணிகள் பற்றி போதியளவு அறிவின்மையாகும். எனவே இவ் அறிவை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் கற்றல் - கற்பித்தல் தொழிற்பாடுகளை ஒழுங்கமைத்தல் வேண்டும். வெளிநாட்டு நாணயச் சந்தையில் வெளிநாட்டு நாணயத்துக்கு ஏற்படும் கேள்வி, நிரம்பலின் அடிப்படையில் அதன் கேள்வி விலை தீர்மானிக்கப்படும் முறையில் உள்நாட்டு நாணயத்துக்கு உள்ள கேள்வியினதும் நிரம்பலினதும் கீழ் நாணயச் சந்தையில் விலை தீர்மானிக்கப்படும் விதம் பற்றி அறிய வேண்டும்.

- 41 ஆம் வினாவிற்கு 31% ஆனோரே சரியான விடையளித்துள்ளனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் பிழையான விடையளித்ததற்கு ஒப்பீட்டு நன்மையைத் தீர்மானிக்கும் காரணிகள், அவற்றின் தொழிபாடுகள் பற்றி சரியான விளக்கமின்மையே காரணமாகும் வழங்கப்பட்டுள்ள தெரிவுகளை தர்க்க ரீதியாக அணுகுவதற்கு கவனம் செலுத்துவதுடன் விடைகளைத் தெரிவு செய்ய பரீட்சார்த்திகளைப் பயிற்சித்தல் வேண்டும்.

- 42 ஆம் வினாவிற்கு 27% மானோரே சரியான விடையளித்துள்ளனர். உள்நாட்டு நாணயத்தில் வெளியகப் பெறுமதி உயர்வு இறக்குமதியில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் முறை இவ்வினாவின் மூலம் கேட்கப்பட்டுள்ளது. எனினும் பரீட்சார்த்திகளால் பெரும்பாலான வீதத்தினர் தவறான தெரிவின் மூலம் புலப்படுவது நாணயமாற்றை தீர்மானித்தல் தொடர்பாக பரீட்சார்த்திகளுக்கு அறிவும் விளக்கமும் போதியளவு காணப்படவில்லை என்பதாகும். ஏனைய காரணிகள் மாறாத நிலையில் உள்நாட்டு நாணய அலகொன்றின் வெளிநாட்டுப் பெறுமதி உயர்வதன் மூலம் ஒரு டொலருக்குக் கொடுக்கவேண்டிய ரூபாவின் அளவு குறைவதாகும் என்பது காட்டப்படும். மறுபுறம் ரூபாவிற்காக மாற்றப்படும் டொலரின் அளவு அதிகரிக்கும். அவ்வாறான தன்மை ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களாவன,

  (1) இறக்குமதிகளின் பெறுமதி நிலையாகக் காணப்படும்போது ஏற்மதிகளின் பெறுமதி அதிகரித்தல்.

  (2) ஏற்றுமதிகளின் பெறுமதி நிலையானதாகக் காணப்படும்போது இறக்குமதிகளின் பெறுமதி வீழ்சியடைதல்.

  (3) ஏற்றுமதிகளின் பெறுமதி அதிகரித்து இறக்குமதிகளின் பெறுமதி குறைவடைதல்.

- 43 ஆம் வினாவிற்கு விடையளித்த பரீட்சார்த்திகளில் 37% ஆனோரே சரியான விடையளித்துள்ளனர். இவ்வினாவின் மூலம் வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கலொன்று சென்மதி நிலுவை அட்டவணையில் இரட்டைப் பதிவு முறைமை அடிப்படையில் பதியப்படும் இடப்படும் முறை பற்றியதாகும். எனினும் பெருமளவிலான பரீட்சார்த்திகள் பிழையான விடையளித்துள்ளதன் மூலம் அறிவு விளக்கம் காணப்படாமை புலப்படுகின்றது. எனவே சென்மதி நிலுவையின் எல்லாக் கணக்குகளுக்குமுரிய பல்வேறு கொடுக்கல் வாங்கல்களையும் இரட்டைப் பதிவு முறைமை அடிப்படையில் சரியாக பதியக் கூடிய பயிற்சிகளை வழங்க வேண்டும்.

- 47 ஆம் வினாவிற்கு 37% ஆன பரீட்சார்த்திகளே சரியான விடையளித்திருந்தனர். வறுமையின் துறை ரீதியான பரம்பல் தொடர்பான தற்காலத் தகவல்கள் இவ்வினாவின் மூலம் கேட்கப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகளின் பிழையான தெரிவினை மேற்கொள்வதனைத் தடுக்க சனத்தொகையில் வறுமை தொடர்பான அண்மைக்காலப் போக்கு தொடர்பான அறிவை இற்றை நிலைப்புடுத்த வேண்டும்.

- 49 ஆம் வினாவின் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறை ரீதியான கட்டமைப்பு பற்றிக் கேட்கப்பட்டுள்ளது. அதற்கு 38% ஆனோரே சரியான விடையளித்துள்ளனர். மொத்தத் தேசிய உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்பு பற்றிய தற்காலத் தரவுகளை இற்றை நிலைப்படுத்தல் வேண்டும்.

- 50 ஆம் வினாவிற்கு பரீட்சார்த்திகளில் 30% ஆனோர் சரியான விடையளித்துள்ளனர். பொருளாதார ஒத்துழைப்பு நிறுவனங்கள் பற்றிய அறிவு போதியளவு காணப்படாமையினால் பிழையான விடையளித்துள்ளனர்.

2.2 வினாத்தாள் II இற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்கள்

2.2.1 வினாத்தாள் II இன் கட்டமைப்பு

நேரம் 03 மணித்தியாலங்கள்.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

உப பிரிவு 'அ' - அமைப்புக் கட்டுரை வினாக்கள் 05.

உப பிரிவு 'ஆ' - அமைப்புக் கட்டுரை வினாக்கள் 05.

குறைந்தது ஒரு பகுதியிலிருந்து 02 வினாக்களையேனும் தெரிவு செய்து 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள்.

இறுதிப் புள்ளிக் கணிப்பிடல்.

வினாத்தாள் I = 100 புள்ளிகள்

வினாத்தாள் II = 100 புள்ளிகள்

இறுதிப்புள்ளிகள் 200 ÷ 2 = 100 புள்ளிகள்

2.2.2 வினாத்தாள் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புக்கள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள்.

★ **II** ஆம் வினாத்தாள்களுக்கான விடையளித்தல் தொடர்பான அவதானிப்பு வரைபு **2, 3, 4.1, 4.2** என்பவற்றின் மூலம் காட்டப்பட்டுள்ளது.

வினா இலக்கம் - 01

உப பிரிவு 'அ'

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரு** வினாக்களைத் தெரிவுசெய்க.)

1. (i) பொருளாதார வளங்களின் **நான்கு** வகைகளும் எவை ? ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக. (04 புள்ளிகள்)

(ii) தாராள சந்தைப் பொருளாதாரமானது மத்திய திட்டமிடல் பொருளாதாரமொன்றிலிருந்து எவ்வழிகளில் வேறுபடுகின்றது ? (04 புள்ளிகள்)

(iii) பொருளியலில் பணமானது ஒரு மூலதன வளமாகக் **கருதப்படாதது** ஏன் ? (04 புள்ளிகள்)

(iv) முயற்சியாளன் என்பவர் யார் ? சந்தைப் பொருளாதாரமொன்றில் முயற்சியாளர்கள் ஏன் முக்கிய பங்கினை வகிக்கின்றனர் ? (04 புள்ளிகள்)

(v) சந்தைப் பொருளாதாரமொன்றின் வெற்றிக்கு தனியார் உரிமையும் சொத்துரிமைப் பாதுகாப்பும் ஏன் இன்றியமையாதனவாக உள்ளன ? (04 புள்ளிகள்)

எதிர்பார்த்த விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

(1) (i)
- நிலம் உதாரணம் : மீன் வளம் **(01 புள்ளி)**
- உழைப்பு உதாரணம் : மீன் பிடித்தலில் ஈடுபட்ட காலம் **(01 புள்ளி)**
- மூலதனம் உதாரணம் : மீன்பிடிவலை உபகரணங்கள் **(01 புள்ளி)**
- முயற்சி உதாரணம் : மீன் உணவுகள் விற்பனை செய்யும் உணவகமொன்றை ஆரம்பித்தல் **(01 புள்ளி)**

(ii)

தாராள சந்தைப் பொருளாதாரம்	மத்திய திட்மிடல் பொருளாதாரம்
- வளங்கள் தனியார் உரிமை	- வளங்கள் அரசின் உரிமையாக இருத்தல்
- தனியார் முயற்சியாண்மை	- அரச முயற்சினாண்மை
- பரவலாக்கப்பட்ட தீர்மானம் மேற்கொள்ளல் செயன்டுறை (பன்முகப்படுத்தப்பட்டது)	- மையக்கடுத்தப்பட்ட தீர்மானமெடுத்தல்
- விலைப் பொறிமுறை	- மத்திய திட்டமிடல் பொறிமுறை
- சந்தையில் பங்குபற்றும் எல்லோரும் சுய நன்மையின் அடிப்படையில் தீர்மானம் மேற்கொள்ளல்	- வளப்பயன்பாடு, உற்பத்தி உள்ளடக்கம், உற்பத்தி விநியோகம் போன்ற சகல தீர்மானங்களும் மத்திய திட்டமிடற் குழுவினால் மேற்கொள்ளப்படும்.
- இலாபத்தை அதிகரிக்கும் நோக்கில் உற்பத்தியாளர் மத்தியில் கரும் போட்டி நிலவுதல்	- போட்டித்தன்மை காணப்படாமை
-அரசாங்கத்தின் பணிகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டிருத்தல்	- பொருள்கள் சேவைகளின் உற்பத்தி பங்கீடு, நுகர்வு போன்ற சகல துறைகளிலும் அரச தலையீடு நிலவுதல்
- வளப்பயன்பாடு வினைத்திறன் மிக்கதாய் இருத்தல்	- வளங்கள் வீண்விரயமாகல் (மிகையுற்பத்தியோ, குறையுற்பத்தியோ ஏற்படல்)

- நுகர்வோரின் விருப்பங்களுக்கேற்ப உற்பத்தி மேற்கொள்ளப்படல்	- அடிப்படைத் தேவைகளை (Basic needs) அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி மேற்கொள்ளப்படல்
- பொருளாதார சுதந்திரம், சொத்துக்களை சேகரித்து பயன்படுத்தும் சுதந்திரம், தொழிலைத் தெரிவு செய்யும் சுதந்திரம்	- பொருளாதார சுதந்திரமும் நுகர்வோரின் இறைமையும் இல்லாதிருத்தல்
- பேரினப் பொருளியல் உறுதிப்பாடின்மை	- பேரினப் பொருளியல் உறுதிப்பாடு நிலவுதல்
- வருமான மற்றும் செவப்பரம்பலில் ஏற்றத் தாழ்வுகள் காணப்படல்	- வருமான மற்றும் செல்வப் பரம்பல் நியாயமானதாக காணப்படல்
- பொருள் சார் ஊக்குவிப்புகள் காணப்படல்	- அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்புகள் காணப்படல்

(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம் ஏதேனும் 04 விடயங்களுக்கு 04 புள்ளிகள்)

(iii) - பொருளியல் மூலதானம் என்பதனாற் கருதப்படுவது யாதெனில் மனிதனால் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திக்கு ஆதாரமாய் விளங்கும் உபகரங்கள், கருவியகள், இயந்திரங்கள் மற்றும் ஏனைய உற்பத்தி உபகரணங்களையாகும். பொருள்கள் சேவைகளின் உற்பத்திகளில் அவை நேரடியாகப் பங்களிப்புச் செய்கின்றன. ஆனால் பணத்தைப் பயன்படுத்தி பொருள்களையும் சேவைகளையும் நேரடியாக உற்பத்தி செய்ய முடியாது. எனவே பணம் ஓர் உற்பத்திக் காரணியாகக் காணப்படுவதில்லை.

(03 புள்ளிகள்)

- பொருளியலில் மூலதனம் எனபதனால் கருதப்படுவது மெய்ச் சொத்துக்களையாகும். ஆனால் பணம் என்பது ஒரு மெய்ச் சொத்துன்று, அது ஒரு நிதிச் சொத்தாகும்.

- பணத்தை (அல்லது நிதி மூலதனம்) பயன்படுத்தி மூலதனப் பொருள்களைக் கொள்வனவு செய்யலாம் ஆதலால் மூலதனத்தைப் பெற்றுக்கொள்ளும் ஊடகமாக பணத்தை கருதலாம்.

(ஏதேனும் ஒரு விடயத்திற்கு 01 புள்ளி)

(iv) - பொருள் சேவைகளை உற்பத்தி செய்வதற்கு நிலம், உழைப்பு, மூலதனம் போன்ற உற்பத்தி வளங்களை இணைத்து உற்பத்தியை ஒழுங்கமைக்கும் மனித வளம் முயற்சியாளனாவான்.

(01 புள்ளி)

- உபாயரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரத் தீர்மானங்களை எடுத்து வணிக முயற்சியினை முன்னெடுத்துச் செல்பவன் முயற்சியாளனாவான்.

- முயற்சியாளன் புதிய பொருள்கள், புதிய உற்பத்தி முறைகள், புதிய முகாமைத்துவ ஒழுங்கமைப்பு முறைகள் போன்ற புத்தாக்கங்களை அறிமுகப்படுத்துகிறான்.

- இடர் நேர்வு அபாயங்களை ஏற்பவனாகவும் முயற்சியாளனே காணப்படுவான். சந்தையில் இலாபத்தை உழைப்பமற்கான என்பது பற்றிய எந்தவிம உத்தரவாதமும் இல்லை. முயற்சியாளன் தனது காலம், உழைப்பு மற்றும் அவனது திறமைகளை வணிக முயற்சியை இயக்கிச் செல்வதன் நிமித்தல் தியாகம் செய்வதன் பொருட்டு அவனுக்கு கிடைக்கும் கொடுப்பனவு இலாபமாகவோ அன்றேல் நட்டமாகவோ இருக்கலாம்.

(ஏதேனுமொரு விடயத்திற்கு 01 புள்ளி)

- சந்தைப் பொருளாதாரம் தனியார் முயற்சியாண்மை என்னும் தூணிலேயே பிரதானதாக தங்கியுள்ளது. எனவே சந்தைப் பொருளாதாரத்திற்கு முயற்சியாளன் அத்தியாவசியமானவனாவான்.

(01 புள்ளி)

- எல்லாப் பொருளாதார முறைகளையும் தீர்வுகாண வேண்டியுள்ள அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளான எதனை எந்தளவு உற்பத்தி செய்வதென்று பிரச்சினைகளுக்கு தீர்வுகாண சந்தைப பொருளாதாரம் முயலும் போது அதில் முயற்சியாளனுக்கு முக்கிய பங்குண்டு. பொருள்கள் சேவைகளை உற்பத்தி செய்யும் பொருட்டு உற்பத்தி வளங்களின் கலவையைத் தெரிவு செய்வதும் அவற்றை ஒழுங்கமைப்பதும் முயற்சியாளனாவான். தனிடமுள்ள நிதிவளங்களையும் இடருக்குட்படுத்தி வணிக முயற்சியினை ஆரம்பிக்க அவன் முன்வருவான்.

(01 புள்ளி)

(v) - சந்தைப் பொருளாதாரமானது தனியார் சொத்துரிமை தனியார் முயற்சியாண்மை, சுயநன்மை மற்றும் தெரிவுச் சுதந்திரம் என்பவற்றில் தங்கியுள்ளது.

- தனியார் சொத்துரிமை என்பதனால் கருதப்படுவது தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் தம்மிடமுள்ள வளஙகளை தமது விருப்புக்கேற்ப பயன்படுத்தும் பொருட்டு நிலவும் சுதந்திரமானும்.

- தனியார் சொத்துரிமை உறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே சந்தை முறைமையினை பேணிச் செல்ல முடியும். தனது அறுவடையை மற்றொருவர் அபகரித்துச் செல்வார் என்ற நிலை காணப்பட்டால் எந்த ஒரு விவசாயியும் தமது நிலத்தை பயிர்ச்செய்கையில் ஈடுவமுத்த முன்வர மாட்டான். சொத்துரிமைப் பாதுகாப்பு இல்லாவிட்டால் சந்தைப் பொருளாதாரத்தில் பொருள்ளகள் மற்றும் சேவைகளின் உற்பத்தி மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும்.

(01 புள்ளி)

- வர்த்தகமும் பரிமாற்றமும் வினைத்திறனுடையதாக இயங்குவதில் சொத்துரிமை நேரடியாகத் தாக்கம் செலுத்தும். சந்தைப் பொருளாதார முறைமையில் பரிமாற்றம் சந்தைகறுடாகவே மேற்கொள்ளப்படுகின்றது. ஒருவர் மற்றவரோடு தன்னிச்சையாக கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்கு சொத்துரிமையை ஏற்றுக்கொள்வதும் அதனைப் பாதுகாப்பதும் அவசியமானதாகும்.

(01 புள்ளி)

- சந்தைப் பொருளாதாரமொன்றின் பிரசைகள் மூலதன வடிவில் செல்வத்தைத் திரட்டுவதற்கும், பொருளாதார வளர்ச்சிச் செயன்முறையில் பங்கேற்பதற்கும் உறுதியான சொத்துரிமைக் கட்டமைப்பு காணப்படல் அத்தியாவசியமாகும். ஒருவரின் சேமிப்பினை மற்றொருவர் கையகப்படுத்திக் கொள்ளலாம் என்பற சாத்தியம் இருப்பின் சேமிப்பு இடம்பெற மாட்டாது. அதன்றான ஊக்குவிப்பும் இருக்காது.

(01 புள்ளி)

- ஒழுங்காக வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ள சொத்துரிமைக் கட்டமைப்பு இல்லாவிடின் சந்தையானது வினைத்திறனற்றுக் காணப்படும். குறிப்பாக இயற்கை வளங்கள் குறித்து அவதானிக்கப்படும் நிலை யாதெனில் அவற்றிற்கு தனியால் சொத்துரிமை காணப்படாமையாகும். எனவே அவ்வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்த ஊக்குவிப்பு இல்லாதபடியினாலே அவை மிகைப்பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டு அழிவடையும் நிலை ஏற்படுகின்றது.

(01 புள்ளி)

1ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



01 ஆம் வினாவிற்கு சுமார் 9.7% பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளனர். (வரைபு 2) இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் உரித்தாகும்.

அதில் புள்ளி 0 - 5 ஆயிடையில் 18% மட்டும்
புள்ளி 6 - 10 ஆயிடையில் 29% மட்டும்
புள்ளி 11 - 15 ஆயிடையில் 39% மட்டும்
புள்ளி 16 - 20 ஆயிடையில் 14% மட்டும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.



இவ்வினாவில் 05பகுதிகள் உண்டு. இலகுதன்மை குறைந்த பகுதி (v) ஆகக் காணப்படுவதுடன் அதன் இலகுதன்மை 20% ஆகும். அதேபோல் பகுதி (i) இலகுதன்மை கூடிய பகுதியாகும். அதன் இலகுதன்மை 79% ஆகும்.

- முதலாம் வினாவைத் தெரிவு செய்துள்ள மாணவர்கள் 96.6% ஆகும். ஐந்து பகுதிகளைக் கொணடுள்ள வினாவின் முதலாம் பகுதியின் இலகுதன்மை 79% ஆகும். பொருளாதார வளங்களின் வகைகளைப் பெயரிட்டு அவற்றுக்கு உதாரணம் காட்டல் இவ்வினாவின் மூலம் கேட்கப்பட்டது. பெரும்பலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருப்பதன் மூலம் குறித்த எண்ணக்கரு தொடர்பாக போதியளவு அறிவு காணடப்பட்டமை புலப்படுகின்றது. பொருளாதார வளங்களை உதாரணத்துடன் தெளிவாக விளக்கக்கூடிய வகையில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளைத் தயாரித்தல் வேண்டும்.

- II ஆம் பகதியின் இலகுதன்மை 66% ஆகும். தாராள சந்தைப் பொருளாதாரமானது மத்திய திட்டமிடல் பொருளாதாரத்திலிருந்து எவ்வழிகளில் வேறுபடுகின்றது என்பதை ஒப்பிடக்கூடிய திறனைப் பரீட்சிப்பதற்கு இவ்வினா வழங்கப்பட்டுள்ளது. தாராள சந்தைப் பொருளாதாரம் மற்றும் மத்திய திட்டமிடல் பொருளாதாரம் என்பவற்றில் பண்புகளைத் தனித்தனியான முன்வைத்தல் இவ்வினாவிற்குப் புள்ளிகள் குறைவதற்கான காரணமாகும். இவ்வாறான வேறுபாடுகள் தொடர்பான வினாக்களுக்கு விடையளிக்கும்போது ஒப்பீட்டு ரீதியான விடைகள் வழங்குதல் முக்கியம் என்பதை பரீட்சார்த்திகளுக்கு புரியவைத்தல் வேண்டும்.

- III ஆம் பகுதியின் இலகுதன்மை 51% ஆகும். பொருளியலில் பணம், மூலதன வளமாகக் கவனத்திலெடுக்காமை தொடர்பாக இவ்வினா முன்வைக்கப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகளில் சுமார் அரைவாசிப்பேருக்கு மேல் பொருளாதாரத்தில் “மூலதனம்” என்ற எண்ணக்கரு தொடர்பாக சரியான விளக்கம் காணப்படவில்லை என்பது புலப்படுகின்றது. பொருளியலில் “மூலதனம்” என்ற எண்ணக்கரு பற்றிய சரியாக விளக்குவதுடன் பணம் மூலதனக் கருதப்படாமைக்கான காரணியை விளக்கக்கூடிய வகையில் கற்றல் - கற்பித்தல் தொழிற்பாடுகளை ஒழுங்கமைக்க வேண்டும்.

- IV ஆம் பகுதியின் இலகுதன்மை 54% ஆகும். முயற்சியாளர் என்பவர் யார் சந்தைப் பொருளாதாரமொன்றினுள் முயற்சியாளர் ஆற்ற வேண்டிய தொழிற்பாடுகள் தொடர்பாக இவ்வினா தயாரிக்கப்பட்டுள்ளது. முயற்சியாளர் யார் என்பது பற்றி பரீட்சார்த்திகளிடையே விளங்கக்கூடிய ஆற்றல் காணப்பட்டாலும் சந்தைப் பொருளாதாரத்தில் முயற்சியாளரால் ஆற்ற வேண்டிய தொழிற்பாடுகள் பற்றி பரீட்சார்த்திகளிடையே போதியளவு விளக்கம் காணப்படவில்லை. எனவே சந்தைப் பொருளாதாரமொன்றின் முயற்சியாளரினால் ஆற்ற வேண்டிய முக்கிய தொழிற்பாடுகள் பற்றிய கவனத்தை ஈர்க்கக்கூடிய முறையில் கற்றல் - கற்பித்தல் தொழிற்பாடுகள் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

- V ஆம் பகுதியின் இலகுதன்மை 20% ஆகும். தனியார் உரிமையும், தனியார் சொத்துரிமையைப் பாதுகாப்பும், சந்தைப் பொருளாதாரத்தின் வெற்றியைத் தீர்மானிப்பதில் ஏன் அதி முக்கியம் வாய்ந்தது என்பது தொடர்பாகக் கருத்துரை வழங்குவதாக இவ்வினா அமைந்துள்ளது. மிகவும் குறைந்தளவு பரீட்சார்த்திகள் சரியான விடையளித்துள்ளனர். சந்தைப் பொருளாதாரமானது தனியார் சொத்துரிமை, தனியார் முயற்சியாண்மை சுயநன்மை மற்றும் தெரிவுச் சுதந்திரம் என்ற தூண்களினாலே கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதும், தனியார் சொத்துரிமையைப் பாதுகாத்தல், பரிமாற்றல் வினைத்திறன் அதிகரிப்பதற்கும் முக்கியத்துவமானது என விளங்க வைக்கக்கூடிய வகையில் கற்றல் - கற்பித்தல் தொழிற்பாடுகளை ஒழுங்கமைத்தல் வேண்டும். அதேபோல் சந்தைப் பொருளாதாரத்தில் நிலவும் சொத்துகளின் வகை பற்றியும், அச்சொத்துகளின் உரிமையின் இயல்புகள் பற்றியும் பரீட்சார்த்திகளின் அறிவினை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

02 ஆம் வினா

2. (i) உற்பத்தி இயல்தகவு எல்லை என்றால் என்ன ? உற்பத்தி இயல்தகவு எல்லை ஒன்றை வரைவதில் நீர் கையாளும் எடுகோள்களைப் பட்டியலிடுக. (04 புள்ளிகள்)

(ii) உற்பத்தி இயல்தகவு எல்லையின் வெளிப்புற நகர்வை ஏற்படுத்தும் காரணிகள் யாவை ? (02 புள்ளிகள்)

(iii) அதிகரித்துச் செல்லும் எல்லை அமையச் செலவு என்பதனாற் கருதப்படுவதென்ன ? உற்பத்தி இயல்தகவு எல்லையின் வடிவம் தொடர்பில் இவ்வெண்ணக்கருவின் மூலம் வெளிப்படுத்தப்படுவதென்ன ? (04 புள்ளிகள்)

(iv) நெல் மற்றும் புடைவை உற்பத்தியில் ஈடுபடும், கூடிச்செல்லும் எல்லை அமையச் செலவை எதிர்நோக்கும் நாடொன்றின் உற்பத்தி இயல்தகவு எல்லையை வரைக. பின்வரும் நிகழ்வுகள் காரணமாக உற்பத்தி இயல்தகவு எல்லை எவ்வாறு மாற்றமடையுமெனக் காட்டுக.

(அ) முன்னேற்றகரமான புதிய வளமாக்கியொன்று கண்டுபிடிக்கப்படல்

(ஆ) இரு உற்பத்தித் துறைகளிலும் ஈடுபடுத்தத்தக்க ஊழியங்களின் எண்ணிக்கையில் பாரியளவிலான அதிகரிப்பு ஏற்படல்

(இ) அதிக வரட்சி நிலை காரணமாக பயன்பாட்டிலுள்ள பண்ணை நிலங்களின் அளவு 10% இனால் குறைவடைதல்

(ஈ) உற்பத்திச் செலவைக் குறைக்கும் வகையில் புடைவை உற்பத்தித் துறையில் புதிய தொழினுட்பம் கண்டுபிடிக்கப்படல் (06 புள்ளிகள்)

(v) உற்பத்தி வினைத்திறன் மற்றும் வள ஒதுக்கீட்டு வினைத்திறன் என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை எடுத்துக்காட்டுக. (04 புள்ளிகள்)

எதிர்பார்த்த விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

2 (i) - உற்பத்தி இயல்தகவு வளையி என்பது குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் பொருளாதாரத்தின் சகல உற்பத்தி வளங்களையும் தரப்பட்ட தொழினுட்ப மட்டத்தின் கீழ் உச்ச வினைத்திறனுடன் (நிறைதொழில் மட்டத்திலும் முழு உற்பத்தியுடனும்) பயன்படுத்தும்போது ஏதேனும் இரண்டு பொருள்கள் அல்லது சேவைகளை உற்பத்தி செய்யக் கூடிய உச்ச தொகைகளையும் அவற்றின் பல்வேறு பண்டச் சேர்க்கை புள்ளிகளையும் தொடர்புபடுத்தி வரையப்படும் கோடாகும்.

(02 புள்ளிகள்)

- எடுகோள்கள்
  - கருதப்படும் காலப்பகுதியில் வளங்களின் திரட்சி (அளவும், அவற்றின் தரமும்) மாறாதிருக்கும்.
  - தொழினுட்பம் மாறாதிருக்கும் (நிலையான தொழினுட்பம்).
  - உற்பத்திச் செயன்முறையில் வளங்கள் வினைத்திறனாகப் பயன்படுத்தப்படும் (பொருளாதாரத்தில் நிறை தொழில் மட்டமும் முழு உற்பத்தியும் காணப்படும்.)
  - வளங்கள் இரு பண்டங்களின் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் (வளங்கள் மாற்றுப் பயன்பாட்டுத் தன்மையைக் கொண்டவை.)

(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம் மொத்தம் 02 புள்ளிகள்)

(ii) - உற்பத்தி வளங்களின் திரட்சியின் விரிவாக்கம் (வளத்திரட்சி அதிகரித்தல்)
- தொழினுட்ப முன்னேற்றம்
- விளைதிறன் அதிகரிப்பு

(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம் மொத்தம் 02 புள்ளிகள்)

(iii) - அதிகரித்துச் செல்லும் அமையச் செலவு என்றால் உற்பத்தி இயல்தகவு வளையில் ஒரு பொருளின் உற்பத்தியை சம அலகுகளால் படிப்படியாக அதிகரிக்கும்போது அதன் பொருட்டு விட்டுக் கொடுக்க வேண்டியுள்ள மற்றைய பொருளின் அளவாகிய அமையச் செலவு படிப்படியாக அதிகரிக்கும் என்பதாகும்.

(02 புள்ளிகள்)

மாற்றீடான விடை :

- பொருளாதாரத்தின் எல்லா வளங்களையும் பூரணமாகப் பயன்படுத்தியுள்ளபோது யாதேனுமொரு பொருளின் உற்பத்தியை அதிகரிக்க முற்படும்போது அமையச் செலவு அல்லது மற்றைய பொருளில் விட்டுக் கொடுக்க வேண்டியுள்ள அளவானது அதிகரிக்கும் என்பதாகும்.

(02 புள்ளிகள்)

- அதிகரித்துச் செல்லும் அமையச் செலவு உற்பத்தி இயல்தகவு வளையின் தோற்றத்தை ஆரம்பப் புள்ளியிலிருந்து வெளிநோக்கி வளைந்துள்ளதாக மாற்றும். (வெளிநோக்கி குவிவான உற்பத்தி இயல்தகவு வளையி அல்லது உற்பத்திக்கு குழிவான உற்பத்தி இயல்தகவு வளையி)

(01 புள்ளி)

- அதிகரித்துச் செல்லும் அமையச் செலவு காணப்படும்போது கிடையச்சில் கருதப்படும் பொருளின் உற்பத்தி தொகையை சம அலகுகளால் அதிகரிக்கும்போது உற்பத்தி இயல்தகவு வளையின் சாய்வு / சரிவு படிப்படியாக அதிகரித்துச் செல்லும். (அதாவது எல்லை அமையச் செலவு அதிகரித்துச் செல்லும்)

(01 புள்ளி)

(iv)



(மேலே காட்டப்பட்டுள்ளவாறு ஆரம்பப்புள்ளிக்கு குழிவான உற்பத்தி இயல்தகவு வளையியைக் காட்டும் சரியான வரைபடத்திற்கு 02 புள்ளிகள்)

(அ) சிறந்த வளமாக்கி பயன்படுத்தப்படல்



(நெல்லுக்குக்கான அச்சில் வளையி வலப்புறமாகச் சுழன்றுள்ளது.)

(ஆ) ஊழியத்தின் அளவில் அதிகரிப்பு ஏற்படல்



(இரு அச்சுகளிலும் வளையி வலப்புறமாக நகர்ந்துள்ளது.)

(இ) வரட்சி காரணமாகப் பயிர்ச்செய்கை நிலங்களின் அளவு குறைதல்



(நெல்லுக்கான அச்சில் வளையி இமப்புறமாகச் சுழன்றுள்ளது.)

(ஈ) புடவை உற்பத்தியில் புதிய தொழினுட்பப்பயன்பாடு



(புடவைக்கான அச்சில் வளையி வலப்புறமாகச் சுழன்றுள்ளது.)

(சரியான ஒரு வரைபடத்திற்கு 01 புள்ளி வீதம் மொத்தம் 04 புள்ளிகள்)

(v) - உற்பத்தி வினைத்திறன் என்பது அதி தாழ்ந்த உற்பத்தி செலவின் கீழ் குறித்த பொருள் அல்லது வேவையை உற்பத்தி செய்வதைக் குறிக்கும்.
(அதாவது தரப்பட்ட உள்ளீட்டளவைப் பயன்படுத்தி உச்ச வெளியீட்டைப் பெறுவது அல்லது தரப்பட்ட வெளியீட்டளவை இதிகுறைந்த உள்ளீட்டளவை பயன்படுத்தி உற்பத்தி செய்வதை இது கருதும்.)

(01 புள்ளி)

உற்பத்தி வினைத்திறன் ஏற்பட நிறைதொழில் மட்டடும் முழு உற்பத்தியும் பெறப்படுவது அவசியமாகும். இந்நிலையில் பொருளாதாரமானது எப்போதும் உற்பத்தி இயல்தகவு வளையியின் மீதுள்ள ஒரு புள்ளியில் இயங்கும்.

(01 புள்ளி)

மாற்றீடான விடை :

- பொருளாதாரமானது மற்றைய பொருளின் உற்பத்தியை குறைக்காமல் குறைத்த ஒரு பொருளின் உற்பத்தியை அதிகரிக்க முடியாத நிலை காணப்படுமாயின் அதன்போது உற்பத்தியில் வினைத்திறன் ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படும். அதாவது பொருளாதாரமானது உற்பத்தி இயல்தகவு வளையின் மீது இயங்குகின்றது என்பதே இதன் கருத்தாகும்.

(02 புள்ளிகள்)

- வள ஒதுக்கீட்டு வினைத்திறன் என்பது பொருளாதாரத்தின் வளங்கள் சமூகத்திற்கு மிகவும் அவசியமான பொருள்கள் சேவைகளின் சேர்க்கையினை உற்பத்தி செய்வதில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும் நிலையினைக் குறிக்கும்.

(01 புள்ளி)

- இதனால் கருதப்படுவது யாதெனில் பொருளாதாரமானது உற்பத்தி இயல்தகவு வளையியின் மீதுள்ள உத்தமப் புள்ளியில் இயங்கும் நிலையாகும்.

- இத்தகைய உத்தம உற்பத்திப் புள்ளியானது குறித்த பொருள்களை உற்பத்தி செய்வதன் எல்லைச் செலவு அவற்றின் எல்லை நன்மைக்கு MC=MB அதாவது எல்லைச் செலவு பொருளின் விலைக்கு சமப்படும்போது MC=P பெறப்படும்.

(02 புள்ளிகள்)

2ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



02 ஆம் வினாவிற்கு சுமார் 97.89% பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளன. (வரைபு 2) இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் உரித்தாகும்.

அதில் புள்ளி 0 - 5 ஆயிடையில் 11% மட்டும்
புள்ளி 6 - 10 ஆயிடையில் 19% மட்டும்
புள்ளி 11 - 15 ஆயிடையில் 33% மட்டும்
புள்ளி 16 - 20 ஆயிடையில் 37% மட்டும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.



இவ்வினா 5 பகுதிகளைக் கொண்டுள்ளதுடன் அதன் இலகுதன்மை கூடிய பகுதி iv ஆகும். அதன் இலகுதன்மை 89% ஆகும். iii ஆகும் பகுதியின் இலகுதன்மை 54% ஆகும். அது இலகுதன்மை குறைந்த பகுதியாகும்.

- i ஆம் பகுதியின் இலகுதன்மை 69% ஆகும். உற்பத்தி இயல்தகவு எல்லை என்றால் என்ன என்பதற்கு பரீட்சார்த்திகளால் வழங்கப்பட்டுள்ள விடைகளில் பூரணமின்மையால் குறைந்த புள்ளிகளைப் பெற ஏதுவாயுள்ளது. உற்பத்தி இயல்தகவு எல்லையை வரையும்போது மேற்கொள்ளும் எடுகோள்கள் பற்றி பெரும்பாலான பரீட்சார்த்திகள் மிகவும் சரியாக விடையளித்துள்ளனர்.

- ii ஆம் பகுதியின் இலகுதன்மை 71% ஆகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையளித்துள்ளனர். உற்பத்திச் இயல்தகவு எல்லை வலது புறமாக நர்வதற்குக் காரணம் பொருளாதார வளர்ச்சி என்பதைக் கூறியிருந்தாலும் அதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை எழுதத் தவறியுள்ளனர். வள ஒதுக்கீடு அதிகரித்தலும் காரணிகளின் விளைதிறன் அதிகரித்தலும் உற்பத்திச் சாத்திய எல்லை வளையி வலதுபுறம் நகர்வதற்குக் காரணமாகும் என்பதை விளங்கக்கூடிய வகையில் கற்றல் கற்பித்தல் தொழிற்பாடுகள் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

- iii ஆம் பகுதியின் இலகுதன்மை 54% ஆகும். இரண்டாம் வினாவில் பரீட்சார்த்திகளால் மிகவும் குறைந்த புள்ளிகளைப் பெற்ற பகுதியாகும். அதிகரித்துச் செல்லும் எல்லை அமையச் செலவு பற்றி பரீட்சார்த்திகளால் விளக்கமான விடையளிக்கப்பட்டிருந்தது. எனினும், இவ்வெண்ணக்கருவினால் விளக்கப்படுவது என்ன என்பதை விளக்குவதற்கு பரீட்சார்த்திகள் தவறிவிட்டனர். அமையச்செலவின் போக்குக்கும் உற்பத்திச் இயல்தகவு எல்லை வளையியின் தன்மைக்கும் இடையிலான தொடர்பையும் உறுதிப்படுத்தக்கூடிய வகையில் கற்றல் - கற்பித்தல் தொழிற்பாடுகளை ஒழுங்கமைத்தல் வேண்டும்.

- iv ஆம் பகுதியின் இலகுதன்மை 89% ஆகும். பரீட்சார்த்திகள் இதில் குறைந்த புள்ளிகளைப் பெற்ற பிரிவு (இ) ஆகும். அதன் இலகுதன்மை 67% ஆகும். அதற்கான காரணம் பயிர்செய்கை நிலம் குறைவடைதல் என்பது வள ஒதுக்கீடு தொகுதியின் குறைவு என இனங்காணப்படாமையாகும். இதன்படி உற்பத்தி இயல்தகவு எல்லை வளையி இடது புறமாக நகரும் சந்தர்ப்பத்தையும் வளையினுள்ளே ஒரு புள்ளிக்கு மாறும் சந்தர்ப்பத்தையும் பிரயோக ரீதியாக பயன்படுத்தி சரியான முறையில் கற்றல் - கற்பித்தல் தொழிற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

- v பகுதியின் இலகுதன்மை 56% ஆகும். இப்பகுதிக்கு பெறப்பட்ட புள்ளிகளும் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. உற்பத்தியின் வினைத்திறன் என்பதை பரீட்சார்த்திகள் சரியான விளங்கியிருக்கவில்லை. முக்கியமான வளப்பங்கீட்டின் வினைத்திறன் நிலவும்போது விலையானது எல்லைச் செலவுக்கு (P =MC) சமன் என்பதைக் கூற பரீட்சார்த்திகள் தவறியுள்ளனர். எனவே வளப்பங்கீட்டின் வினைத்திறனின்போது விலை எல்லைச் செலவிற்கு சமமாகும். (P =MC) என்பதை கற்றல் - கற்பித்தல் தொழிற்பாட்டின்போது கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

03 ஆம் வினா

3. (i) நுகர்வுப் பொருளொன்றின் விலைக் கேள்வி நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகள் எவை ? (04 புள்ளிகள்)

(ii) கீழ்நோக்கிச் சரிந்து செல்லும் நேர்கோட்டுக் கேள்வி வளையியொன்றின் உயர்ந்தபட்ச விலை நிலவும் வீச்சில் கேள்வியானது விலை நெகிழ்வுள்ளதாயும் குறைந்தபட்ச விலை நிலவும் வீச்சில் விலை நெகிழ்வற்றதாயும் இருப்பது ஏன் ? (04 புள்ளிகள்)

(iii) பின்வரும் பொருள்களின் வருமானக் கேள்வி நெகிழ்ச்சிப் பெறுமதிகளின் அடிப்படையில் அவற்றை நீர் எவ்வாறு ஆடம்பரப் பொருள், அத்தியாவசியப் பொருள், இழிவுப் பொருள் என வகைப்படுத்துவீர ?

(அ)	போத்தலில் அடைக்கப்பட்ட நீர்	1.3
(ஆ)	கௌபி	– 0.8
(இ)	பாண்	0.5
(ஈ)	செல்லிடத் தொலைபேசி	1.8

(04 புள்ளிகள்)

(iv) பின்வரும் வரைபடம் போட்டிச் சந்தையொன்றில் விற்கப்படும் பொருளொன்றின் கேள்வி, நிரம்பல் வளையிகளைக் காட்டுகிறது.
அரசாங்கம் இச்சந்தையின் உற்பத்தியாளர் மீது அப்பொருளின் அலகொன்றுக்கு ரூ. 60 வரி விதிப்பதாகக் கொள்க.



(அ) வரியின் காரணமாக நுகர்வோன் மிகையானது எந்தளவினால் மாற்றமடையும் ? (02 புள்ளிகள்)
(ஆ) வரியின் காரணமாக உற்பத்தியாளர் மிகையானது எந்தளவினால் மாற்றமடையும் ? (02 புள்ளிகள்)
(இ) வரியின் மூலமாக அரசாங்கம் எந்தளவினை வருவாயாகத் திரட்டும் ? (02 புள்ளிகள்)
(ஈ) வரியினால் ஏற்படும் மீளமுடியா இழப்பின் அளவினைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

எதிர்பார்த்த விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

(3) (i)
- பதிலீட்டுப் பொருள்களின் கிடைப்பனவு (பதிலீடுகளின் எண்ணிக்கையும் தன்மையும்)
- நுகர்வோன் வருமானத்தில் குறித்த பொருளுக்காக செலவிடப்படும் சதவீதம் **(1 புள்ளி)**
- கருதப்படும் பொருள் அத்தியாவியப் பண்டமா அல்லது ஆடம்பரப் பண்டமா எனும் தன்மை (பொருளின் தன்மை)
- பொருள் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ள விதம்
(பொருள் பரந்த வீச்செல்லைக்குள் வருமா இல்லையா என்பது)
- பொருள் பயன்படும் எண்ணிக்கை / விதம் (பயன்பாடுகளின் எண்ணிக்கை)
- விலை மாற்றத்தின் பின் கடந்துள்ள காலம்

(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம் ஏதேனும் 04 விடயங்களுக்கு 04 புள்ளிகள்)

(ii)
- கீழ் நோக்கிச் சரிந்து செல்லும் நேர்கோட்டுக் கேள்விவளையின் விலைக் கேள்வி நெகிழ்ச்சியைக் கணிப்பிடும் சூத்திரம். $= \frac{\Delta Q}{\Delta P} \text{ X } \frac{Q}{P}$
- இச்சூத்திரத்தின் இடப்புறமுள்ள பகுதியானது கேள்வி வளையின் சாய்வினை அல்லது சாய்வின் தலைகீழ்ப் பெறுமதியைக் காட்டும்.
நேர்கோட்டுக் கேள்வி வளையில் இதன் பெறுமதி நிலையானதாகக் காணப்படும்.

எனவே நேர்கோட்டுக் கேள்வியின் மீது விலைக் கேள்வி நெகிழ்ச்சிக் குணகத்தின் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள் சூத்திரத்தின் வலப்புறமுள்ள $[\frac{P}{Q}]$ என்னும் பெறுமதிகளில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாகவே ஏற்படுகின்றது.

(02 புள்ளிகள்)

- இதன்படி கேள்வி வளையியில் உயர் விலைகள் நிலவும் வீச்சினுள் மேல் நோக்கி அசையும்போது நெகிழ்ச்சிக் குணகத்தின் பெறுமதி குறைவடையும்.

(01 புள்ளி)

- கேள்வி வளையின் குறைந்த விலை வீச்சினுள் விலைகள் குறைவாகையால் கேள்வி வளையியில் கீழ் நோக்கிச் செல்லும்போது நெகிழ்ச்சிக் குணகத்தின் பெறுமதி குறைவடையும்.

(01 புள்ளி)

(iii)
- போத்தலில் அடைக்கப்பட்ட நீர் : ஆடம்பரப்பொருள்
- கௌபி : இழிவுப்பொருள்
- பாண் : அத்தியாவசியப் பொருள்
- செல்லிடத் தெலைபேசி : ஆடம்பரப்பொருள்

(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம் 04 புள்ளிகள்)

(iv) (அ) நுகர்வோன் மிகையில் ஏற்படும் வீழ்ச்சி : ரூபா. 45,000
[வரிக்கு முன் நுகர்வோன் மிகை : 60,000
வரியின் பின் நுகர்வோன் மிகை : 15,000]

(02 புள்ளிகள்)

(ஆ) உற்பத்தியாளன் மிகையில் ஏற்படும் வீழ்ச்சி : ரூபா. 45,000
[வரிக்கு முன் உற்பத்தியாளன் மிகை : 60,000
வரியின் பின் உற்பத்தியாளன் மிகை : 15,000]

(02 புள்ளிகள்)

(இ) வரியின் காரணமாக கிடைக்கும் அரச வருவாய் : ரூபா. 60,000
[90 - 30 × 1,000 = 60,000]

(02 புள்ளிகள்)

(ஈ) வரியின் காரணமாக ஏற்படும் மீளமுடியா பொருளதார மிகை இழப்பின் அளவு : ரூபா. 30,000
[(60 × 1,000) / 2 = 30,000]

(02 புள்ளிகள்)

3ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



03 ஆம் வினாவிற்கு சுமார் 61.2% பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளன். (வரைபு 2) இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் உரித்தாகும்.
அதில் புள்ளி 0 - 5 ஆயிடையில் 24% மட்டும்
புள்ளி 6 - 10 ஆயிடையில் 24% மட்டும்
புள்ளி 11 - 15 ஆயிடையில் 27% மட்டும்
புள்ளி 16 - 20 ஆயிடையில் 25% மட்டும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.



இவ்வினா iv பகுதிகளைக் கொண்டுள்ளது. இலகுதன்மை குறைந்த பிரிவு (ii) ஆகக் காணப்படுவதுடன் அதன் இலகுதன்மை 27% ஆகும். இலகுதன்மை கூடிய பகுதி (iii) ஆகக் காணப்படுவதுடன் இதன் இலகுதன்மை 94% ஆகும்.

- I ஆம் பகுதியின் இலகுதன்மை 48% ஆகும். விலைக் கேள்வி நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகள் தொடர்பாக வினவப்பட்டுள்ளதுடன் குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகள் மேற்படி வினாவினை சரியாக விளங்கவில்லை. கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகளினதும் கேள்வி நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகளினதும் வேறுபாடு சரியான முறையில் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளைத் தயாரித்தல் அவசியமாகும்.

- II ஆம் பகுதியின் இலகுதன்மை 27% ஆகும். விலைக்கேள்வி நெகிழ்ச்சி ஒரே கேள்ளிக் கோட்டில் வழியே புள்ளிக்குப் புள்ளி மாற்றமடையும் முறை பற்றிய விளக்கம் பெரும்பாலான பரீட்சார்த்திகளிடம் காணப்படவில்லை என்பது இதன் மூலம் புலனாகின்றது. விலைக் கேள்வி நெகிழ்ச்சியினைத் தீர்மானிப்பது கேள்வி வளையியின் சாய்வுப் பெறுமதியன்று விலைக்கும் தொகைக்கும் இடையிலான விகிதாசாரத்தில் ஏற்படும் மாற்றத்தினாலாகும் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் பயிற்சிகள் வழங்குவதன் மூலம் பரீட்சார்த்திகளின் சாதனை மட்டத்தை அதிகரிக்கலாம்.

⋆ III (அ) பகுதியின் இலகதன்மை 94% ஆகும். (ஈ) பகுதியின் இலகுதன்மை 92% ஆகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் ஆடம்பரப் பண்டங்கள் தொடர்பாக வருமானக் கேள்வி நெகிழ்ச்சிளை இனங்காண்பதில் உயர் திறமையை வெளிப்படுத்தி இருந்தனர்.

(ஆ) பகுதியின் இலகுதன்மை 91% ஆகும். இழிவு பண்டம் தொடர்பாக வருமானக் கேள்வி நெகிழ்ச்சி மறைக் கணியம் பெறும் என்பதை பரீட்சார்த்திகளில் அதிக சதவீதத்தினர் விளங்கி இருந்தனர்.

(இ) பகுதியின் இலகுதன்மை 85% ஆகும். அத்தியாவசிய பண்டம் தொடர்பாக வருமானக் கேள்வி நெகிழ்ச்சி நேர் கணியம் ஒன்றுக்குக் குறைந்த பெறுமதியைப் பெறுவது அத்தியாவசியப் பண்டம் தொடர்பான என பரீட்சார்த்திகள் இனங்கண்டுள்ளனர். வருமானக் கேள்வி நெகிழ்ச்சிக் குணகத்தின் பெறுமதியின் படி பண்டங்களை வகைப்படுத்தும் திறனை வளர்த்தல் வேண்டும்.

⋆ IV (அ) பகுதியின் இலகுதன்மை 67% ஆகும். நிரம்பல் வளையியையும் நிரம்பல் அட்டவணையையும் பயன்படுத்தி பண்ட வரி அறவிடுவதன் விளைவுகளைக் கணிப்பிடும் திறன் பரீட்சார்த்திகளுக்கு குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை இவ் உப பிரிவின் கடின தன்மைக்குக் காரணமாகும். வரைபு அட்டவணையில் நுகர்வோர் மிகையைச் சரியாகக் காட்டுவதற்கும் பிரதேசத்தை இனங்கண்டு பரப்பளவைக் கணிப்பிடுவதற்கும் அவற்றின் வேறுபாடுகளை இனங்காண்பதற்கும் பரீட்சார்த்திகளின் திறனை வளர்க்கக் கூடிய விதத்தில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைக்குக.

(ஆ) பகுதியின் இலகுதன்மை 60% ஆகும். இப்பகுதியின் இலகுதன்மை குறைவதற்குக் காரணம் அலகு வீத வரிவிதிப்பதனால் ஏற்படும் விளைவைக் கவனிக்கும்போது வரைபில் உற்பத்தி மிகையை சரியாக இனங்கண்டு பரப்பளவை கணிப்பிடுவதற்கும், வரி விதிக்க முன்னும் பின்னும் மிகையில் ஏற்படும் மாற்றங்களை இனங்காண்பதற்கும் பரீட்சார்த்தியின் திறனை வளர்க்கக் கூடிய விதத்தில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல் வேண்டும்.

(இ) பகுதியின் இலகுதன்மை 63% ஆகும். இப்பகுதியின் இலகுதன்மை குறைவடைவதற்கான காரணம் கேள்வி நிரம்பல் வளையியை உள்ளடக்கிய வரைப்படத்தில் வரியின் பின் அரசுக்குக் கிடைக்கும் வரி வருமானத்தைக் காட்டும் பிரதேசத்தை இனங்காண்பதற்கும், வரி வருமானத்தின் அளவைக் கணிப்பிடவும் பரீட்சார்த்தியிடம் காணப்படும் விளக்கமின்மையே காரணமாகும். வருமானத்தைக் காட்டும் பிரதேசத்தை வரைபடம் மூலம் சரியாக இனங்காண்பதற்கும் அப்பிரதேசத்தின் பரப்பளவை கணிப்பிடுவதற்குமான திறனை வளர்க்கும் வித்தில் கற்றல் - கற்பித்தல் முறைமையைப் பயன்படுத்தல் வேண்டும்.

(ஈ) பகுதியின் இலகுதன்மை 56% ஆகும். மீளமுடியா இழப்பின் அளவு என்ற எண்ணக்கருவை பரீட்சார்த்திகள் இனங்காணவில்லை என்பது புலனாகின்றது. வரி விதிப்பதனூடாக கேள்வி நிரம்பல் வரைபடத்தில் மீளமுடியா இருப்பின் அளவை காட்டும் பிரதேசத்தைச் சரியாக இனங்காண்பதற்கும், அதனைக் கணிப்பிடுவதற்கும் பரீட்சார்த்தியிடம் விளங்கும் தன்மை காணப்படவில்லை. இதன் படி மீளமுடியா இழப்பின் அளவை சரியாக இனங்காண்பதற்கும், அதனைக் கணிப்பிடுவதற்குமான திறனை வளர்க்கக்கூடிய விதத்தில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல் பொருத்தமானது. மீளமுடியா இழப்பின் அளவு மூலம் இழக்கப்படும் சமூக நலனே காணப்படுகின்றது என்பதை பரீட்சார்த்தி விளங்கிக்கொள்ளவில்லை. எனவே கணிப்பீடு சரியானதாக இல்லை.

04 ஆம் வினா

4. (i) குறைந்து செல்லும் விளைவு விதி மற்றும் குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு விதி என்பவற்றிற்கிடையிலான வேறுபாடு யாது ? (04 புள்ளிகள்)

(ii) எல்லைச் செலவு, மொத்த சராசரிச் செலவு என்பவற்றிற்கிடையிலான தொடர்பினை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) உற்பத்தியாளன் மிகை, பொருளியல் இலாபம், பொருளியல் வாடகை ஆகிய எண்ணக்கருக்களை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) நிறைபோட்டிக் கைத்தொழிலிலுள்ள நிறுவனமொன்று சந்தை விலைக்குக் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ ஒரு விலையை **அறவிடாதது** ஏன் ? (04 புள்ளிகள்)

(v) பின்வரும் வரைபடம் குறுங்காலத்தில் நிறைபோட்டிச் சந்தையொன்றிலுள்ள நிறுவனமொன்றின் கேள்வி மற்றும் செலவு வளையிகளைக் காட்டுகிறது.



(அ) ரூ. 160 சந்தை விலையில் நிறுவனம் உழைக்கும் இலாபத்தைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) நிறுவனம் எந்த விலையில் தொழில் நிறுத்தம் செய்யத் தீர்மானிக்கும் ? (02 புள்ளிகள்)

எதிர்பார்த்த விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

04. (i) - குறுங்கால உற்பத்திச் செயன்முறையில் நிலையான உள்ளீட்டுடன் மாறும் உள்ளீடுகளின் அளவை அதிகளவில் உற்பத்தியில் ஈடுபடுத்தும்போது மாறும் உள்ளீடுகளின் எல்லையுற்பத்தியும் சராசரி உற்பத்தியும் குறிப்பிட்ட ஒரு மட்டத்தின் பின்னர் குறைவடைய ஆரம்பிப்பதையே குறைந்து செல்லும் விளைவு' எனக் குறிப்பிடப்படுகின்றது.

(02 புள்ளிகள்)

- நீண்டகால உற்பத்திச் செயன்முறையில் சகல உள்ளீடுகளையும் ஏதேனுமொரு சதவீதத்தினால் அதிகரிக்கம்போது உள்ளீடுகளை அதிகரித்த சதவீதத்தை விடக் குறைவானதொரு வேகத்தில் வெளியீடானது அதிகரிக்குமாயின் அதனை 'குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு' எனலாம்.

(02 புள்ளிகள்)

(ii) - வெளியீட்டை மேலதிக ஓரலகினால் அதிகரிக்கும்பொது மொத்தச் செலவில் ஏற்படும் அதிகரிப்பின் அளவு எல்லைச் செலவெனப்படும். சராசரி மொத்தச் செலவென்பது சராசரி மாறுஞ் செலவு மற்றும் சராசரி நிலையான செலவு என்பவற்றின் கூட்டுத்தொகையாகும். வேறு விதமாகக் கூறுவதாயின் மொத்த செலவை வெளியீட்டு அலகுகளின் எண்ணிக்கையினால் பிரிப்பதன் மூலம் பெறப்படும் பெறுமதியாகும்.

(01 புள்ளி)

- எல்லைச் செலவு சராசரி மொத்தச் செலவை விடக் குறைவாக உள்ளபோது சராசரி மொத்தச் செலவபனது குறைவடைந்து செல்லும்.

(01 புள்ளி)

- எல்லைச் செலவு சராசரி மொத்தச் செலவை விடக் கூடுதலாக உள்ளபோது சராசரி மொத்தச் செலவானது அதிகரித்துச் செல்லும்

(01 புள்ளி)

- சராசரி மொத்தச் செலவின் அதிதாழ்ந்த (இழிவுப் புள்ளியல்) புள்ளியில் எல்லைச் செலவு வளையியானது சராசரி மொத்தச் செலவு வளையியை கீழிருந்து மேலாக வெட்டிச் செல்லும்.

(01 புள்ளி)

(iii) - குறித்த ஒரு பொருளின் சந்தை விலையிலிருந்து அப்பொருளின் குறைந்தபட்ச நிரம்பல் விலையினை (எல்லைச் செலவை) அதாவது அப்பொருளை உற்பத்தி செய்வதன் அமையச் செலவைக் கழித்துப் பெறப்படும் பெறுமதி உற்பத்தியாளன் மிகையாகும். பொருளின் விலை அதன் எல்லைச் செலவை விடய உயர்வாகக் காணப்படும்போது உற்பத்தியானள் மிகையொன்றை அனுபவிக்கின்றான்.

(01 புள்ளி)

- முழு உற்பத்தியாளன் மிகை என்பது குறித்த ஒரு வெளியீட்டு மட்டத்தில் உற்பத்தியாளனின் மொத்த வருவாயிலிருந்து உற்பத்தியின் பொருட்டு ஏற்பட்ட மொத்த மாறும் செலவைக் கழிக்க வரும் பெறுமதியாகும்.

(01 புள்ளி)

- பொருளியல் இலாபம் என்பது உற்பத்தி நிறுவனம் தனது மொத்த வருவாயிலிருந்து உற்பத்தியின் பொருட்டு ஏற்பட்ட அமையச் செலவைக் கழிக்க வரும் பெறமதியாகும். உற்பத்தி நிறுவனத்தின் அமையச் செலவென்பது அதன் வெளிப்படையான (நேர்ச்) செலவுகளையும் உள்ளார்ந்த செலவுகளையும் கூட்ட வருவதாகும்.

(01 புள்ளி)

- [மாற்றீடான விடை : பொருளியல் இலாபம் என்பது நிறுவனத்தில் மொத்த வருவாயிலிருந்து மொத்த மாறுஞ் செலவையும் மொத்த நிலையான செலவையும் (அதாவது மொத்தச் செலவை) கழித்துப் பெறப்படும் பெறுமதியாகும்.]

(01 புள்ளி)

- பொருளியல் வாடகை என்பது ஏதேனுமொரு உற்பத்திக் காரணியின் உரிமையாளனுக்கு அக்காரணியை தற்போது ஈடுபடுத்தியுள்ள உற்பத்தி நடவடிக்கையில் தொடர்ந்து வைத்திருக்கும் பொருட்டு வழங்க வேண்டிய பணப்பெறுமதியை விட கூடுதலாக் கிடைக்கும் அளவைக் கருதும்.

(02 புள்ளிகள்)

- [மாற்றீடான விடை : பொருளியல் வாடகை என்பது யாதேனும் ஒரு உற்பத்தி காரணியின் மாற்றல் கொடுப்பனவைவிடக் கூடுதலாகப் பெற்றுக்கொள்ளும் பணத்தின் அளவாகும்.]

- உற்பத்திக்காரணிகள் தமது அமையச் செலவை விட மேலதிகமாகப் பெறும் வருமானம் பொருளியல் வாடகையாகும்.

(02 புள்ளிகள்)

(iv) - நிறைபோட்டித் தொழிலுள்ள நிறுவனங்கள் விலையை ஏற்கும் நிறுவனங்களாகும். விலை ஏற்கும் நிறுவனம் என்பது சந்தை விலையில் செல்வாக்குச் செலுத்த இயலாத காரணத்தினால் சந்தையில் நிலவும் விலையை அறவிட்டு உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனமாகும்.

(01 புள்ளி)

- நிறைபோட்டி நிறுவனமொன்று விலை ஏற்போனாக இருக்க காரணம் இது மொத்த சந்தை வெளயீட்டில் மிக மிகக் குறைந்த அளவை மட்டும் உற்பத்தி செய்வதும், உற்பத்தி நிறுவனங்கள் அறவிடும் விலை பற்றி வாடிக்கையாளர்கள் பூரண தகவல்களைப் பெற்றிருப்பதுமாகும்.

(01 புள்ளி)

- இந்நிலையின் கீழ் எந்த ஒரு நிறுவனமும் சந்தையில் நிலவும் விலையை விடக் கூடுதலான ஒரு விலையை அறவிடுமாயின், எந்த ஒரு வாடிக்கையாளரும் அந்நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்ய மாட்டார்கள். ஏனெனில் அந்நிறுவனம் உற்பத்தி செய்யும் பொருளுக்கு சமமான பொருள்களை சந்தை விலையில் ஏனைய நிறுவனங்களிலிருந்து வாங்கக் கூடியதாக இருப்பதனாலாகும்.

(01 புள்ளி)

- எந்த ஒரு நிறுவனமும் சந்தை விலைக்கு குறைவான விலையை அறவிடுமாயின் ஏறாளமான எண்ணிக்கையில் வாடிக்கையாளரை பெற்றுக்கொள்ள முடியுமாயினும் அந்நிறுவனத்தினால் இலாபத்தை அதிகரிக்க முடியாது. ஏனெனில் அந்நிறுவனத்தின் உற்பத்தி முழுவதையும் நிலவும் சந்தை விலையிலேயே விற்றுத் தீர்க்க வேண்டியுள்ளதனாலாகும். இதனால் நிலவும் சந்தை விலையில் விற்பனை செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளும் பெறுமதியை விட சிறப்பான ஒரு பெறுமதியை வேறொரு விலையை அறவிடுவதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியாது.
எனவே நிறைபோட்டி நிறுவனம் விலையை ஏற்கும் நிறுவனமாகவே தொழிற்படும்.

(01 புள்ளி)

(v) (அ) ரூபா 160 சந்தை விலையில் இலாபம் :

இலாபம்	=	மொத்த வருவாய் (TR) - மொத்த செலவு (TC)
TR	=	$160 \times 40 = 6,400$
TC	=	ATC $\times$ மொத்த வெளியீடு (= 40)
TC	=	$100 \times 40 = 4,000$
இலாபம்	=	6,400 - 4,000 = ரூபா 2,400

(02 புள்ளிகள்)

(ஆ) நிறுவனம் உற்பத்தியை நிறுத்துவதற்கு தீர்மானிக்கும் விலை :
குறைந்தபட்சம் சராசரி மாறும் செலவாகும். அதாவது ரூபா. 40 ஆகும்.

(02 புள்ளிகள்)

4ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



04 ஆம் வினாவிற்கு சுமார் 36% பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளன். (வரைபு 2) இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் உரித்தாகும்.

அதில் புள்ளி 0 - 5 ஆயிடையில் 23% மட்டும்
புள்ளி 6 - 10 ஆயிடையில் 31% மட்டும்
புள்ளி 11 - 15 ஆயிடையில் 32% மட்டும்
புள்ளி 16 - 20 ஆயிடையில் 14% மட்டும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.



இவ்வினாவில் v பகுதிகள் உண்டு. இலகுதன்மை குறைந்த பகுதி (ii) ஆகக் காணப்படுவதுடன் அதன் இலகுதன்மை 38% ஆகும். இலகுதன்மை கூடிய பகுதி (i) ஆகக் காணப்படுவதுடன் அதன் இலகுதன்மை 69%ஆகும்.

- I பகுதியின் இலகுதன்மை 69% ஆகும். I ஆம் பகுதியின் மூலம் உற்பத்திக் கோட்பாட்டுடன் தொடர்புடைய குறைந்து செல்லும் விளைவுக்கும் குறைந்தது செல்லும் அளவுத்திட்ட விளைவுக்கும் இடையிலான வேறுபாடு வினவப்பட்டுள்ளது. கடந்தகால பரீட்சைகளின்போதும் இப்பிரச்சினைக்கு பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையை அளித்திருந்தனர். குறுங்கால உற்பத்தித் தொழிற்பாட்டின்போது குறைந்து செல்லும் விளைவும், நீண்ட காலத்தில் உற்பத்திச் செயற்பாட்டின்போது குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவையும் சரியாக வரைவிலக்கணப்படுத்தி அவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை இனங்காண்பதற்கு குறிப்பிட்டளவு பரீட்சார்த்திகள் தவறியுள்ளமையால் குறிப்பிட்ட தலைப்பு தொடர்பாக அட்டவணை, வரைபு என்பவற்றைப் பயன்படுத்தி அறிவை விருத்தி செய்தல் வேண்டும்.

- ⋆ II ஆம் பகுதியின் இலகுதன்மை 38% ஆகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையளிக்கத் தவறியுள்ளமையை இது காட்டுகின்றது. இவ்வினாவின் மூலம் எல்லைச் செலவுக்கும் சராசரி மொத்தச் செலவுக்கும் காணப்படும் தொடர்பு பற்றியக் கேட்கப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் எல்லைச் செலவையும், மொத்தச் சராசரிச் செலவையும் வரைவிலக்கப்படுத்தியிருந்தாலும் இவ்விரு செலவுகளினதும் எண்ணக்கருக்களுக்கும் இடையே காணப்படும் தொடர்பை விளக்கத் தவறியுள்ளனர். எல்லைச் செலவு சராசரி மொத்தச் செலவை விடக் குறைந்த பெறுமானம் கொண்டதாகக் காணப்பட்டால் சராசரி மொத்தச் செலவானது வீழ்ச்சியடையும் என்பதும் எல்லைச் செலவு சராசரி மொத்தச் செலவை விட கூடிய பெறுமதி கொண்டதாகக் காணப்பட்டால் சராசரி மொத்தச் செலவு அதிகரிக்கும் என்பதே விளங்கக்கூடிய வகையில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை விருத்தி செய்தல் வேண்டும்.

- ⋆ III ஆம் பிரிவின் இலகுதன்மை 51% ஆகும். பரீட்சார்த்திகளில் சுமார் அரைவாசிப்பேர் சரியான விடையளிக்கத் தவறியுள்ளனர். உற்பத்தி மிகை, பொருளியல் இலாபம், பொருளியல் வரி வாடகை போன்ற எண்ணக்கருக்கள் பற்றி இவ்வினாவின் மூலம் வினவப்பட்டுள்ளது. உற்பத்தி மிகையை பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக வரைவிலக்கப்படுத்தியிருந்தாலும், பொருளியல் இலாபம், பொருளியல் வாடகை என்ற எண்ணக்கருக்களை சரியாக வரைவிலக்கணப்படுத்தத் தவறியுள்ளமையினால் பரீட்சார்த்திகளின் இலகுதன்மை 51% இற்கு வரையறுக்கப்பட்டுள்ளது. குறித்த எண்ணக்கருக்களை சரியாக வரைவிலக்கணப்படுத்தவும் அவ் எண்ணக்கருக்களுக்கு இடையிலான வேறுபாட்டுக்கான காரணங்களை முன்வைக்கக்கூடிய முறையில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை விருத்தி செய்தல் வேண்டும்.

- ⋆ IV ஆம் பகுதியின் இலகுதன்மை 42% ஆகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் தவறான விடையளித்துள்ள பகுதியாகும். இவ்வினாவின் மூலம் நிறை போட்டித் தொழிலில் உள்ள ஒரு நிறுவனம் சந்தை விலையை விட உயர்வாகவோ குறைவாகவோ விலையைத் தெரிவு செய்யாமைக்கான காரணம் என்ன என்பது வினவப்பட்டுள்ளது. நிறைபோட்டி நிறுவனம் சந்தை விலையை ஏற்போனாக உள்ளனர் என்பதை பெரும்பாலான பரீட்சார்த்திகள் கூறியிருந்தாலும், சந்தை விலையை விட உயர்வாகவோ, குறைவாகவோ விலையைத் தெரிவு செய்வதில்லை என்பதை விளக்கத் தவறியுள்ளர். சந்தை நிரம்பலில் மிகவும் சிறிய பங்கை வழங்கும் நிறைபோட்டி நிறுவனம் ஒன்று தமது நிரம்பலைக் குறைத்தாலும் விலையைக் கூட்டமுடியாது. சந்தை விலையின் என்பதும் தமது உற்பத்தியை சந்தை விலையின் கீழ் விற்பனை செய்ய முடியும் என்பதனால் விலையைக் குறைப்பதற்கான அவசியம் இல்லை என்பதை விளங்க வைத்தல் வேண்டும்.

- ⋆ V (அ) பகுதியின் இலகுதன்மை 56% ஆகும். நிறைபோட்டி நிறுவனமொன்றில் எல்லை வருமானத்தையும் செலவையும் முன்வைத்து, வழங்கப்பட்ட வரைபடம் மூலம் நிறுவனம் உழைக்கும் இலாபம் எவ்வளவு என்பதை இப்பகுதி மூலம் காட்டுவதாகும். அரைவாசிக்கு மேற்பட்ட சதவீதத்தினர் சரியாக இலாபத்தைக் கணிப்பிட்டாலும் சில பரீட்சார்த்திகளுக்கு சராசரி வருமானம் மூலம் மொத்த வருமானம், மொத்த செலவு மூலம் மொத்தச் செலவைக் கணிப்பிட்டு இலாபத்தைக் கணப்பிடும் முறையை விருத்தி செய்தல் வேண்டும்.

  (ஆ) பகுதியின் இலகுதன்மை 75% ஆக உயர்வாகக் காணப்படுவதன் மூலம் பெரும்பாலான பரீட்சார்த்திகள் உற்பத்தியை நிறுத்தும் விலை, நிறுவனத்தின் அதிகுறைந்த சராசரி மாறும் செலவு என இனங்கண்டுள்ளமையினாலாகும்.

05 ஆம் வினா

5. (i) கூட்டப்பட்ட பெறுமதி என்றால் என்ன ? அது எவ்வாறு கணிப்பிடப்படுகிறது ? (04 புள்ளிகள்)

(ii) மொத்த வருமானத்தின் பிரதான கூறுகளைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(iii) பின்வரும் பரிமாற்றல்கள் ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்கப்படுமா, இல்லையா என்பதை விளக்குக.

(அ) சுற்றுலா ஹோட்டலொன்று வெளிநாடொன்றில் உற்பத்தி செய்யப்பட்ட, கொள்கலனில் அடைக்கப்பட்ட ரூ. 10 மில்லியன் பெறுமதியான உணவுப் பதார்த்தங்களைக் கொள்வனவு செய்தல்

(ஆ) மென்பான உற்பத்திக் கம்பனியொன்று, தலைநகரில் மென்பானத்தைப் போத்தலில் அடைக்கும் தொழிற்சாலையொன்றைப் புதிதாக நிர்மாணித்தல்

(இ) முதலீட்டாளரொருவர் பிரதான வணிக வங்கியொன்றில் ரூ. 30 மில்லியன் பெறுமதியான பங்குகளைக் கொள்வனவு செய்தல்

(ஈ) புத்தக வெளியீட்டாளரொருவர் புதிய புத்தகமொன்றின் அதிகளவான பிரதிகளை அச்சிட்டு அவற்றுள் இவ்வாண்டில் விற்கப்படாது எஞ்சியுள்ள பிரதிகளைக் கம்பனியின் கையிருப்பில் சேர்த்தல் (04 புள்ளிகள்)

(iv) பொருளாதாரமொன்றின் பேரினப் பொருளியல் தரவுகள் சில பின்வருமாறு தரப்படுகின்றன.
(சகல இலக்கங்களும் மில்லியன் ரூபாவில்)

தன்னிச்சையான நுகர்வு	=	**500**
திட்டமிடப்பட்ட முதலீடு (I)	=	**1 250**
அரசாங்கக் கொள்வனவுகள் (G)	=	**1 000**
தேறிய ஏற்றுமதிகள் (NX)	=	**– 250**
எல்லை நுகர்வு நாட்டம் (MPC)	=	**0.8**

இப்பொருளாதாரத்தின் சமநிலை தேசிய வருமான மட்டத்தை நிர்ணயிக்குக. **(04 புள்ளிகள்)**

(v) பொருளாதாரமொன்றின் பேரினப் பொருளியல் தரவுகள் சில பின்வருமாறு தரப்படுகின்றன.
(சகல இலக்கங்களும் மில்லியன் ரூபாவில்)

தேசிய வருமானம்	=	**1 000**
நுகர்வு	=	**500**
அரசாங்க செலவீடு	=	**250**
தேறிய ஏற்றுமதிகள்	=	**100**
பாதீட்டுக் குறைநிலை	=	**40**

(அ) செலவிடத்தக்க தேசிய வருமானத்தைக் கணிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

(ஆ) இப்பொருளாதாரத்தில் முதலீட்டின் பெறுமதி யாது ? **(02 புள்ளிகள்)**

எதிர்பார்த்த விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

05. (i) - உற்பத்தி நடவடிக்கையில் கூட்டப்பட்ட பெறுமதி என்பது வெளியீட்டுப் பெறுமதியிலிருந்து அவ் வெளியீட்டை உற்பத்தி செய்யும் பொருட்டு ஏனைய உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்த உள்ளீடுகளின் பெறுமதியை (இடைநிலை உள்ளீடுகள்) கழிக்க வருவதாகும்.

(01 புள்ளி)

- கூறப்பட்ட பெறுமதியானது மொத்த வெளியீட்டில் ஒவ்வொரு நிறுவனத்தினதும் சுய பங்களிப்பை அளவிடுகின்றது. இவ்வாறு பொருளாதாரத்தின் எல்லா உற்பத்திச் செயற்பாடுகளினதும் கூட்டப்பட்ட பெறுமதிகளை ஒன்று சேர்க்கும்போது அப்பொருளாதாரத்தின் மொத்த வெளியீட்டின் பெறுமதியை மதிப்பீடு செய்யலாம்.

மொத்த வெளியீடு பற்றிய இவ்வளவையானது மொத்த கூட்டபட்ட பெறுமதி என அழைக்கப்படும் வெளியீட்டின் பெறுமதியை மதிப்பீடு செய்யும் போது ஏற்படக்கூடிய இரட்டைக் கணக்கீட்டு பிரச்சினையை கூட்டப்பட்ட பெறுமதியை மதிப்பீடு செய்வதன் மூலம் தீர்க்கலாம்.

(01 புள்ளி)

- கூட்டப்பட்ட பெறுமதியை கணிப்பிடும் முறை :
உற்பத்தி செயன்முறையில் பல்வேறு கட்டங்கள் உள்ளன. இவ்வொவ்வொரு கட்டமும் வெவ்வேறு நிறுவனங்களால் முன்னெடுக்கப்படுகின்றன. இதன்போது ஒவ்வொரு நிறுவனமும் தமது வெளியீட்டை மேற்கொள்ளும் பொருட்டு வேறு நிறுவனங்களிடமிருந்து உள்ளீடுகளைக் கொள்வனவு செய்கின்றன.

- ஒவ்வொரு கட்டத்திலும் உருவாகும் கூட்டப்பட்ட பெறுமதிகளை அக்கட்டங்களில் பெறப்பட்ட வெளியீடுகளின் பெறுமதியிலிருந்து அவ்வெளியீடுகளை மேற்கொள்ளப் பயன்படுத்தப்பட்ட இடைநிலை உள்ளீடுகளிள் பெறுமதிகளைக் கழிப்பதன் மூலம் கணிப்பீடு செய்யலாம்.
கூட்டப்பட்ட பெறுமதி = வெளியீட்டின் பெறுமதி - இடைநிலை உள்ளீடுகளின் பெறுமதி
(01 புள்ளி)

- பருத்தி சேர்ட் உற்பத்தியுடன் தொடர்புடைய உற்பத்தி செயன்முறைகள் பற்றிய கருதுகோள் ரீதியிலான உதாரணமொன்றை கருத்திற் கொள்வோம் இவ்வுற்பத்திச் செயன்முறையின் பல்வேறு கட்டங்கள் உள்ளன. பருத்திப் பயிர்ச் செய்கை, நூல்நூற்றல் மற்றும் புடவை உற்பத்தி, புடைவையிலிருந்து சேர்ட் உற்பத்தி செய்தல் தைக்கப்பட்ட சேர்ட்டுகளை விற்பனை நிலையங்களில் விற்பனை செய்தல் என்பன அவற்றுள் சிலவாகும். இவ்வொவ்வொரு கட்டத்தின்போதும் கூட்டப்பட்ட பெறுமதி கணிப்படப்படுமாற்றை பின்வரும் அட்டணை வெளிப்படுத்துகின்றது.

உற்பத்தி நிறுவனம்	வெளியீட்டுப் பெறுமதி	இடைநிலை உள்ளீடுகளின் பெறுமதி	கூட்டப்பட்ட பெறுமதி
பருத்திச் செய்கையில் ஈடுபடும் விவசாயி	150	00	150
புடைவை உற்பத்தியாளன்	450	150	300
சேர்ட் தையலாளி	850	450	400
சில்லறை விற்பனையாளன்	1,000	850	150
கூட்டபட்ட பெறுமதி			1,000
இறுதி வெளியீட்டின் பெறுமதி			1,000

(எண்ணிக்கை வடிவிலான உதாரணமொன்றின் மூலம் கணிப்பீட்டு முறை காட்டப்பட்டிருப்பின் 02 புள்ளிகள் எண்ணிக்கை வடிவிலான உதாரணங்களின்றி கணிப்பிடும் முறையை மட்டும் விளக்கியிருப்பின் 01 புள்ளி)

(ii) - உழைப்பு வருமானங்கள்
- வாடகை
- கம்பனி இலாபங்கள்
- கம்பனியல்லா வியாபார இலாபங்கள்
(சுயதொழில் ஈடுபட்டுள்ளோரினதும், வாண்மையானரினதும் வருமானங்கள்)
- தேறிய வட்டி

(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி வீதம் மொத்தம் 04 புள்ளிகள்)

[மாற்றீடான விடை :

- உழைப்பு வருமானங்கள்
- சொத்து வருவாய்கள் (நிதிச் சொத்துக்களையும், கடன் வழங்குவதன் மூலம் இயற்கை வளங்களையும் வாடகைக்கு விடுவதன் மூலம் பெறப்படும் முதனிலை வருவாய்கள்.)
- வருவாய்கள் மற்றும் இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட வரிவருவாய்கள் (இவற்றிலிருந்து உற்பத்தி மற்றும் இறக்குமதி மானியங்கள் கழிக்கப்பட வேண்டும்.)
- தொழற்பாட்டு மிகை (Operating Surplus) எனப்படும் கலப்பு வருமானங்கள்.]

(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி வீதம் 04 புள்ளிகள்)

(iii) - **உள்ளடக்கப்பப்படாதது** : இறக்குமதி செய்யப்படுபவை நாட்டின் எல்லைக் கப்பலாம் மேற்கொள்ளப்படும் உற்பத்தயாகையால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்கப்படாது.

- **உள்ளடக்கப்படும்** : போத்தலில் அடைக்கும் தொகுதி மூலதனப் பொருளொன்றை உருவாக்கும் பயனுள்ள பொருளாதார நடவடிக்கை ஆதலால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்கப்படும்.

- **உள்ளடக்கப்படாது** : நிதிக் கருவிகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் பயனுள்ள பொருளாதார நடவடிக்கையாக கருதப்படாத காரணத்தால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்கப்படாது.

- **உள்ளடக்கப்படும்** : கைகையிருப்புக்களின் திரட்சி ஒரு முதலீடாகக் கருதப்படும் . எனவே அது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்கப்படும்.

(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி வீதம் 04 புள்ளிகள்)

(iv) சமநிலை மட்டத் தேசிய வருமானம் :

$Y = C + I + G + X$

$C = 500 + 0.8Y$

$Y = 500 + 0.8Y + 1,250 + 1,000 + (-250)$

(02 புள்ளிகள்)

$Y = 2,500 + 0.8Y$

$Y - 0.8Y = 2,500$

$Y = 12,500$

(02 புள்ளிகள்)

(v) செலவிடத்தக்க தேசிய வருமானம் :

$Y_d = Y - NT$ (தேறிய வரிகள்)

$BD = G > T = 40$

$T = G - 40 - 250 - 40 = 210$ **(01 புள்ளி)**

$Y_d = Y - 210$

$Y_d = 1,000 - 210 = 790$

(01 புள்ளி)

முதலீட்டின் பெறுமதி :

$Y = C + I + G + NX$

$Y - I = C + G + NX$

$I = Y - (C + G + NX)$ **(01 புள்ளி)**

$I = 1,000 - (500 + 250 + 100)$

$I = 1,000 - 850 = 150$

$I = 150$

(01 புள்ளி)

[மாற்றீடான விடை : உட்பாய்ச்சல் = வெளிப்பாய்ச்சல் அணுகுமுறை

$I + G + X = S + T + M$

$I = S + (T-G) + (M-X)$

$S = Yd - C = 790 - 500 = 290$

$T-G = 210 - 250 = -40$

$X-M = 100$

$M-X = -100$

$I = S + (T + G) + (M - X)$

$I = 290 + (-40) + (-100)$

$I = 290 - 140$

$I = 150$

(01 புள்ளி)

5ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



05 ஆம் வினாவிற்கு சுமார் 28.17% பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளன். (வரைபு 2) இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் உரித்தாகும்.

அதில் புள்ளி 0 - 5 ஆயிடையில் 35% மட்டும்
புள்ளி 6 - 10 ஆயிடையில் 33% மட்டும்
புள்ளி 11 - 15 ஆயிடையில் 26% மட்டும்
புள்ளி 16 - 20 ஆயிடையில் 6% மட்டும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.



இவ்வினாவில் 5 பகுதிகள் உள்ளதுடன், அதில் (iii) ஆவது பகுதி (அ), (ஆ), (இ), (ஈ) என நான்கு உபபிரிவுகளைக் கொண்டுள்ளது. இவ்வினாவில் கூடிய இலகுதன்மை கொண்ட பகுதி (iv) ஆகக் காணப்படுவதுடன் அதன் இலகுதன்மை 66% ஆகும். இலகுதன்மை குறைந்த பகுதி (ii) ஆவதுடன் அதன் இலகுதன்மை 22% ஆகும்.

- முழுமையாக நோக்கும்போது இதனைத் தெரிவு செய்த பரீட்சார்த்திகள் 28.17% என குறைந்த பெறுமதியாகும். தெரிவு செய்தோரும் கூடிய புள்ளிகளைப் பெறத் தவறியுள்ளனர்.

- I ஆம் பகுதியின் இலகுதன்மை 27% ஆகும். கூட்டப்பட்ட பெறுமதியும் அதனைக் கணிப்பீடு செய்யும் முறை பற்றியும் இவ்வினாவின் மூலம் வினவப்பட்டுள்ளது. கூட்டப்பட்ட பெறுமதியை வரைவிலக்கணப்படுத்தியுள்ளதுடன் விடை வரையறுக்கப்பட்டுள்ளதுடன் புள்ளி விபர ரீதியிலான உதாரணங்கள் மூலம் விளக்கம் வழங்கப்படாமையும் பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையளிக்கத் தவறியமைக்கான காரணங்களாகும். சில பரீட்சார்த்திகள் கூட்டப்பட்ட பெறுமதியை எவ்வாறு கணிப்பது என்பதற்கு கூட்டப்பட்ட பெறுமதி = வெளியீடு = உள்ளீடு என்பதை மட்டும் எழுதியுள்ளனர். இவ்வாறான வினாக்களுக்கு விடையளிக்கும்போது எண்ணக்கருவை விளக்குவதற்கும் புள்ளி விபரத்தைக் கணப்பிடுவதற்கும் பரீட்சார்த்திகளை ஈடுபடுத்த வேண்டும்.

- II ஆம் பகுதியின் இலகுதன்மை 22% ஆகும். இப்பகுதியின் மூலம் மொத்த வருமானத்தின் உள்ளடங்கும் பிரதான கூறுகள் யாது என வினவப்பட்டுள்ளது. அபேட்சகர்களில் கூடிய சதவீதத்தினர் தவறான விடையளிக்கக் காரணம் “மொத்த வருமானம்” என்பதைச் சரியாக புரிந்து கொள்ளாமையாகும். சில பரீட்சார்த்திகள் மொத்தக் கேள்வியையும் அதன் உள்ளடக்கத்தையும்காட்டியுள்ளனர். எனவே வினாவை நன்கு வாசித்து விளங்கி விடையளிக்கப் பழக்க வேண்டும். மொத்த வருமானத்தின் பிரதான கூறுகளை சரியான முறையில் பெயரிடக் கூடிய வகையில் கற்றல் கற்பித்தல் தொழிற்பாட்டை ஒழுங்கமைத்தல் வேண்டும்.

- III ஆம் பகுதியின் (அ), (ஆ), (இ), (ஈ) என நான்கு உபபிரிவுகள் உள்ளன. ஒழுங்குமுறையே அப்பிரிவுகளின் இலகுதன்மை 50%, 51%, 54%, 42% உம் ஆகும். இப்பகுதியின் மூலம் வினவப்படுவது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்கப்படும் மற்றும் உள்ளடக்கப்படாத கொடுக்கல் வாங்கல் தொடர்பாகவாகும். பரீட்சார்த்திகளில் சுமார் அரைவாசிப்பேர் வரை சரியான விடையளிக்கத் தவறியுள்ளனர். தேசிய கணக்கீட்டைத் தயாரிக்கும்போது உள்ளடக்கப்படும் கொடுக்கல் வாங்கல் உள்ளடக்கப்படாத கொடுக்கல் வாங்கல் பற்றிய அறிவை வழங்கும் பயிற்சிகள் வழங்கல்வேண்டும்.

- IV ஆம் பகுதியின் இலகுதன்மை 66% ஆகும். இப்பகுதியின் மூலம் பொருளாதாரமொன்றில் கொடுக்கப்பட்ட மொத்த மாறிகளினூடாக சமநிலை தேசிய வருமான மட்டத்தின் பெறுமதி தொடர்பாக வினவப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகளின் சதவீதத்தினர் சரியான விடைகளை அளித்திருப்பதன் மூலம் குறிப்பிட்ட தலைப்பின் கீழ் ஏற்றுக்கொள்ளக் கூடிய சாதனை மட்டம் பரீட்சார்த்திகளிடம் காணப்படாமை புலப்படுகின்றது. எனினும் மென்மேலும் இவ்வாறான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் குறைபாடுகளைக் களைவதற்கு முயற்சித்தல் வேண்டும்.

- V ஆவது பகுதியின் இலகுதன்மை 42% ஆகும். கொடுக்கப்பட்ட பேரினப் பொருளாதாரம் தொடர்பான சில தரவுகளைப் பயன்படுத்தி செலவிடத்தக்க தேசிய வருமானத்தையும் முதலீட்டின் பெறுமதியையும் அறிக்கையிடவும் வினா கேட்கப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகளின் விடைகள் பிழையானதாகும். தேசிய வருமானம் மற்றும் செலவிடத்தக்க வருமானம் போன்ற எண்ணக்கருக்கள் தொடர்பான விளக்கங்களை விருத்தி செய்யும் வகையில் புள்ளிவிபர ரீதியான பயிற்சிகளில் ஈடுபடுத்தல் முக்கியம்.

உப பிரிவு 'ஆ'

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரு** வினாக்களைத் தெரிவுசெய்க.)

06 ஆம் வினா

6. (i) நாணயக் கணியக் கோட்பாட்டிற்கும் பரிமாற்றச் சமன்பாட்டிற்கும் இடையிலான வேறுபாடு யாது ? (04 புள்ளிகள்)

(ii) இலங்கையில் வாழ்க்கைச் செலவின் ஓர் அளவீடு என்ற வகையில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுடன் ஒப்பிடுகையில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அனுகூலங்கள் யாவை ? (04 புள்ளிகள்)

(iii) மக்கள் தம்மிடம் பணத்தை வைத்திருப்பதேன் ? மக்கள் தம்மிடம் பணத்தை வைத்திருக்கும் அளவில் வருமான மட்டம் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் ? (04 புள்ளிகள்)

(iv) கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றில் பணநிரம்பல் (M) ரூ. 3 600 பில்லியனாகவும் மொத்த வங்கி வைப்புகள் (D) ரூ. 3 200 பில்லியனாகவும் நியதி ஒதுக்கு வீதம் 10% ஆகவும் இருப்பதோடு வங்கிகள் ஒதுக்குகளைப் பேணவில்லை எனவும் கொள்க.

(அ) இப்பொருளாதாரத்தில் பணப் பெருக்கியின் பெறுமானம் யாது ? (02 புள்ளிகள்)

(ஆ) இப்பொருளாதாரத்தின் பணநிரம்பலை ரூ. 100 மில்லியனால் குறைக்க வேண்டுமாயின் மத்திய வங்கி என்ன செய்ய வேண்டும் ? (02 புள்ளிகள்)

(v) இலங்கையில் வங்கிகளுக்கிடையிலான அழைப்புக் கடன் நிதிச்சந்தை வட்டி வீதங்களைக் கட்டுப்படுத்த இலங்கை மத்திய வங்கியானது துணைநில் வசதி வட்டி வீதச் செல்வழியை எவ்வாறு செயற்படுத்துகிறது ? (04 புள்ளிகள்)

எதிர்பார்த்த விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

06. (i) - பரிமாற்றச் சமன்பாடு MV = PT என்பது வரைவிலக்கண ரீதியில் உண்மையாகும். பண அளவை அதன் புழக்கச் சுற்றோட்ட வேகத்தால் பெருக்கவரும் பெறுமதி என்போதும் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்திக்குச் சமனாகும்.

(01 புள்ளி)

- பணக்கணிய / நாணயக் கணியக் கோட்பாடு பணநிரம்பலில் ஏற்படும் மாற்றங்களை விலைமட்ட மாற்றங்களுடன் தொடர்புபடுத்த பரிமாற்றச் சமன்பாட்டைப் பயன்படுத்துகின்றது.

- கோட்பாட்டை உருவாக்க எடுகோள்கள் தேவையென்பதால் பரிமாற்றச் சமன்பாட்டில் உள்ள மாறிகளின் நடத்தை தொடர்பாக சில எடுகோள்கள் எடுக்கப்பட்டுள்ளது.

(01 புள்ளி)

- அதன்படி புழக்கச் சுற்றோட்ட வேகம் (V) மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் அளவு (T) பெரும்பாலும் மாற்றமின்றி நிலையாக இருப்பதாக எடுகோள் கொள்ளப்பட்டு பணத்தின் அளவின் (M) ஏற்படும் மாற்ற விதத்தின் சம அளவினால் விலைமட்டம் (P) மாற்றமடையுமென பணக்கணியக் கோட்பாடு கூறுகின்றது.

(01 புள்ளி)

- இதன்படி பரிமாற்றச் சமன்பாடானது முழு உண்மையாகக் காணப்படுவதுடன் நாணயக் கணியக் கோட்பாடானது முற்றிலும் பரிமாற்றச் சமன்பாட்டின் மீது கட்டியெழுப்பப்பட்ட கோட்பாடாகும். எடுகோள்களின் உண்மைத் தன்மையில் இக்கோட்பாட்டின் உண்மைத் தன்மை தங்கியுள்ளது.

(01 புள்ளி)

(ஏதேனும் 4 விடயங்களுக்கு 04 புள்ளிகள்)

(ii) தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் நன்மைகள் :

- தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது விசாலமானதொரு புவியியல் பிரதேசத்தை உள்ளடக்குகின்றது. இலங்கையில் ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கி விலைகள் கேசரிக்கப்படும் அதேவேளை கொழும்பு நுகர்வுச் சுட்டெண் கொழும்பு மாவட்டத்திற்கு வரைய றுக்கப்பட்டிருந்தது. **(01 புள்ளி)**

- நுகர்வோர் நடத்தை பற்றிய பரந்தோர் பிரதிநிதித்துவத்தை வழங்குகின்றது. 2012/13 ஆணடில் முழு நாட்டையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வண்ணம் தெரிவு செய்யப்பட்ட மாதிரியின் அடிப்படையில் இச்சுட்டெண் கணிப்பிடப்படுகின்றது.

- மிக அண்மைய அடியாண்டை பயன்படுத்துகின்றது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் 2006/07 ணேடை அடியாண்டாகக் கொண்டிருக்கின்றது தேசிய நுகர்வோர்விலைச் சுட்டெண் 2013 ஆம் ஆண்டை அடியாண்டாகக் கொண்டுள்ளது.

- நிறையிடலானது யதார்த்த பூர்வமாகவுள்ளது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணானது கொழும்பு பட்டினப் பிரதேசத்தில் வாழும் குடும்பங்களின் மொத்த செலவீட்டின் அடிப்படையில் நிலையிடலை தேற்கொண்டுள்ளது. ஆனால் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது இலங்கையின் சகல வீட்டுத் துறையினதும் செலவுகளின் அடிப்படையில் நிறையிடலை மேற்கொண்டுள்ளது.

- நுகர்வு நடத்தைப் போக்கினை இனங்காண்பதில் ஆண்டு முழுவதும் முழு நாட்டினதும் நுகர்வுச் செலவுகள் குறித்து ஆய்வு செய்யப்படுவதனால் புதிய நுகர்வுச் சுட்டெண்ணில் மாற்றங்களைச் சரியாக இனங்காண முடியும்.

- நுகர்வுச் சுட்டெண்ணை உருவாக்குவதில் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட பண்டக் கூடை விசாலமானது. 12 தொகுதிகளைக் கொண்ட 105 பண்ட வகைகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- மது பானங்கள், புகையிலை மற்றும் போதைப் பொருள்கள் மீது மேற்கொள்ளப்படும் செலவீடுகளையும் கருத்திற்கொண்டு மிகவும் யதார்த்த பூர்வமான அடிப்படையில் இச்சுட்டெண் கணிப்பிடப்படுகின்றது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் மதுபானம் புகையிலை போதைப்பொருள் மீதான செலவீடுகள் உள்ளடங்கவில்லை.

(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம் 04 புள்ளிகள்)

(ii) - பரிமாற்ற நோக்கம்
- பாதுகாப்பு நோக்கம்
- உத்தேச (சொத்து) நோக்கம் **(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம் 03 புள்ளிகள்)**

- வருமான மட்டத்திற்கும் பண இருப்புகளுக்கும் இடையில் நேர்கணியத் தொடர்புண்டு. வருமானம் அதிகரிக்கும்போது பணக்கையிருப்புகளுக்கான கேள்வி அதிகரிக்கும் அதேவேளை வருமானம் குறையும்போது கேள்வி குறைவடையும்.

(01 புள்ளி)

(ii) (அ)

$$\text{பணப்பெருக்கி} = \frac{m}{H} = \frac{\text{பணத்தொகை}}{\text{உயர்வலுப்பணம் (அடிப்படைப்பணம்)}}$$

(01 புள்ளி)

- பணத்தொகை (M) = 3,600
- உயர்வலுப் பணம் (H) = $C_p + C_b$

$(H) = M - D = 3,600 - 3,200 = 400$

$C_P = M - D = 3600 - 3200 = 400$

$C_b = rD = 0.10 (3,200) = 320$

$H = 400 + 320 = 720$

பணப்பெருக்கி (m) $\frac{3,600}{720} = 5$

(01 புள்ளி)

(ஆ) பணநிரம்பல் 100 மில்லியனால் குறைவடையும்

$(m) = \frac{M}{H}$

$H = \frac{M}{m}$

$\Delta M = 100$

$m = 5$

$H = 100/5 = 20$

உயர்வலுப் பணம் 20 மில்லியன் குறைவடையும் போது பணநிரம்பல் 100 மில்லியனால் வீழ்ச்சியடையும்.

(02 புள்ளிகள்)

(ii) - வங்கிகளுக்கிடையிலான அழிப்புக்கடன் சந்தையானது வணிக வங்கிகளில் மிகக் குறுங்காலத்தில் ஏற்படும் திரவத்தன்மைத் தேவைகளையும் ஒதுக்குப்பறாக்குறைகளையும் தீர்க்கும் மூலமாக வங்களுக்கிடையிலான அழைப்புக்கடன் சந்தை தோற்றம் பெற்றுள்ளது.

அவ்வாறே இச்சந்தையில் ஏற்படும் வட்டிவீத மாற்றங்கள் மிக விரைவாக பணச்சந்தையின் ஏனைய வட்டி வீதங்களிலும் தாக்கம் செலுத்தும். எனவே இச்சந்தையில் நிலவும் வட்டி வீதங்களில் ஏற்படும் பாதகமான தளம்பல்களைத் தவிர்த்து முறையான வகையிலும் முறையாக வகைளிலும் நிலையான விதத்திலும் பேணிச் செல்வது மத்திய வங்கியின் பணியாகவுள்ளது.

(01 புள்ளி)

- இதன் பொருட்டு மத்திய வங்கியானது கொள்கை வட்டி வீதங்களின் கீழ் துணைநில் வசதி வைப்புகளையும் துணைநில் கடன் வசதிகளையும் வழங்கும் நடைமுறையினைப் பின்பற்றுகின்றது. அழிப்புக்கடன் சந்தையின் நிலவும் வட்டி வீதங்களின் மேல் எல்லை மற்றும் கீழ் எல்லைகள் தீர்மானிப்படுவது முறையே மத்திய வங்கியின் துணை நில் கடன் வசதி வீதம் மற்றும் துணை நில் வசதி வைப்பு வீதம் என்பவற்றினாலாகும். இவற்றிற்கிடையிலான இடைவெளியானது வங்களுக்கிடையிலான அழைப்புக்கடன் சந்தையின் துணைநில் வசதி வீத செல்வழியாகும்.

(01 புள்ளி)

- வங்கிகளுக்கிடையிலான அழிப்புக்கடன் சந்தையில் ஏற்படும் திரவத்தன்மைக் குறைநிலை காரணமாக வட்டி வீதம் அதிகரிக்கும் போக்கானது துணைநில் கடன் வீதத்தின் கீழ் வங்கி கடன் வழங்குவதன் மூலம் தவிர்க்கப்படும்.

(01 புள்ளி)

- வங்கிகளுக்கிடையிலான அழிப்புக்கடன் சந்தையில் ஏற்படும் மிகைத் திரவத்தன்மை காரணமாக வட்டி வீதம் வீழ்ச்சியடையும் போக்கு துணைநில் வைப்பு வீதத்தின் கீழ் மத்திய வங்கியானது வைப்புக்களை ஏற்பதன் மூலம் தவிர்க்கப்படும். எனவே இச் செல்வழியானது சந்தையில் குறுங்கால வட்டி வீதத் தளம்பல்களை மட்டுப்படுத்துகின்றது.

(01 புள்ளி)

6ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



06 ஆம் வினாவிற்கு சுமார் 58.24% பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளன். (வரைபு 2) இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் உரித்தாகும்.

அதில் புள்ளி 0 - 5 ஆயிடையில் 37% மட்டும்
புள்ளி 6 - 10 ஆயிடையில் 38% மட்டும்
புள்ளி 11 - 15 ஆயிடையில் 18% மட்டும்
புள்ளி 16 - 20 ஆயிடையில் 6% மட்டும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.



இவ்வினா v பகுதிகளைக் கொண்டுள்ளதுடன் (iii) ஆம் பகுதி உயர் இலகுதன்மையைக் கொண்டிருந்தாலும் அதன் இலகுதன்மை 79% வரை வரையறுக்கப்பட்டுள்ளது. இலகுதன்மை மிகவும் குறைந்த பகுதி v ஆவதுடன் அதன் இலகுதன்மை 9% ஆகும்.

⋆ i ஆம் பகுதியின் இலகுதன்மை 33% ஆகும். இவ்வினாவின் மூலம் நாணயக் கோட்பாட்டுக்கும் பரிமாற்றச் சமன்பாட்டுக்கும் உள்ள வேறுபாடாகும். இப்பகுதியில் இலகுதன்மை குறைவதற்கு முக்கிய காரணம் நாணயக்கணியக் கோட்பாடு, பரிமாற்றச் சன்பாடு என்ற இரு எண்ணக்கருக்களையும் வேறுவேறாக வரைவிலக்கப்படுத்த விண்ணப்பதாரிகள் தவறியுள்ளமையாகும். பெரும்பாலான அபேட்சகர்கள் நாணயக்கணியக் கோட்டும் பரிமாற்றச் சமன்பாடு ஆகிய இரண்டும் ஒன்றாகும் எனக் கருதியுள்ளமையாகும்.

எனினும் நாணயக்கணியக் கோட்பாடும் பரிமாற்றச் சமன்பாடும் ஒன்றல்ல என்பமும் நாணயக்கணியக் கோட்பாட்டின் மூலம் முன்வைக்கப்படும் கருத்தை உறுதிப்படுத்த பரிமாற்றச் சமன்பாடு பயன்படுத்தப்படுகின்றது என்தை பரீட்சார்த்திகளுக்கு புரியவைத்தல் வேண்டும்.

⋆ ii ஆவது பகுதியின் இலகுதன்மை 49% ஆகும். இப்பகுதியின் இலகுதன்மை குறையக் காரணம் வாழ்க்கைச் செலவின் வேறுபாட்டைக் கணிப்பிடுவதற்கு அறிமுக்கப்படுத்தப்பட்டுள்ள புதிய விலைச் சுட்டெண்ணை தேசிய நுகர்வோர் விலைச் சுட்டி பற்றி பரீட்சார்த்திகளிடம் தேவையான அளவு அறிவு காணப்படாமையாகும். மத்திய வங்கியின் அறிக்கைப்படி இவ்விரு சுட்டெண்களுக்குமிடையில் விரிவான ஒப்பீட்டை மேற்கொண்டிருந்தாலும் அதன் மீதான பரீட்சார்த்திகளின் அவதானம் குறைவாகவே செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான சுட்டெண் பற்றி வருடாந்த அறிக்கை மூலம் முன்வைக்கப்படும் தகவல்கள் பற்றி பரீட்சகர்களின் கவனத்தில் கொண்டுவரல் வேண்டும்.

⋆ iii இப்பகுதியின் இலகுதன்மை 79% ஆகும். மக்கள் பணத்தைக் கையில் வைத்திருப்பதில் செல்வாக்கு செலுத்தும் காரணி இதன் மூலம் வினவப்பட்டிருந்தாலும் ஒப்பீட்டு ரீதியில் கூடிய இலகுதன்மை கொண்ட பகுதி வினாவாகும்.

⋆ iv (அ) பகுதியின் இலகுதன்மை 35% ஆகும். கொடுக்கப்பட்ட தரவுகளின் மூலம் பணப்பெருக்கியை கணிப்பீடு செய்வது எதிர்பார்க்கப்படுகின்றது. கணிப்பீட்டிற்கான நாணயத் தளத்தைக் கணிப்பிடுவதும், நாணயத்தளத்திற்கும் பண நிரம்பலுக்குமிடையிலான தொடர்பை விளங்கிக் கொள்வதும் முக்கியமாகும். இங்கு பண நிரம்பலுடன் தொடர்புடைய தகவல்கள் மூலம் நாணயத் தளத்தைக் கணிப்படல் பரீட்சகர்களுக்கு கடினமாயுள்ளது. எனவே பண நிரம்பலை அடிப்படையாகக் கொண்டு நாணயத் தளத்தைக் கணிப்பிடத் தேவையான அறிவை வழங்க வேண்டும்.

(ஆ) இப்பகுதியின் இலகுதன்மை 9% ஆகும். இலகுதன்மை மிகவும் குறைவாகக் காணப்படக் காரணம் (அ) பகுதியுடன் தொடர்புடைய விடையைக் கணிப்பிடுவதற்கும் பரீட்சார்த்திகள் காட்டிய தோல்வியாகும். இவ்வாறான கணிப்பீடுகளுக்கான பயிற்சியை வழங்குவதன் மூலம் வினாக்களுக்கு வெற்றிகரமான விடைகளை அளிக்கப் பயிற்றல் வேண்டும்.

⋆ v இப்பகுதியின் இலகுதன்மை 27% ஆகும். இலகுதன்மை குறைவதற்கு முக்கிய காரணி துணை நில் வசதி வட்டி வீதச் செல்வழி பற்றிய பரீட்சார்த்திகளிடம் காணப்புடும் விளக்கம் இன்மையாகும். துணை நில்வசதி வட்டி வீதச் செல்வழி அறிமுகப்படுத்திய இலங்கை மத்திய வங்கி அண்மைக் காலத்தில் நிதிக் கொள்கை நடவடிக்கைகளில் மேற்கொண்ட முக்கியமானதொரு படியாகும். 2013 மத்திய வங்கி ஆண்டறிக்கை மூலம் அதன் தொழிற்பாடுகள் பற்றிய விளக்கம் காட்டப்பட்டுள்ளதால் ஆண்டறிக்கை மூலம் வழங்கப்படும் தகவல்களை ஆய்வு செய்வதற்கு பரீட்சார்த்திகளை ஈடுபடுத்த வேண்டும்.

07 ஆம் வினா

7. (i) வெளிவாரிக்ள் காணப்படுகின்றமையானது பொருளாதாரமொன்றில் வளங்களின் வினைத்திறனற்ற ஒதுக்கீட்டிற்கு எவ்வாறு இட்டுச் செல்லுமென விளக்குக. உமது விடையினைப் பொருத்தமான வரைபடங்களின் உதவியுடன் விவரிக்குக. **(04 புள்ளிகள்)**

(ii) பொதுப் பொருள்கள் என்றால் என்ன ? சந்தைகள் அவ்வாறான பொருள்களை இலகுவாக வழங்க **முடியாதிருப்பது** ஏன் ? **(04 புள்ளிகள்)**

(iii) வரிவிதிப்பின் நோக்கங்கள் யாவை ? **(04 புள்ளிகள்)**

(iv) சிறந்த வரிமுறையொன்றின் விரும்பத்தக்க பண்புகளைக் குறிப்பிடுக. **(04 புள்ளிகள்)**

(v) இலங்கை அரசாங்கத்தின் மீளெழும் செலவினங்களின் பிரதான உள்ளடக்கங்களைத் தருக. **(04 புள்ளிகள்)**

எதிர்பார்த்த விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

07. (i) - வெளிவாரிகள் நேர்க்கணியமானதாகவோ எதிர்காணியமானதாகவோ இருப்பினும் அவற்றின் விளையான சமூக செலவுகள் மற்றும் தனியார் செலவுகளுக்கிடையிலும், சமூக நன்மைகள் மற்றும் தனியார் நன்மைகள் என்பவற்றிற்கிடையிலும் வேறுபாடுகளை ஏற்படுத்துகின்றன.

இதன் விளைவாக ஒரு பொருள் சந்தையில் சமூக ரீதியில் விரும்பப்படும் உத்தம மட்டத்தை விடக் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ உற்பத்தி செய்யப்படலாம். அன்றேல் சமூக ரீதியல் உத்தமமட்டத்தை விடக் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ நுகர்வு செய்யப்படலாம்.

(01 புள்ளி)

- மூகத்திடமுள்ள வளங்கள் உத்தம மட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படுவது எல்லைச் சமூக செலவு எல்லைச் சமூக நன்மைக்கு சமப்படும் போதாகும்.

உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரிகள் நிலவும்போது எல்லைச் சமூக செலவு எல்லைத் தனியார் செலவைக் விஞ்சியதாகக் காணப்படும். இதன்போது தாராள சந்தை சமநிலை வெளியீட்டுத் தொகையானது சமூக ரீதியில் உத்தமமான மட்டத்தை விட கூடுதலாகக் காணப்படும்.

அவ்வாறே நுகர்வில் நேர்க்கணிய வெளிவாரிகள் நிலவும்போது எல்லைச் சமூக நன்மை எல்லைத் தனியார் நன்மையை விஞ்சியதாகக் காணப்படும். இதன்போது தாராள சந்தையின் சமநிலை வெளியீட்டுத் தொகையானது சமூக ரீதியில் உத்தமமான மட்டத்தை விடக் குறைவான அளவினதாகக் காணப்படும்.

(01 புள்ளி)

உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரி:



Q_S - சமூக ரீதியில் உத்தம வெளியீடு
Q_P - சந்தைச் சமநிலை வெளியீடு

நுகர்வில் எதிர்க்கணிய வெளிவாரி:



Q_S - சமூக ரீதியில் உத்தம வெளியீடு
Q_P - சந்தைச் சமநிலை வெளியீடு

உற்பத்தியில் நேர்க்கணிய வெளிவாரி:



Q_S - சமூக ரீதியில் உத்தம வெளியீடு
Q_P - சந்தைச் சமநிலை வெளியீடு

நுகர்வில் நேர்க்கணிய வெளிவாரி:



Q_S - சமூக ரீதியில் உத்தம வெளியீடு
Q_P - சந்தைச் சமநிலை வெளியீடு

(ஏதேனும் சரியான ஒரு வரைபடத்திற்கு 02 புள்ளிகள்)

(ii) - பொதுப்பொருள் என்பது பின்வரும் இரு பண்புகளைக் கொண்ட பண்டமாகும். **(01 புள்ளி)**

- நுகர்வில் போட்டித்தன்மை அற்றிருத்தல் :
ஒருவரது நுகர்வின் காரணமாக மற்றொருவரின் நுகர்வில் எதுவிம பாதிப்பும் எற்படாத நிலையினை இது குறிக்கும். மேலதிக ஒரு நபருக்கு பொதுப்பொருளை வழங்குவதற்கான எல்லைச் செலவு பூச்சியமாகும்.
பொதுப்பொருள்கள் கூட்டாக நுகரப்படும் பொருள்களாகும்.

(01 புள்ளி)

- நுகர்விலிருந்து விலக்கிவைக்க முடியாத தன்மை (விலக்குதல் விதிக்குட்படாமை) :
விலை செலுத்தத் தயாராகவுள்ளோருக்கு மட்டும் நுகர்வை மட்டுப்படுத்த முடியாத தன்மையினை இது கருதும். இதன்படி விலை செலுத்தாதொரை நுகர்விலிருந்து விலக்க முடியாது. இதனை இலவச சவாரி பிரச்சினை எனவும் கூறுவர்.

(01 புள்ளி)

- கூட்டாக நுகரப்படுந்தன்மையும் விலை செலுத்தாதோரை நுகர்விலிருந்து விலக்க முடியாத தன்யும் பொதுப் பொருள்களின் அடிப்படைப் பண்பாகையால் சந்தையூடாக அவற்றை வழங்க முடியாது. இலாபம் உழைப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட உற்பத்தியில் ஈடுபடும் சந்தை நிரம்பலாளர்கள் அவ்வாறான பொருள்களை வழங்க முன் வருவதில்லை.

(02 புள்ளிகள்)

(iii) - பொருளாதார வளர்ச்சியையம் அபிவிருத்தியையும் அதிகரித்தல்.
- நிறைதொழில் மட்டம்
- விலையுறுதிப்பாடு
- சகடோட்டத் தளம்பல்களை கட்டுப்படுத்தல்
- சென்மதி நிலுவைப் பிரச்சினைகளைக் குறைத்தல்.
- வருமான மற்றும் செல்வப் பரம்பலில் ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல் (நியாயத்துவம்)
- பொதுப் பொருள்களையும் சமூக நலப் பொருள்களையும் வழங்கல்
- மொத்தக் கேள்வி, மொத்த நிரம்பல் ஆகியவற்றில் தாக்கம் செலுத்துதல்
- வளப்பகிர்வினை வினைத்திறனாக்குதல்

(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி வீதம் 04 புள்ளிகள்)

(iv) - நியாயத்தன்மை
- நிச்சயத்தன்மை
- இலகுதன்மை
- சிக்கனத்தன்மை
- நடுநிலைத்தன்மை
- எளிமைத்தன்மை
- நெகிழ்ச்சித் தன்மை

(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி வீதம் 04 புள்ளிகள்)

(v) - பொருள்கள் சேவைகள் மீதான செலவீடு
- வட்டிச் செலுத்தல்கள்
- மாற்றல்கள்

(01 புள்ளி வீதம் 3 விடயங்கள் தரப்படின் 04 புள்ளிகள்)

7ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



07 ஆம் வினாவிற்கு சுமார் 89.49% பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளன். (வரைபு 2) இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் உரித்தாகும்.

அதில் புள்ளி 0 - 5 ஆயிடையில் 30% மட்டும்
புள்ளி 6 - 10 ஆயிடையில் 23% மட்டும்
புள்ளி 11 - 15 ஆயிடையில் 27% மட்டும்
புள்ளி 16 - 20 ஆயிடையில் 20% மட்டும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.



இவ்வினா v பகுதிகள் உள்ளதுடன் iv ஆம் பகுதி இலகுதன்மை கூடியதாகும். அதன் இலகுதன்மை 68% ஆகும். இலகுதன்மை குறைந்த பகுதி i ஆவதுடன் அதன் இலகுதன்மை 37% ஆகும். ii, iii, v என்பவற்றின் இலகுதன்மை முறையே 59%, 45%, 60% ஆகும்.

- I ஆம் பகுதியின் இலகுதன்மை 37% ஆகும். வெளிவாரிகள் நேர்க்கணிய அல்லது எதிர்க்கணிய அல்லது எந்த முறையாயினும் அதன் விளைவு சமூக நன்மைகள் மற்றும் தனியார் நன்மைகள் என்பவற்றுக்கிடையிலும், சமூகச் செலவு மற்றும் தனியார் செலவிற்கு இடையிலும் வேறுபாடு ஏற்படுவதால் மிகை உற்பத்திக்கு அல்லது குறை உற்பத்தியை இனங்கண்டு கொள்வதற்கு பரீட்சார்த்திகளுக்கு கடினமாகவுள்ள புலனாகின்றது. இந்நிலைமையை இனங்கண்டு வரைபின் மூலம் முன்வைக்க முடியாத நிலையும் காணப்படுகின்றது. எனவே எல்லைச் சமூகச் செலவு, எல்லைத் தனியார் செலவை விஞ்சிச் செல்லும்போது மிகை உற்பத்தியொன்று ஏற்புடும் முறையையும் எல்லைச் சமூக இலாபத்தை தனியால் எல்லை தனியார் நன்மையை விஞ்சிச் மீறிச் செல்லும்போது குறை உற்பத்தியும் ஏற்படும் முறை பற்றியும் அறிவு, பகுப்பாய்வு செய்யும் திறனையும் மாணவர்களிடம் வளர்க்க வேண்டும்.

  வெளிவாரி காரணமாக குறை அல்லது மிகை உற்பத்தியொன்று ஏற்படும் என்பதையும் வளங்களை வினைத்திறனுடன் பங்கீடு செய்யும்போது சமூகச்செலவும் நன்மையையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதை விளக்காமை காரணமாகவும் மொத்தப் புள்ளியையம் பெறத் தவறியுள்ளர். விடைகளை சிறந்த முறையில் விடையை ஒழுங்கமைக்கும் முறை பற்றி பரீட்சார்த்திகளை அறிவுறுத்தவும்.

- II ஆம் பகுதியின் இலகுதன்மை 59% ஆகும். பொதுப் பொருளை சரியாக இனங்கண்டாலும் சந்தை மூலம் ஏன் அதனை வழங்க முடியாது என்பது பற்றி சரியான விளக்கம் பெரும்பாலான பரீட்சார்த்திகளிடம் காணப்படவில்லை என்பது புலனாகின்றது. இலாப நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட சந்தைப் பொருளாதாரமொன்று ஏன் பொதுப் பொருட்களை உற்பத்தி செய்வதில்லை என்பதைக் கவனத்திலெடுத்து கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளைத் தயாரித்தல் வேண்டும்.

- III ஆம் பகுதியின் இலகுதன்மை 45% ஆகும். வரி விதிப்பதன் நோக்கம் வரித்தத்துவம் பற்றி பரீட்சார்த்திகள் சரியாகப் புரிந்து கொண்டிருக்கவில்லை. இவ்வாறான விடயங்கள் தொடர்பாக அறிவு மற்றும் விளக்கம் தேவை.

- IV ஆம் பகுதியின் இலகுதன்மை 68% ஆகும். சிறந்த வரி முறையை பெரும்பாலான பரீட்சார்த்திகள் விளங்கியிருந்தனர். எனினும் விரும்பத்தக்க பண்புகளை வினாவில் கேட்கப்பட்டிருந்மையினால் உறுதியான விடையை முன்வைக்க முடியாது போயுள்ளது. எனவே குறித்த தலைப்பில் அடங்கும் விடயங்களை வினவக்கூடிய மாற்று வழிகளையும், அதற்கேற்ற விடைகளையும் வழங்கும்போது கவனத்தில் எடுக்க வேண்டிய காரணிகள் பற்றிய அறிவையும் பரீட்சார்த்திகளிடையே விருத்தி செய்தல் வேண்டும்.

- V ஆம் பகுதியின் இலகுதன்மை 60% ஆகும். அரச செலவின் பொருளியல் வகைப்படுத்தல் பற்றிய சிறந்த விளக்கம் பரீட்சார்த்திகளிடம் காணப்படவில்லை என்பது புலப்படுகின்றது. அரச செலவின் வகைப்படுத்தல் பற்றிய அறிவைப் பெறக்கூடிய முறையைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல் வேண்டும். மேலும் மத்திய வங்கி ஆண்டறிக்கையில் காணப்படும் உரிய விடயங்களை வாசிக்க பரீட்சார்த்திகளை ஆற்றுப்படுத்துக.

08 ஆம் வினா

8. (i) ஒப்பீட்டு நன்மையையும் முழு நன்மையையும் வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(ii) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் விவசாயப் பொருள் ஏற்றுமதி வருவாய்களின் மந்தகதியிலான வளர்ச்சிக்கான காரணங்களைத் தருக. (04 புள்ளிகள்)

(iii) இலங்கை தற்போது மேற்கொண்டுள்ள பிராந்திய மற்றும் இருபக்க தாராள வர்த்தக உடன்படிக்கைகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை இரட்டைப்பதிவு முறையைப் பயன்படுத்தி இலங்கையின் சென்மதி நிலுவை அட்டவணையில் எவ்வாறு பதிவு செய்வீர் ?

(அ) சீன முதலீட்டாளரொருவர் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் 10 மில்லியன் டொலர் பெறுமதியான பங்குகளைக் கொள்வனவு செய்தல்

(ஆ) மத்திய கிழக்கில் பணிபுரியும் இலங்கைப் பணிப்பெண்ணொருவர் இலங்கையிலுள்ள தனது பெற்றோருக்கு 500 டொலர்களை அனுப்புதல்

(இ) இலங்கையிலுள்ள வங்கியொன்று வெளிநாட்டு நிதிச் சந்தைகளில் முறிகளை விற்பனை செய்வதன் மூலம் 40 மில்லியன் டொலர்களைப் பெற்றுக்கொள்ளல்

(ஈ) இலங்கையிலுள்ள வெளியீட்டுக் கம்பனியொன்று உலகில் பிரபலமாக விற்பனையாகும் புத்தகமொன்றை மொழிபெயர்ப்புச் செய்து இலங்கையில் விற்பனை செய்யும் நோக்கில் அமெரிக்க வெளியீட்டாளர் ஒருவரிடமிருந்து 5 000 டொலருக்கு அப்புத்தகத்தின் வெளியீட்டுரிமையைப் பெற்றுக்கொள்ளல் (04 புள்ளிகள்)

(v) மிதக்கும் நாணய மாற்றுவீத முறைமையின் கீழ் இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதி அமெரிக்க டொலர்களில் நிர்ணயிக்கப்படும் விதத்தைக் காட்ட பொருத்தமான வரைபடமொன்றை வரைக. வெளிநாட்டு நாணயச் சந்தையில் கேள்வி வளையி கீழ் நோக்கியும் நிரம்பல் வளையி மேல் நோக்கியும் ஏன் சரிந்து செல்லும் என விளக்குக. (04 புள்ளிகள்)

எதிர்பார்த்த விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

08. (i) - ஏதேனும் பொருள் அல்லது சேவையை உற்பத்தி செய்வதில் பொருளாதார அலகொன்று (நாடு, நபர் அல்லது நிறுவனம்) மற்றொரு பொருளாதார அலகோடு ஒப்பிடுகையில் குறைந்த செலவில் (குறைந்தளவு வளங்களைப் பயன்படுத்தி) அல்லது அதிக உற்பத்தித் திறனுடன் (தரப்பட்ட வளங்களைக் கொண்டு அதிக அலகுகளில் பொருள்கள் சேவை அளவுகளை உற்பத்தி செய்தல்) உற்பத்தியை மேற்கொள்ள முடியுமாயின் அப்பொருள் அல்லது சேவை உற்பத்தியில் குறைத்த பொருளாதார அலகு முழு நன்மையைக் கொண்டுள்ளதெனலாம்.

(02 புள்ளிகள்)

- ஏதேனும் ஒரு பொருளை அல்லது சேவையை உற்பத்தி செய்வதில் ஒரு பொருளாதார அலகு மற்றொரு பொருளாதார அலகோடு ஒப்பிடுகையில் குறைந்த அமையச் செலவில் (ஒரு பண்டத்தின் உற்பத்தியை அதிகரிப்பும் பொருட்டு மன்றொரு பண்டத்தை தியாகம் செய்ய வேண்டிய அளவு வீழ்ச்சியடைதல்) அப்பொருளை அல்லது சேவையை உற்பத்தி செய்ய இயலுமாயின் அப்பொருள் அல்லது சேவை உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மை நிலவுவதாகக் கொள்ளலாம்.

(02 புள்ளிகள்)

(ii) - உலக சந்தைக் கேள்வி மற்றும் உலக சந்தையில் விலைகள் வீழ்ச்சியந்ததன் காரணமாக தெங்குப் பொருள்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் தவிர்ந்த ஏனைய பிரதான விவசாய உற்பத்திகளின் ஏற்றுமதி வருவாய்கள் அண்மை ஆண்டுகளில் வீழ்ச்சியடைந்து சென்றுள்ளது.

- இலங்கையின் பிரதான ஏற்றுமதிச் சந்தைகள் காணப்படும் நாடுகளில் நிலவும் பிரதிகூலமான புவிசார் அரசியல் மாற்றங்கள் (Geopolitical developments)

உதாரணம் : மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் யுத்தங்களும் மோதல்களும், ஈரானுக்கு எதிரான அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்தல்.

- உலக சந்தையில் தேயிலை மற்றும் தெங்குப் பொருள்களின் விலை வீழ்ச்சி : பிரதான ஏற்றுமதியாளர்களின் பொருளாதாரப் பின்னடைவு, செயற்கை இறப்பர் விலை வீழ்ச்சி.

- உலக சந்தையில் பெற்றோலிய விலைகள் துரிதமாக வீழ்ச்சியடைந்ததன் காரணமாக இலங்கையின் பிரதான ஏற்றுமதிச் சந்தைகளின் (மத்திய கிழக்கு, ரஸ்யா) பொருளாதாரப் பின்னடைவு.

- சீனப் பொருளாதாரத்தின் மந்தகதியான வளர்ச்சிப் போக்கினால் உலகப் பொருளாதாரத்தின் பின்னடைவு தீவிரமாதல்.

- உலகப் பொருளாதாரப் பின்டைவு ஏற்பட்டுள்ள சூழலில் இலங்கைப் பொருள்களின் இறக்குமதியாளர்கள் நாணய அலகுகளின் பெறுமதி குறைவடைவதனால் ஏற்றுமதிக் கேள்வி குறைவடைதல்.

- ஐரோப்பிய ஒன்றியல் இலங்கைக்கு எதிராக இலங்கையின் மீன் ஏற்மதிகளைத் தடை செய்தமை.

(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம் ஏதேனும் 04 விடயங்களுக்கு 04 புள்ளிகள்)

(iii) - பிராந்திய தாராள வர்த்தக உடன்படிக்கைகள் :

- தெற்காசிய தாராள வர்த்தச உடன்படிக்கை (SAFTA) **(01 புள்ளி)**
- ஆசிய பசிபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA) **(01 புள்ளி)**

- இருபக்க உடன்படிக்கைகள் :

- இந்திய இலங்கை தாராள வர்த்தக உடன்படிக்கைகள் (ISFTA) **(01 புள்ளி)**
- பாக்கிஸ்தான் இலங்கை தாராள வர்த்தக உடன்படிக்கை (PSFTA) **(01 புள்ளி)**

(iv) (அ) நிதிக்கணக்கில் பல்வகை முதலீடுகள் கணக்கில் பெறுகை நிதிக்கணக்கில் பண மற்றும் வைப்புக்கணக்கில் செலுத்தல்.

(ஆ) நடைமுறைக் கணக்கில் இரண்டாம் நிலை வருமானக் கணக்கில் பெறுகை.
நிதிக்கணக்கில் பண மற்றும் வைப்புக் கணக்கில் செலுத்தல்.

(இ) நிதிக்கணக்கில் பல்வகை முதலீடுகள் கணக்கில் பெறுகை நிதிக்கணக்கில் பண மற்றும் வைப்புக் கணக்கில் செலுத்தல்.

(ஈ) மூலதனக் கணக்கில் செலுத்தல் நிதிக்கணக்கில் மண மற்றும் வைப்புக்கணக்கில் பெறுகை.

(ஒரு சரியான விடைக்கு 01 புள்ளி வீதம் 04 புள்ளிகள்)

(v) (அ) ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதி அமெரிக்க டொலரினால் தீர்மானிக்கப்படும் முறை தொடர்பான வரைபு,



(வரைபடத்தின் கிடையச்சில் மரிமாற்றப்படும் ரூபாவின் அளவும் குத்தச்சில் ரூபாவின் டொலர் பெறுமதியும் காட்டப்பட்டுள்ள சரியான வரைபடத்திற்கு 02 புள்ளிகள்.)

- ரூபாவின் டொலர் பெறுமதியைத் தீர்மானிக்கும் அந்நிய செலாவணி சந்தையில் டொலர்களும் ரூபாக்களும் பரிமாற்றம் செய்யப்படுகின்றன. இங்குள்ள கேள்வி வளையி ரூபாவிங்கான கேள்வியை காட்டுகின்றது. இதன்போது இலங்கையின் ஏற்றுமதிகளைக் கொள்வனவு செய்வோருக்கு இலங்கைக்குள் மூலதனத்தைக் கொண்டு வருவோரும் ரூபாவிற்கு எழுப்பும் கேள்வியே வெளிப்படுத்தப்படுகின்றது. ரூபாவின் டொலர் பெறுமதி குறைவடையும்போது சார்பளவில் ரூபா மலிவானதாக மாறுவதால் ரூபாவிற்கான வெளிநாட்டவர்களின் கேள்வி அதிகரிக்கும்.

  ரூபாவின் டொலர் பெறுமதி அதிகரிக்கும்போது சார்பளவில் ரூபா விலை கூடியதாக மாறுவதால் வெளிநாட்டவர்கள் ரூபாவுக்கு எழுப்பும் கேள்வி குறைவடையும். இதன் காரணமாக ரூபாவிற்கான கேள்வி வளையி இடம்மிருந்து வலமாக மேலிருந்து கீழாகச் சரிந்து செல்லும்.

(01 புள்ளி)

- செலாவணிச் சந்தையில் ரூபாவின் நிரம்பல் வளையியானது இலங்கையின் இறக்குமதிகள் மற்றும் மூலதனத்தை நாட்டுக்கு வெளியே கொண்டு செல்வதற்கான கேள்வியைக் காட்டுகின்றது.

  இதன்போது ரூபாவை விற்பனை செய்து டொலர் கொள்வனவு செய்யப்படுகின்றது ரூபாவின் டொலர் பெறுமதி அதிகரிக்கும்போது இறக்குமதிகள் சார்பளவில் மலிவானதாக மாறுவதால் இறக்குமதிகளுக்கான கேள்வி அதிகரிக்கும் அதேவேளை ரூபாவின் நிரம்பல் அதிகரிக்கும் அதேவேளை ரூபாவின் நிரம்பல் அதிகரிக்கும்.

  மறுபுறம் ரூபாவின் டொலர் பெறுமதி வீழ்ச்சியடையும்போது சார்பளவில் இறக்குமதிகள் விலை கூடியதாக மாறுவதால் இறக்குமதி மீதான கேள்வி குறைவடையும்.

  இதன் விளைவாக சந்தையில் டொலரைக் கொள்வனவு செய்ய நிரம்பல் செய்யப்படும் ரூபாவின் நிரம்பல் குறையும்.

  ஆகவே ரூபாவிற்கான நிரம்பல் வளையி இடமிருந்து வலமாக மேல்நோக்கிச் சரிந்து செல்லும்.

(01 புள்ளி)

8ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



08 ஆம் வினாவிற்கு சுமார் 36% பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளன். (வரைபு 2) இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் உரித்தாகும்.

அதில் புள்ளி 0 - 5 ஆயிடையில் 62% மட்டும்
புள்ளி 6 - 10 ஆயிடையில் 31% மட்டும்
புள்ளி 11 - 15 ஆயிடையில் 6% மட்டும்
புள்ளி 16 - 20 ஆயிடையில் 1% மட்டும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.



இவ்வினாவின் v பகுதிகளில் i ஆம் பகுதியின் இலகுதன்மை கூடியதாகும். அதன் இலகுதன்மை 59% ஆகும். இலகுதன்மை மிகவும் குறைந்த ii ஆம் பகுதியாகும். பகுதி iv இன் 'இ', 'ஈ' ஆகிய பிரிவுகளின் இலகுதன்மை குறைந்த மட்டத்தில் நிலவியது. அது முறையே 11% உம் 11% உம் ஆகும்.

- I ஆம் பகுதியின் இலகுதன்மை 59% ஆகும். வெளிநாட்டு வர்த்தகத்துடன் தொடர்புடைய ஒப்பீட்டு நன்மை, முழு நன்மை என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு இவ்வினாவின் மூலம் வினவப்பட்டுள்ளது. இவ்வினா இதற்கு முந்திய ஆண்டுகளில் கேட்கப்பட்டிருந்தாலும் குறிப்பிடத்தக்க அளவு மாணவர்கள் சரியான விடையளிக்கத் தவறியுள்ளனர். கடந்த ஆண்டுகளின் பரீட்சசையின்போது இவ் எண்ணக்கரு தொடர்பாக கொடுக்கப்பட்ட ஆலோசனைகள் பரீட்சார்த்திகளின் கவனத்திற்குக் கொண்டு வராமை இதன் மூலம் தெளிவாகின்றது. கடந்த கால வினாப்பத்திரங்களில் கவனத் செலுத்துவது முக்கியமானது.

- II ஆம் பகுதியின் இலகுதன்மை 10% ஆகும். பரீட்சார்த்திகளின் அதிகளவானோர் சரியாக விடையளிக்கத் தவறியுள்ளனர். இலங்கையின் விவசாயக் கைத்தொழில் ஏற்றுமதி வருமானம் மந்தகதியில் வளர்ச்சியடைவதற்கான காரணம் பற்றி அண்மைக்கால போக்கையும் அதற்கான காரணிகளையம் விளக்கக் கூடிய ஆற்றல் இன்மையினாலேயே சாதனமான விடையை அளிக்கத் தவறிள்ளனர். மத்திய வங்கியின் அறிக்கையை பரிசீலனை செய்வதன் மூலம் இது தொடர்பான தற்கால அறிவை விருத்திசெய்து கொள்ளலாம்.

- III ஆம் பகுதியின் இலகுதன்மை 32% ஆகும். இப்பகுதியின் மூலம் இலங்கையில் தற்போது மேற்கொண்டுள்ள பிராந்திய மாற்றும் இருபக்கத் தாராள வர்த்தக உடன்படிக்கைகள் ஏற்படுவதன் மூலம் பிராந்திய, இருபக்க வர்த்தக உடன்படிக்கை பற்றி கேட்கப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையை அளிக்க முடியாமல் போயுள்ளமையின் மூலம் இலங்கையின் வெளிநாட்டு வியாபாரம் தொடர்பான தகவல்கள் பற்றிய அறிவு போதியளவு காணப்படவில்லை என்பது புலனாகின்றது. எனவே குறித்த விடயம் தொடர்பாக அறிவை விருத்தி செய்யக்கூடிய வகையில் கற்றல் - கற்பித்தல் தொழிற்பாடுகளை ஒழுங்கமைத்தல் வேண்டும்.

- IV ஆம் பகுதியின் (அ), (ஆ), (இ), (ஈ) ஆகிய உபபிரிவுகளின் இலகுதன்மை முறையே 13%, 21%, 11%, 11% ஆகும். இவ்வினாவின் மூலம் கொடுக்கப்பட்ட சில வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல் சென்மதி நிலுவையில் எக்கணக்குகளில் வரவிலும் செலவிலும் எவ்வாறு பதியப்படும் என்பது பற்றியதாகும். இப்பகுதி பரீட்சார்த்திகளுக்கு அதிகளவில் கடினமாவதற்கு சென்மதி நிலுவையில் கொடுக்கல் வாங்கல் வரவு மற்றும் செலவு என சரியாகப் பதியக்கூடிய அறிவு பரீட்சார்த்திகளிடம் காணப்படாமை காரணமாகும். சென்மதி நிலுவை அட்டவணையில் உள்ள எல்லாக் கணக்குகளையும் கொடுக்கல் வாங்கல் என இரட்டைப்பதிவு முறையின் கீழ் அறிக்கைப்படுத்த பயிற்றுவித்தல் மூலம் பரீட்சார்த்திகளின் அறிவையும் விளக்கத்தையும் விருத்திசெய்தல் வேண்டும்.

- V ஆம் பகுதிக்கான இலகுதன்மை 16% ஆகும். இப்பகுதயின் மூலம் ரூபாவின் டொலர் பெறுமதியை அளவிடும் முறையின் கீழ் பெயரளவு வெளிநாட்டு நாணய மாற்று வீதம் தீர்மானிக்கப்படும் முறைமை கேட்கப்பட்டுள்ளது. அதாவது ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதி அமெரிக்க டொலரால் தீர்மானிக்கப்படும் முறையும் வெளிநாட்டுப் நாணயமாற்று சந்தையில் கேள்வி வளையி கீழாகவும் நிரம்பல் வளையி மேலாகவும் சாய்வது ஏன் என்பதாகும். செலாவணிச் சந்தையில் கேள்வி வளையியும் நிரம்பல் வளையியும் சாயும் திசையும் அதற்கான காரணி தொடர்பாகவும் சரியான அறிவு பரீட்சார்த்திகளிடம் காணப்படாமை பரீட்சார்த்திகள் வழங்கிய விடைகள் வெற்றியளிக்காமைக்கான காரணமாகும். புள்ளி வழங்கும் திட்டத்தில் ரூபாவின் கேள்வி வளையியின் கீழ் நோக்கிய சாய்விற்கும் வழங்கல் வளையியின் மேல் நோக்கிய சாய்விற்குமான காரணிகளை விளக்கமாகக் காட்டப்பட்டுள்ளது. அதனை பரிசீலிப்பதன் மூலம் இவ் எண்ணக்கரு பற்றி பரீட்சார்த்திகள் அறிவை விருத்தி செய்தல் வேண்டும்.

09 ஆம் வினா

9. (i) **தலைக்குரிய தேசிய வருமானத்தோடு ஒப்பிடுகையில் அபிவிருத்தியின் ஒரு சிறந்த அளவீடாக மனித அபிவிருத்திச் சுட்டெண் கருதப்படுவது ஏன் ?** (05 புள்ளிகள்)

(ii) **நீண்டகால பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் ஐந்தைக் குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(iii) **அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் வறுமை மட்டத்தைக் குறைப்பதில் பங்களிப்புச் செய்துள்ள முக்கிய காரணிகள் யாவை ?** (05 புள்ளிகள்)

(iv) **"பொதுப்படுகடன் மூலம் நிதியீட்டம் செய்யப்படும் வர்த்தகமல்லாத் துறைகளை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சி உபாயமானது, பொருளாதாரத்தை நீண்டகால பேண்தகு வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்லுமென எதிர்பார்க்க முடியாது." கடந்த ஐந்து வருடகால இலங்கையின் அனுபவங்களின் அடிப்படையில் இக் கூற்றின் நம்பகத் தன்மையினை மதிப்பிடுக.** (05 புள்ளிகள்)

எதிர்பார்த்த விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

09. (i) பொருளாதார அபிவிருத்தியை அளவீடு செய்வதில் தலைக்குரிய வருமானத்தை விட மனித அபிவிருத்திச் சுட்டெண் பின்வரும் காரணங்களால் உகந்ததாக கருதப்படுகின்றது.

- மொததப் பணரீதியான அளவையாகிய தலைக்குரிய வருமான மட்டம் அபிவிருத்திச் செயன்முறையின் மிகக் குறுகிய ஒரு பகுதியினை மட்டுமே பிரதிபலிக்கின்றது. ஆனால் மனித அபிவிருத்திச் சுட்டெண்ணானது கல்வி, சுகாதாரம், பொனணை, வாழ்க்கைத்தரம் போன்ற குறிகாட்கள் பலவற்றை உள்ளக்கிக் காட்டும் ஒரு கூட்டு அளவையாகக் காணப்படுகின்றது.

- தலைக்குரிய வருமானத்தில் அடிப்படையில் நாடுகள் மத்தியில் நிலவும் வாழ்க்கைத்தர மட்டங்களை ஒப்பீடு செய்து பெறப்படும் முடிவுகள் பிழையான திசைக்கு இட்டுச் செல்லலாம்.

  உர்தர தலைக்குரிய வருமான மட்டங்களைக் கொண்டுள்ள நாடுகளின் வாழ்க்கைத் தரமட்டங்கள் குறைந்த தலைக்குரிய வருமான மட்டங்களைக் கொண்டுள்ள நாடுகளின் வாழ்க்கைத்தர மட்டங்களை விட உணர்வாக இருக்க வேண்டும் என்று கட்டாயமில்லை.

  வாழ்க்கைத்தர மட்டத்தைப் பிரதிபலிக்கும் பிரதான மாறிகள் தலைக்குரிய வருமான மட்டத்தில் உள்ளடக்கப்படுவதில்லை.

- தெரிவு செய்வதற்கு மனிதனுக்குள்ள சுதந்திரத்தை விரிவுபடுத்துவது மனித அபிவிருத்தியின் அத்தியாவசியமான பண்பாகும். தலைக்குரிய வருமானத்தினால் இப்பரிமாணம் வெளிப்படுவதில்லை.

(ஒரு விடயத்திற்கு 02 புள்ளி வீதம் 05 புள்ளிகள்)

(ii)
- உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி
- மனித மூலதன அபிவிருத்தியில் முதலீடு செய்தல். (கல்வி மற்றும் பயிற்சி)
- வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஊக்குவித்தல்.
- ஆய்வு மற்றும் அபிவிருத்தித் துறையில் (R & D) முதலீட்டை அதிகரித்தல்.
- பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டைப் பேணல்.
- அரச தனியார் கூட்டு முயற்கிகளை (PPP) ஊக்குவித்தல்.
- ஏற்றுமதியை பன்முகப்படுத்தல்.
- நெகிழ்தன்மை வாய்ந்த ஊழியச் சந்தையை உருவாக்கல்.
- தொழிற் சங்கங்களோடு அன்னியோன்யமான தொடர்புகளைப் பேணல்.
- வர்த்தக உடன்படிக்கைகள் மூலம் சர்வதேச உற்பத்தி வலைபின்னல்களுடன் தொடர்புபடல்.
- நல்லாட்சியை உறுதிப்படுத்தல்.

(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம் 05 புள்ளிகள்)

(iii) - சார்பளவில் உயர் வளர்ச்சி மட்டத்தைப் பேணிச் செல்லல். அரச முதலீடுகள் உள்ளடங்கலான உள்நாட்டு வளர்ச்சிச் செயன்முறையானது கைத்தொழில் மற்றும் சேவைத்துறைகளில் ஊழியத்திற்கான கேள்வியை அதிகரித்தல்.

- விவசாயத்துறையிலிருந்து ஏனைய பயன்மிகு துறைகளை நோக்கியதான பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றம் மெதுவானதாக ஆனால் படிப்படியாக ஏற்பட்டமை. இதன் மூலம் விளைதிறன் அதிகரித்துள்ளது.

- நகரமயமாக்கலின் துரித வளர்ச்சி, கண்டி, கொழும்பு, காலி போன்ற பிரதான நகரங்களை மையமாகக் கொண்டு பரந்துபட்ட விதத்தில் நகரமயமாக்கல் ஏற்பட்டுள்ளது. அவ்வாறே திருகோணமலை, மட்டக்களப்பு, அக்கரைப்பற்று மற்றும் யாழ்ப்பாணம் போன்ற நகரங்களை மையங்களை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்திச் செயன்முறையொன்றும் இடம் பெற்று வருகின்றது.

- முதனிலைப் பொருள்களின் விலை அதிகரிப்பு, (commodity boom): தேயிலை மற்றும் இறப்பர் விலை அதிகரிப்பு.

- வெளிநாட்டிலிருந்தான பணவனுப்பல்கள் அதிகரித்தமை.

- தொழில்புரியும் வயதுச் சனத்தெகையின் அதிகரிப்பு காரணமாக ஊழிய வருமானங்கள் அதிகரித்தமை.

- உள்நாட்டு மொத்தக் கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பினால் பொருளாதாரச் செயன்முறைகள் புத்துயிர் பெற்றமை.

- வடக்கு கிழக்கு பிரதேசங்களில் யுத்த சூழ்நிலை முடிவுற்றதும் பொருளாதாரச் செயன்முறைகள் புத்துயிர் பெற்றமை.

- நுண் கடன் வசதிகள் ஊக்குவிக்கப்பட்டதனால் சிறிய மற்றும் மிகச்சிறிய தொழில் முயற்சிகள் விரிவாக்கமடைந்தமை.

- கடந்த தசாப்தத்தில்வெ றுமை நிலை குறைவடைந்தமைக்கு பிரதான காரணம் தொழில் வாய்ப்புகள் அதிகரித்தமையோ அரசாங்கம் வழங்கும் மாற்றல் கொடுப்பனவுகள் அதிகரித்தமையோ அன்று. மாறாக ஊழிய வருமானங்கள் அதிகரித்தமையே பிரதான காரணமாகும். விவசாயத்துறை உள்ளிட்ட சகல துறைகளிலும் மெய்க்கூலிகள் அதிகரித்தன் 2006- 2012/13 காரப்பகுதியில் விவசாயத்துறையின் மெய்க்கூலிகள் வருடாந்தம் 5.7% வேகத்திலும் கைத்தொழிலில் 3.6% வேகத்திலும் சேவைத்துறையில் 3.1% வேகத்திலும் அதிகரித்தன.

- கிராமிய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டம்.

(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம் 05 புள்ளிகள்)

(iv) - அண்மைக்காலங்களில் இலங்கையின் பொருளாதார வவளர்ச்சியின் பிரதான இடத்தை வகிப்பது வர்த்தகமல்லாத உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளாகும். 2009 - 2014 காலப்பகுதியில் இலங்கையில் மெய் உள்நாட்டு உற்பத்தியானது 45% இனால் அதிகரித்துள்ளதுடன் இவ்வளர்ச்சிக்கு கட்டடவாக்கம், போக்குவரத்து, வர்த்தகமும் நிதியும் போன்ற வர்த்தகமல்லாத துறைகள் 50% பங்களிப்பினைச் செய்துள்ளன. அவ்வாறே அரச முதலீட்டை முன்னிலைப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட உட்டகட்டமைப்பு அபிவிருத்திச் செயன் முறையினை நிதியீட்டதம் செய்வதற்கு பெருமளவு வெளிநாட்டு கடன்கள் பெறப்பட்டன. 2006 ஆண்டில் வெளிநாட்டுக் கடன்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 42.4% ஆக இருந்த அதேவேளை 2014 ஆம் ஆண்டாகும்போது 57.4% ஆக துரிதமாக உயர்ந்துள்ளது.

- வர்த்தகமல்லாத துறைகளை மையப்படுத்திய வளர்ச்சிச் செயன்முறையினை நீண்டகால அடிப்படையில் பேணிச் செல்வது மிகவும் கடினமானதாகும். வெளிநாட்டுக் கடன்களின் மீதே அரச முதலீகள் தங்கியுள்ளதனால் அதிகரித்துச் செல்லும் கடன்சுமை அரச நிதியியலில் நிறையற்ற தன்மையை ஏற்படுத்தும்.

  மேற்படிவளர்ச்சிச் செயன்முறையினூடாக பெற்ற கடனை மீளச் செலுத்துவதற்கான இயலுமையை உருவாக்கம் நிலை ஏ்படாத காரணத்தால் இவ்வளர்ச்சிச் செயன்முறையினை தொடர்ச்சியாகப் பேணிச் செல்வது மிகச் சிரமமானதாக இருக்கும்.

- வர்த்தகமல்லாத துறைகளில் பொருளாதார நடவடிக்கைகள் மையம் கொண்டிருப்பதனால் சென்மதி நிலுவையிலும் பாரிய தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. பொருளுற்பத்தித் துறையில் குறிப்பாக ஏற்றுமதி சார்ந்த துறைகள் தவிர்ந்த ஏனைய துறைகளில் ஏற்படும் பொருளாதார வளர்ச்சியானது சென்மதி நிலுவையில் பாரிய அழுத்தங்களை உருவாக்கும்.

  வெளிநாட்டுக் கடனையும் அதற்குரிய வட்டியையும் மீளச் செலுத்த போதியளவு அந்நியச் செலாவணியைப் பெறுவது வர்த்தகம் சார்ந்த துநைகளை வலுப்படுத்துவதன் மூலமே சாத்தியமாகும்.

  அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகத் துறையானது தொடர்ச்சியாகப் பின்னடைவைச் சந்தித்து வந்துள்ளது.

  2000 ஆம் ஆண்டில் இலங்கையின் ஏற்றுமதிகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 33% ஆக இருந்துள்ள அதேவேளை 2014 ஆம் ஆண்டில் அது 15% வரையில் குறைவடைந்துள்ளது.

  ஏற்றுமதிக் கட்டமைப்பில் குறிப்பிடத்தக்களசு மாற்றங்களெதுவும் இற்றைக்கு மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் நிலவிய ஏற்றுமதிக் கட்டமைப்பே இன்றும் காணப்படுகின்றது.

- நீண்ட கால பொருளாதார வளர்ச்சி செயன்முறைக்கு அத்தியாவநிமான ஊழிப்படையின் திறன்களையும் நிபுணத்துவத்தையும் அபிவிருத்தி செய்வதில் போதியளவு கவனம் செலுத்தப்படவில்லை.

- கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேற்பட்ட காலப்பகுதியில் இலங்கை பிரதானமாக உள்நாட்டு ரீதியான வளர்ச்சிச் செயன்முறையில் கவனஞ் செலுத்தி வந்துள்ளமையால் 1977இன் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட தாராள வர்த்தகக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட வெளிநோக்கிய அபிவிருத்திச் செயன்முறையில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

  பொருளாதாரமானது அதிகளவு பாதுகாப்புவாத பொருளாதாரக் கொள்கைகளை நோக்கி நகர்ந்துள்ளது. இக்கொள்கைகள் ஏற்றுமதி அபிவிருத்திக்கும் ஏற்றுமதிப் பன்முகப்படுத்தலுக்கும் பலத்த அடியாக அமைந்துள்ளது.

(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம் 05 புள்ளிகள்)

9ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



09 ஆம் வினாவிற்கு சுமார் 25% பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளன். (வரைபு 2) இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் உரித்தாகும்.

அதில் புள்ளி 0 - 5 ஆயிடையில் 71% மட்டும்
புள்ளி 6 - 10 ஆயிடையில் 24% மட்டும்
புள்ளி 11 - 15 ஆயிடையில் 4% மட்டும்
புள்ளி 16 - 20 ஆயிடையில் 1% மட்டும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.



இவ்வினாவில் iv பகுதிகளை உள்ளதுடன் ii, iii ஆகிய பகுதிகளின் இலகுதன்மை கூடியதாகவும் அவற்றின் இலகுதன்மை 34%, 20% ஆகும். iv பகுதி இலகுதன்மை குறைந்த பகுதியாகும். அதன் இலகுதன்மை 11% மட்டுமே முழுமையாக நோக்கும்போது பரீட்சார்த்திகள் குறைந்த சாதனை மட்டத்தை அடைந்துள்ள வினாவாகும்.

- I பகுதியின் இலகுதன்மை 20% ஆகும். ஒப்பீடு செய்யும் விடையை எதிர்பார்க்கும் இவ்வினாவிற்கு பெரும்பாலான பரீட்சார்த்திகள் விடையளிக்கும்போது மனித அபிவிருத்திச் சுட்டியின் உள்ளடக்கம் பற்றிக் குறிப்பிட்டிருந்தாலும் அது தலா மொத்த தேசிய வருமானத்தை விட ஏன் சிறந்ததொரு சுட்டி என்பதைக் காட்டியிருக்கவில்லை. அபிவிருத்தியை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் பல்வேறு சுட்டிகள் / அளவீடுகளை ஒப்பிட்டு கற்பதற்கு மாணவர்களைப் பயிற்றுவித்தல் வேண்டும்.

- II ஆம் பகுதி இவ்வினாவின் இலகுதன்மை கூடிய பகுதியாகும். அது 34% ஆகும். நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சிச் செயற்பாடுகளையும் அவற்றை செயற்படுத்தும் முறைகளையும் பற்றிய அறிவை மாணவர்கள் மத்தியில் விருத்தி செய்வதன் மூலம் இவ்வாறான பிரச்சினைகளின் தடைகளைக் குறைத்துக் கொள்ளலாம். இதற்கான விடை தற்கால தகவல்களன்றி கொள்கை ரீதியான விடையாக அமைதல் வேண்டும்.

- III பகுதியின் இலகுதன்மை குறைந்ததாகும். அதன் இலகுதன்மை 20% ஆகும். தற்கால அறிவு இற்றை நிலைப்படுத்தாமை முக்கிய குறைபாடாக உள்ளமை தெளிவாகின்றது.

- IV இப்பகுதி இவ்வினாவின் இலகுதன்மை குறைந்த பகுதியாகும். பகுப்பாய்வு செய்யக்கூடிய விடையை எதிர்பார்க்கும் இவ்வினாவின் இலகுதன்மை 11% ஆகம். வர்த்தகமல்லாத துறையை அடிப்படையாகக் கொண்ட "பொருளாதார வளர்ச்சி" என்பதில் வர்த்தகமல்லா பொருளாதாரச் செயற்பாடுகள் என்றால் என்ன என்பதை சரியாக இனங்காணாமை இலகுதன்மை குறைவதற்கு கடுமையாகச் செல்வாக்குச் செலுத்தியுள்ளது தெளிவாகின்றது. அபிவிருத்திக் கொள்கையில் நிகழ்காலத்தில் ஏற்படும் மாற்றங்களை ஒப்பிட்டுக் கற்பதற்கு மாணவர்களை ஈடுபடுத்தல் வேண்டும்.

10 ஆம் வினா

10. (i) **"அண்மைய ஆண்டுகளில் அரசாங்கம் பல்வேறு ஊக்குவிப்புகளை வழங்கிய போதிலும் இலங்கையின் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் நடத்தையானது எதிர்பார்ப்புகளைச் சிதறடித்துள்ளது."**

இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்குத் தடையாகவுள்ள பிரதான காரணிகள் யாவை ? (05 புள்ளிகள்)

(ii) **இலங்கையின் அரசாங்க நிதிநிலைமையின் பிரதான கட்டமைப்புசார் பலவீனங்களைக் குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(iii) **அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் வர்த்தக நிலுவையின் குறைநிலையானது விரிவடைந்து செல்வதற்கான காரணங்கள் யாவை ?** (05 புள்ளிகள்)

(iv) **இலங்கையின் நீண்டகால பொருளாதார வளர்ச்சியில் ஒரு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தத்தக்க, உலகப் பொருளாதாரத்தில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

எதிர்பார்த்த விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

10. (i)
- யுத்த சூழ்நிலை மற்றும் சிவில் போராட்டங்கள் காரணமாக உருவாகிய நிச்சயமற்ற தன்மை.
- நெகிழ்தன்மையற்ற ஊழியச் சந்தை.
- உள்நாட்டு சந்தைகள் வரையறுக்கப்படடவையாக உள்ளமை.
- அரசாங்க கொள்கைகள் மற்றும் நிர்வாக கட்டளைகளில் காணப்புடும் நிச்சயமற்ற தன்மை.
- உற்பத்திச் செலவு அதிகரித்தமை : உதாரணமாக மின் கட்டணங்களைக் குறிப்பிடலாம். (ஒரு கிலோ வோட் மணித்தியாலத்திற்கான மின் கட்டணம் இலங்கையில் 0.18 டொலராகும். சிங்கப்பூரில் 0.09 டொலராகும், தாய்லாந்தில் 0.05 டொலராககும், இந்தோனேசியாவில் 0.06 டொலராகும்.
- ஒப்பந்தங்களை வழங்கும்போது குறிப்பாக பெருமளவில் மோசடிகள் இடம்பெறுகின்றமை.
- மிகவம் சிக்கார்ந்ததும் களைப்பூட்டுவதுமான நிர்வாக நடைமுறைகள் (red tape): வியாபாரங்களை ஆரம்பிப்பதற்கு எடுக்கின்ற காலம் ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்த எடுக்கும் காலம் சார்பளவில் இலங்கையில் மிகவும் நீண்டதாகவுள்ளது.
- பொருளாதாரக் கொள்கைகளின் முரண்பாடுடைய தன்மை மற்றும் எதிர்காலக் கொள்கை போக்கத்திசையினை எதிர்வுகூற முடியாமை.
- அரசுடமையாக்கம் சட்டதிட்டங்கள்

(ஏதேனும் ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம் 05 புள்ளிகள்)

(ii)
- அரச வருவாய்கள் மிகக் குறைந்த பெறுமதியுடையதாயும் குறைவடைந்து செல்லும் போக்குடையதாயும் உள்ளமை :

  முழு உலகிலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மிகக் குறைந்த அரச வருவாய் மட்டங்களைக் கொண்டுள்ள நாடுகள் மத்தியில் இலங்கை குறிப்பிடத்தக்க ஒரு இடத்தைப் பெற்றுள்ளது.

  1978 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக இலங்கையின் அரசிறை 24.2% ஆகக் காணப்படட் அதேவேளை 2014 இல் அது 11.4% ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.
- அரசாங்க செலவீடுகளின் நெகிழ்வற்ற தன்மை:

  அரசாங்க செலவீடுகளில் 60% ஆனவை எவ்வகையிலும் குறைக்க முடியாத செலவீடுகளாகிய வட்டிச் செலுத்தல்கள், சம்பளங்கள் மற்றும் மாற்றல் செலுத்தல்களாகக் காணப்படுகின்றன.
- மனித அபிவிருத்தித் துறையில் அரசாங்க செலவீடுகள் போதியளவு இடம்பெறாமை:

  பாதீட்டுக் குறைநிலையைக் கட்டுப்படுத்த முயற்சிப்பதனாலும், அரசாங்கத்தின் உட்கட்டுமான வேலைத்திட்டங்களுக்கு உயர்ந்த முன்னுரிமை வழங்குவதன் காரணமாகவும் கல்வி, சுகாதாரம் மற்றம் சமூக பாதுகாப்பு போன்வற்றின் மீதான செலவீடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
- அரசாங்கத்துறையின் வினைத்திறனின்மை:

  மிகப் பிரதானமான அரச முயற்சியாண்மைகள் பாரியளவில் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளன. இலங்கை மின்சார சபை, ஸ்ரீ லங்கா விமான சேவை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் என்பன அவற்றுள் முக்கியமானவை ஆகும்.

(ஏதேனும் ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம் 05 புள்ளிகள்)

(iii) - ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் குறைவடைந்தமை:

குறிப்பாக இலங்கையின் தேயிலை ஏற்றுமதிகள் இண்மைக்காலமாக 20% அளவினால் வீழ்ச்சியடைந்துள்ளன. உலக சந்தையில் பெற்றோலிய விலைகள் வீழ்ச்சியடைந்தமையினால், ரஷ்யா, ஈராக், சிரியா போன்ற இலங்கையின் பிரதான தேயிலைக் கொள்வனவாளர்களின் பொருளாதாரங்கள் பின்னடைவைச் சந்தித்துள்ளன.

- இலங்கையின் பிரதான ஏற்றுமதிச் சந்தைகளின் நிலவும் பொருளாதாரப் பின்னடைவு : ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜப்பானில் நிலவும் பேரினப் பொருளாதார உறுதியற்ற நிலை
- மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் அரசியல் ஸ்திரமற்ற நிலை
- ரஸ்யாவின் நாணய அலகாகிய ரூபிள் பாரியளவில் தேய்வடைந்துள்ளமை
- ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்கியிருந்த GSP + தீர்வைச் சலுகைகளை நீக்கியமை
- தேயிலை மற்றும் இறப்பரின் உலக சந்தை விலைகள் வீழ்ச்சியடைந்தமை ஒரு புறம் பொருளாதாரப் பின்னடைவு காரணமாக கேள்வி குறைவடைந்தமை மறுபுறம் செயற்கை இறப்பர் விலைகள் வீழ்ச்சியடைந்தமை ஆகிய இரு காரணிகளால் இயற்கை றப்பரின் கேள்வி குறைவடைந்துள்ளது.
- இலங்கையின் ஏற்றுமதித் துறை பன்முகப்படுத்தப்படாமை.
- உள்நாட்டு வருமானங்கள் அதிகரித்த காரணத்தால் இறக்குமதி செய்யப்படும் நுகர்வுப் பொருள்கள் மீதான கேள்வி துரிதமாக அதிகரித்தமை.
- ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையின் மீன் ஏற்றுமதிகள் மீது தடை விதித்தமை.

(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம் 05 புள்ளிகள்)

(iv) - உலக சந்தையில் பெற்றோலிய விலைகள் பெருமளவில் வீழ்ச்சியடைந்தமை. இலங்கையின் பிரதான ஏற்றுமதி சந்தைகளான ரஷ்யா, சவுதி அரேபியா, ஈராக், ஈரான் போன்ற பெற்றோலிய ஏற்றுமதி நாடுகள் பொருளாதாரப் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளமை.

- மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் ஸ்திரமற்ற அரசியல் நிலை.
- ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள நாடுகளில் பல இன்றும் பொருளாதாரப் பின்னடைவு நிலையைத் தொடர்ந்தும் எதிர்நோக்குகின்றமை.
- ஜப்பானியப் பொருளாதாரம் தேக்க நிலையில் உள்ளமை.
- சீனப் பொருளாதாரம் மந்தகதியிலான வளர்ச்சி.
- ஐக்கிய அமெரிக்காவில் வட்டிவீதங்கள் அதிரித்துச் செல்கின்றமை.
- ஐக்கிய ராச்சியம் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகிச் சென்றுள்ளமை.

(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம் 05 புள்ளிகள்)

10ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



பரீட்சார்த்திகளில் 10% ஆனோர் இவ்வினாவிற்கு விடையளித்துள்ளன். (வரைபு 2) இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் உரித்தாகும்.

அதில் புள்ளி 0 - 5 ஆயிடையில் 87% மட்டும்
புள்ளி 6 - 10 ஆயிடையில் 11% மட்டும்
புள்ளி 11 - 15 ஆயிடையில் 2% மட்டும்
புள்ளி 16 - 20 ஆயிடையில் 0% மட்டும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.



இவ்வினா 4 பகுதிகளை உள்ளடக்கியுள்ளதுடன் iv ஆம் பகுதி மிகவும் கடினமாகதாகவுள்ளது. அதன் இலகுதன்மை 3% ஆகும். இலகுதன்மை கூடிய பகுதி i ஆகும். அதன் இலகுதன்மை 11% ஆகும். ii ஆம் iii ஆம் பகுதிகள் குறைந்த இலகுதன்மை கொண்டதாகக் காணப்படுவதுடன் அவற்றின் இலகுதன்மை முறையே 8%, 4% ஆகும். மொத்தமாக நோக்கும்போது குறைந்த இலகுதன்மையுள்ள வினாவாகும்.

- ⋆ i இப்பகுதியின் இலகுதன்மை 11% ஆகும். மொத்தப் பரீட்சார்த்திகளில் 9.88% இனரே 10 ஆம் வினாவைத் தெரிவுசெய்துள்ளனர். சார்பு ரீதியில் இவ்வினா இலகுதன்மை குறைந்த வினா என்பது புலப்படுகின்றது.

  நேரடி வெளிநாட்டு முதலீடு தொடர்பான பரீட்சார்த்திகளிடையே காணப்படும் அறிவு விளக்கம் சிறிதளவே காணப்படுகின்றது என்பது தெளிவாகின்றது. நேரடி வெளிநாட்டு முதலீட்டிற்கான தடைகளே இவ்வினாவின் மூலம் எதிர்பார்க்கப்பட்டது. நேரடியான விடையை எதிர்பார்த்தாலும் விடயை ஒழுங்கமைப்பதற்கு பரீட்சார்த்திகள் தவறியுள்ளனர். வெளிநாட்டு முதலீடு தொடர்பாகக் கற்பிக்கும்போது அதன் முக்கியத்துவம் நடைமுறையில் காணப்படும் தடைகளையும் புரிந்துகொள்ளக் கூடிய முறையில் கற்பித்தல் வேண்டும்.

- ⋆ ii ஆம் பகுதியின் இலகுதன்மை 8% ஆகும். அரச நிதி நிலைமையில் அரச வருமானம் அரச செலவு மற்றும் அரச செலவுக் கட்டமையில் காணப்புடும் குறைபாடுகள் என்பன கவனத்தில் ஈர்க்கப்பட்டது. கற்பித்தல் செயற்பாட்டில் அரச வருமானம் அரச செலவு, அரச பாதீடு போன்ற எல்லாத்துறைகளினதும் கட்டமைப்பில் காணப்படும் குறைபாடுகளை ஈர்க்கும் படி கற்றல் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

- ⋆ iii ஆம் பகுதியின் இலகுதன்மை 4% ஆகும். இவ்வினாவினைத் தெரிவுசெய்துள்ள வரையறுத்த பரீட்சார்த்திகளினதும் இலகுதன்மை மிகவும் குறைவாகும். இலங்கையின் சென்மதி நிலுவை அட்டவணையில் அளவு தொடர்பாகக் கலந்துரையாடும்போது வர்த்தக மீதியின் வகுதிகளிலும் அவற்றின் மாற்றம் ஏற்படுவதற்கான காரணிகள் தொடர்பாக மத்திய வங்கி அறிக்கையின் மூலம் தேவையான தகவல்கள் பற்றி பரீட்சார்த்திகள் அறிவுறுத்தப்படல் வேண்டும்.

- ⋆ iv இதன் இலகுதன்மை 3% ஆகம். மொத்த வினாப்பத்திரத்திலும் மிகவும் குறைந்த இலகுதன்மையைக் காட்டும் பகுதியாகும். பூகோளப் பொருளாதாரத்தின் போக்கு இலங்கையின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் முறை பற்றி பரீட்சார்த்திகளிடம் காணப்படும் திறந்த அறிவைப் பரீட்சித்தலாகும். பூகோளப் பொருளாதாரத்தின் மாற்றங்கள் மட்டுமன்றி அவை இலங்கைப் பொருளாதாரத்தில் அதன் பாதிப்புப் பற்றி பரீட்சார்த்திகளிடம் காணப்படும் புரிந்துணர்வை விரிவுபடுத்தல் வேண்டும்.

2.2.3 **வினாப்பத்திரம் II இற்கு விடையளித்தல் தொடர்பான முழு அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள் :**

இம்மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரிக்கையில் பயன்படுத்திய தரவுகளை ஒழுங்கமைத்து, II ஆம் வினாப்பத்திரத்தின் ஒவ்வொரு வினாவையும் தெரிவு செய்த சதவீதமும் இலகுதன்மையும் பின்வரும் வரைபு அட்டவணை மூலம் கட்டமைக்கலாம்.



வினா இலக்கம்	1	2	3	4	5	6	7	8	9	10
தெரிவுசெய்யப்பட்ட சதவீதம்	97	98	61	36	28	58	89	36	26	10
இலகுதன்மை %	55	67	58	53	42	42	54	27	22	6

வினா இலக்கம் 1 இலிருந்து 5 வரை ‘அ’ பகுதியும் 6 இலிருந்து 10 வரை ‘ஆ’ பகுதியும் உள்ளடங்கியுள்ளது. பரீட்சார்த்திகள் ‘அ’ பகுதியிலிருந்து குறைந்தபட்சம் இரு வினாக்களையும் ‘ஆ’ பகுதியிலிருந்து குறைந்தபட்சம் இரு வினாக்களையும் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

‘அ’ பகுதி ஐந்து வினாக்களுள் கூடுதலாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது 2 ஆம் 1 ஆம் வினாக்களாவதுடன், ‘ஆ’ பகுதி ஐந்து வினாக்களிலிருந்தும் கூடுதலாக 7 ஆம் 6 ஆம் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவை தெரிவு செய்யப்பட்டுள்ள சதவீதம் முறையே 98%, 97%, 89%, 58% ஆகும். அதற்கடுத்ததாக கூடுதலாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள வினா 3 ஆகும். மாற்று 6 வினாக்களிலும் கூடுதலாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள வினாவுக்கு பரீட்சார்த்திகளில் அரைவாசிக்கு மேல் (61%) விடையளித்துள்ளனர். பாடத்திட்டம், இவ்வினாக்களுக்கு அடிப்படையான கரு மற்றும் விடயதானம் கற்றல் - கற்பித்தல் தொழிற்பாட்டில் கூடிய கவனம் செலுத்துதலும் மாணவர்களிடையே கூடிய பிரசித்தி பெற்றவையாகும். எனவே அவ்வினாக்களின் இலகுதன்மை சார்பு ரீதியில் உயர் பெறுமதியைப் பெற வேண்டும். வினாக்களைத் தெரிவுசெய்யும் சதவீதம் இறங்குவரிசைப்படி முதலில் அமையும் வினாக்களின் ஒழுங்குமுறை இலக்கம் 2, 1, 7, 6 மற்றும் 3 ஆகும். எனினும் இலகுதன்மையின்படி முதன்மை பெறும் வினாக்கள் முறையே 2, 3, 1, 7 மற்றும் 4 ஆகும். இலக்கம் 2, 1 மற்றும் 7 ஆம் வினாக்கள் கூடுதலாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும், அவற்றுக்கு அளிக்கப்பட்டுள்ள விடைகள் அவ்வளவு திருப்திகரமானதன்று. அத்துடன் கூடிய புள்ளிகளை பெற்றுக்கொள்ள முடியாது போயுள்ளது என்பதும், இத்தகவல்களின் தெளிவாகின்றது. எனவே மாணவர்களின் கூடிய கவனத்தை ஈர்க்கும் இவ்வாறான வினாக்களிலிருந்து கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள கற்றல் - கற்பித்தல் தொழிற்பாடுகளில் மாணவர்களுக்கு வழிகாட்டுவது மிகவும் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொள்ள பேருதவியாக அமையும்.

கூடுதலாகத் தெரிவு செய்துள்ள 2 ஆம்வினாவின் இலகுதன்மை 67% வரை வரையறுக்கப்பட்டுள்ளமை பொருளியல் பாடத்தின் முன்னேற்றத்தை எதிர்பார்க்கும் எல்லோரினதும் கவனத்தை ஈர்க்க வேண்டும். சுய ஊக்குவிப்பு (self motivation) வினாக்களுக்கு விடையளிப்போர், சராசரியாக வினாக்களுக்கு வழங்கப்பட்டுள்ள மொத்தப் புள்ளிகளில் கூடிய சதவீதத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் தமது விடைகளை சரியான விடயங்களினூடாக ஒழுங்கமைத்து முன்வைக்க வழிகாட்டல் வேண்டும்.

குறைவாகத் தெரிவு செய்துள்ள வினா 10 ஆவதுடன் அதன் இலகுதன்மை 6% இற்கு வரையறுக்கப்பட்டுள்ளது. அதற்கு அடிப்படையான விடயதானங்கள் வகுப்பறை கற்றல் - கற்பித்தல் தொழிற்பாடுகளில் போதியளவு கவனத்தில் கொள்ளப்படாமை புலப்படுகின்றது. தரம் 13 இன் இறுதித் தவணையின்போது மாணவர்களின் வரவில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக இந்நிலை உருவாகியுள்ளது.

II வினாப்பத்திரத்தின் ஒவ்வொரு வினாவையும் கவனிக்கும்போது இலகுதன்மை கூடிய வினாவின் இலகுதன்மை 60% ஆக வரையறுக்கப்பட்டுள்ளதுடன் வினா இலக்கம் 2 தவிர்ந்த ஏனைய 9 வினாக்களுக்கும் இலகுதன்மை 60% ஐ விடக் குறைந்துள்ளமை இவ்விடயத்துடன் தொடர்புடைய சகல துறையினரினதும் கவனத்திற்கு கொண்டுவரவேண்டிய காரணமாகும். அதேபோல் II ஆம் வினாப்பத்திரத்தின் மொத்த இலகுதன்மை 51.10% வரை வரையறுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான தகவல்களினூடாக எச்சரிக்கைவிடுப்பது கற்றல் - கற்பித்தல் தொழிற்பாட்டில் கண்டாய்வு பரீட்சைகளில் ஈடுபடுத்தி இலக்குகளை அடிப்படையாகக் கொண்ட பரிகார நிகழ்ச்சித் திட்டங்களை உடனடியாக செயற்படுத்துவது முக்கிய தேவையாகும் என்பதாகும்.

பகுதி III

3.0 விடையளித்தலின்போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும் :

3.1. விடையளித்தலின்போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் :

பொதுவான அறிவுறுத்தல்கள்

* வினாப்பத்திரத்திலுள்ள பிரதான அறிவுறுத்தல்களை வாசித்து விளங்கிக்கொள்ள வேண்டும். அதாவது ஒவ்வொரு பகுதியிலுமிருந்து எத்தனை வினாக்களுக்கு விடையளிக்கப்பட வேண்டும், எந்த வினா கட்டாயமானது, எவ்வளவு காலம் வழங்கப்பட்டுள்ளது, எவ்வளவு புள்ளிகள் கிடைக்கப்பெறும் என்பன தொடர்பாகக் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். வினாக்களை நன்கு வாசித்து சரியாக விளங்கி வினாக்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். ஒரு வினா இரு பிரிவுகளாக ஒன்றாக எழுதியிருந்தால் இரண்டு பிரிவுகளுக்கு விடையளிப்பதற்குத் தயாராக வேண்டும்.

* பத்திரம் I இற்கு விடையளிக்கும்போது மிகச் சரியான விடையை மட்டுமே தெரிவுசெய்ய வேண்டும். அத்தோடு தெளிவாக அத்தெரிவின் இலக்கத்தை மாத்திரம் விடைத்தாளில் இடுதல் வேண்டும்.

* பத்திரம் II இன் (அ) மற்றும் (ஆ) பகுதிகளின் வினாக்களுக்கு விடையளிக்கும்போது எல்லா பிரதான வினாக்களையும் புதிய தாளில் எழுதத் தொடங்க வேண்டும்.

* விடைகள் தெளிவான கையெழுத்தில் எழுதப்படல் வேண்டும்.

* பரீட்சார்த்திகள் விடைத்தாளின் எல்லாப் பக்கங்களிலும் உரிய இடங்களில் தமது சுட்டெண்ணை எழுதுதல் வேண்டும்.

* வினா இலக்கம், உபபிரிவுகளின் இலக்கங்கள் சரியாக எழுதப்பட வேண்டும்.

* சுருக்க விடையளிக்கத் தேவையான சந்தர்ப்பத்தில் விரிவாக விடையளிப்பதை தவிர்ப்பதோடு, விரிவாக விடையளிக்கத் தேவையான சந்தர்ப்பத்தில் சுருக்கமாக விடையளித்தலையும் தவிர்த்தல் வேண்டும்.

* வினாவில் கேட்கப்பட்டுள்ளவாறு விடைகள் தர்க்கரீதியாகவும், பகுப்பாய்வு முறையிலும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

* விடையெழுதும்போது சிவப்பு, பச்சை நிற மை பேனாக்களை பாவித்தலைத் தவிர்க்கவும்.

* விடைக்குரிய புள்ளிகளின் அளவு, காலம் என்பவற்றுக்கிடையில் காணப்படும் தொடர்புகளுக்கேற்ப நேர முகாமைத்துவத்தை பின்பற்றுதல் வேண்டும்.

* வரைபுகளை வரையும்போது இடைவெட்டை சரியாகக் காட்டுவதுடன் அச்சுக்களையும் வரைபுகளையும் பெயரிடுவது மிக முக்கியம்.

* சமன்பாடுகளைத் தீர்க்கும்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட கணிதக் கோட்பாட்டின்படி படிமுறை காட்டப்படல் வேண்டும்.

* அம்புக்குறி மற்றும் வேறு குறியீடுகள் மூலம் காட்டும்போது அவற்றைத் தெளிவுபடுத்துதல் வேண்டும்.

விசேட அறிவுறுத்தல்கள்

* பொருளியல் பாடத்தில் பயன்படுத்தப்படும் கலைச் சொற்கள் பயன்படுத்தப்பட வேண்டும். உதாரணம் : சுய நுகர்வு (Autonimous.com)

* தேவையான இடங்களில் புள்ளிவிபர ரீதியான அட்டவணைகள், வரைபுகள், சமன்பாடுகள் மூலமாக விடைகளுக்கு விளக்கமளிக்கப்பட வேண்டும். வரைபுகளை சரியான அளவுத்திட்டத்திற்கேற்ப வரைவதிலும் அச்சுகளைச் சரியாகப் பெயரிடுவதிலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

* கணித்தல்களின்போது ஒவ்வொரு படிமுறையையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். உரிய சந்தர்ப்பங்களின்போது சரியான அலகுகளைக் குறிப்பிடல் வேண்டும்.

* சரியான குறியீடுகளைக் குறிப்பிடல் வேண்டும்.

* உரிய வரைபடங்களை வரையும்போது கோடுகளைச் சரியாகப் பெயரிடவும் அதன் பெயர்ச்சிகளின் திசைகளை சரியாகக் குறிப்பிடவும் வேண்டும்.

* இலங்கையின் பொருளாதாரத்துக்கு மிக முக்கிய புள்ளிவிபரம் அண்மைக்கால (முன்னைய இரண்டு ஆண்டுகள்) தரவுகளை ஞாபகத்தில் வைத்திருப்பதால் விடையளிக்க இலகுவாகும்.

  - பொருளாதார வளர்ச்சி வீதம்
  - பணவீக்க விகிதம்
  - வறுமைச் சுட்டி
  - நிலுவைப் பற்றாக்குறை
  - அரச முதலீட்டு வீதம்
  - தலா ஆள்வீத வருமானம்
  - தொழிலின்மை வீதம்
  - வரவு செலவுத் திட்டப்பற்றாக்குறை
  - அரசபடுகடன் வீதம்

* கட்டமைப்பு வினாப்பத்திரத்தின் வினாக்களுக்கு விடையளிக்கும்பொது, தர்க்க ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட முறையில், கேட்கப்படட வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளை வழங்குவதற்கான அனுபவத்தை மாணவர்களுக்குக் கொடுக்கக்கூடிய முறையில் வகுப்பறைக் கற்றல் நடவடிக்கைகளை ஒழுங்கமைக்க வேண்டும்.

வரைபு தொடர்பான ஆலோசனைகள்:

* தரவுகளுக்கேற்ப வரைபுகள் வரையும்போது வரைபு தாள் பயன்படுத்துவது மிக முக்கியமாகும். வரைபுதாள் பயன்படுத்தாததால் சரியாக கணிப்பீடு மேற்கொள்ளப்படாமையை விண்ணப்பதாரிகளுக்கு புள்ளிகள் இழக்கப்படுவதாக புள்ளியிடலின்போது புலப்படுகின்றது.

* அச்சுகளைச் சரியாக பெயரிடாமையும் வரைபுகளைப் பெயரிடாமையும் புள்ளிகள் குறையக் காரணமாகும்.
உதாரணம் : உற்பத்தி சாத்திய எல்லை வளையியை பெயரிடும்போது X உம் Y உம் எனப் பெயரிடுவதற்குப் புள்ளி வழங்க முடியாது. அது X பண்டம் Y பண்டம் எனப் பெயரிடல் வேண்டும்.

* உற்பத்திச் சாத்திய எல்லை வளையியை வரையும்போது இரு அச்சுக்களையும் தொடக்கூடிய வகையில் வரைவது மிக முக்கியமாகும். அவ்வாறு இல்லாதுவிடின் அது உற்பத்திச் சாத்திய வளையியன்று.

* வரைபை வரையும்போது இடைவெட்டைச் சரியாகப் பெயரிடாமை புள்ளிகள் குறையக் காரணமாகும்.
உதாரணம் : நிரம்பல் கோட்டை வரையும்போது அங்கு எதிர்கணிய இடைவெட்டுப் புள்ளி ஆரம்பிக்குமாயின் அதன்படி வரைபை வரைய வேண்டும்.

உதாரணம் :



மொத்தச் செலவு வளையிலும் சுயாதீன செலவின் அளவினை வரைபில் சரியாகக் காட்ட வேண்டும்.

உதாரணம் :



* பேரினப் பொருளாதார சமநிலையைக் காட்டும்போது வருமானம், மொத்தச் செலவுகளைக் குறிக்கும்போது இரு அச்சுகளிலும் தரவுகளைச் சமனாகும்படி புள்ளியிட்டு சமவருமானச் செலவுக்கோடுகளை வரைய வேண்டும். அதேபோல சுய மாற்றமும் வருமான கிடையச்சில் குறிப்பிடல் வேண்டும்.

உதாரணம் :



* பேரின பொருளாதார சமநிலையைச் காட்டும்போது வெளிப்பாய்ச்சலைக் காட்டும் எதிர்க்கணிய இடைவெட்டினால் ஆரம்பிக்கப்படுமாயின் அதனை சரியாகக் காட்டப்படல் வேண்டும்.

உதாரணம் :



3.2. கற்றல் - கற்பித்தல் செயன்முறை தொடர்பான கருத்துகளும் ஆலோசனைகளும் :

* எண்ணக்கருக்கள் தொடர்பான சரியானதும் நிச்சயமானதுமான அறிவு இருக்க வேண்டியதுடன், எண்ணக்கருக்கள் தொடர்பான பிரயோக ரீதியான பயன்பாடுகளை மேம்படுத்த வேண்டும்.

* பொருளாதார, சமூகக் காரணிகள் தொடர்பாக காலத்துக்குக் காலம் ஏற்படுகின்ற மாற்றங்கள் தொடர்பாக திருப்திகரமான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

* இதற்காக இலங்கை மத்திய வங்கி, குடிசன தொகைமதிப்புத் திணைக்களம், நிதியமைச்சு ஆகிய நிறுவனங்களால் வெளியிடப்படும் அறிக்கைகள், பிரசுரங்கள் என்பவற்றை பரீட்சிப்பதற்கும் பழக்கப்பட வேண்டும். அதேமூலம் அறிவை இற்றை நிலைப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.